# மொட்டும் மலரும் - 2015

## கவிதைத் தொகுப்பு


தொகுப்பு ஆசிரியர்கள்:

சிவநெறிச் செல்வர். **சித்தாந்த ரத்தினம்**

**சு. சிவன்பிள்ளை,** எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்.

கவிஞர் தியாகி **தெ.வே. பகவதிபெருமாள்**



வெளியீடு:

**கலை இலக்கிய மேம்பாட்டு உலகப் பேரவை**

நீதிமன்றச் சாலை, பட்டேல் பில்டிங் மாடி,

நாகர்கோவில்.

அலைபேசி எண் : 9442079005

நூல் தலைப்பு : **மொட்டும் மலரும்**

பொருள் : கவிதைத் தொகுப்பு

மொழி : தமிழ்

பதிப்பு ஆண்டு : 2015

புள்ளி விபரம் : 11

வெளியிட்ட நாள் : 18-08-2015

உரிமை : கலை இலக்கிய மேம்பாட்டு உலகப் பேரவை

தொகுப்பாசிரியர்கள் : **சு. சிவன்பிள்ளை** எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்.
கவிஞர். தியாகி **தெ.வே. பகவதிபெருமாள்**

பதிப்பகம் : கலை இலக்கிய மேம்பாட்டு உலகப் பேரவை

பிரதிகள் : 1000

பக்கங்கள் : 122

நன்கொடை : 100/-

அச்சாக்கம் : நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்
67/1 கோர்ட்ரோடு, நாகர்கோவில்-1.
Ph. : 04652 - 233853

முகப்பு அட்டை
வடிவமைப்பு : ஓவியர் **S. தாணுமூர்த்தி, M.A.**
ஈரோடு.

ISBN No. : 978-93-5174-440-5

# என் உரை

இது
என் உரை அல்ல
ஒரு பொன் உரை
இதோ
உங்கள்
கரங்களில் தவழும்
எங்கள்
கவிதைத் தொகுப்பு
இது
எங்கள்
கன்னி முயற்சி
எங்கள்
எண்ண முதிர்ச்சி
கோப் பெருஞ்சோழன்
பிசிராந்தையார் நட்பு
நம் நட்பு
உங்கள்
முகம் பார்த்ததில்லை
ஆனால்
அகம் கண்டு மகிழ்ச்சி
கவிகேட்டோம்
புவிபுகழ்
கவிகுவித்தீர்!
உங்கட்கு
நன்றி நன்றி

கொங்கு சீமை
கவிஞர்கள்
கொம்புத் தேன்
கவி குவித்தீர்
புதுவைக் கவிஞர்கள்
தாசன் பாரதி தாக்கம்
அதில்
உங்கள் ஊக்கம்
புதுக்கவி யாத்தீர்
மரபுக் கவிதோட்டம்
அதில்
உங்கள் நாட்டம்
கவிமணி பிறந்தமண்
கவிஞர்களை நிறைந்தமண்
வந்ததோ கவிதை மூவிரண்டு
மிக நன்று நன்று
உங்கள் கவிதைகள்
முத்து வைரங்கள்
இல்லை இல்லை
அவை
வைரமுத்துக்கள்
ஆம்
அவை வைரமுத்துக்கள்
நீங்கள் வைரமுத்துக்கள்
எங்கள் வாழ்த்துக்கள்



இவண்
கவிஞர் தியாகி **தெ.வே. பகவதிபெருமாள்,**
மேலாண்மை இயக்குநர்,
கலை இலக்கிய மேம்பாட்டு உலகப் பேரவை,
நாகர்கோவில்.

# உள்ளடக்கம்


| வரிசை எண் | படைப்பாளர் | பக்க எண் |
|---|---|---|
| 1. | கவிஞர் K. கிருஷ்ணன் | 7 |
| 2. | கவிஞர் ப. புவன கிருபாதேவி | 8 |
| 3. | கவிஞர் ப. சக்திகுமார் | 9 |
| 4. | கவிஞர் அ. கனகசபாபதி | 10 |
| 5. | கவிஞர் கருவை வேணு | 11 |
| 6. | கவிஞர் P. ராஜ் பார்த்திபன் | 12 |
| 7. | கவிஞர் ஜே.பி. நீலமலை | 13 |
| 8. | கவிஞர் இர. நாகராஜ் | 14 |
| 9. | கவிஞர் பி. இராமசாமி | 15 |
| 10. | கவிஞர் பி. இராமசாமி | 17 |
| 11. | கவிஞர் பி. இராமசாமி | 19 |
| 12. | கவிஞர் குடியாத்தம் கோபி கண்ணன் | 21 |
| 13. | வள்ளல் நம்பி, கவிஞர் வீ. சௌரி ராஜன் | 23 |
| 14. | மதுரை க. பாண்டியன் | 25 |
| 15. | கவிப்பரிதி க. வேலுச்சாமி | 27 |
| 16. | ராக்கி மகேஷ் | 28 |
| 17. | முனைவர் க. பன்னீர்செல்வம் | 29 |
| 18. | க. பழநிவேல் | 30 |
| 19. | பாவலர் எட்வின் நெல்சன் புரட்டாடோ | 32 |
| 20. | பாவலர் நல்லாசிரியர் வ. விஜயலட்சுமி | 33 |
| 21. | பவித்ரா நந்தகுமார் | 34 |
| 22. | கவிஞர் விக்டர் ருக்கோலாஸ் | 35 |
| 23. | கவிஞர் விக்டர் ருக்கோலாஸ் | 36 |
| 24. | கவிஞர் விக்டர் ருக்கோலாஸ் | 38 |
| 25. | காஞ்சிக் கவிஞர் கா. கலியபெருமாள் | 39 |
| 26. | கவிஞர் வீ. திருமுருகன் | 41 |
| 27. | கவிஞர் வீ. திருமுருகன் | 42 |
| 28. | மு.பா. ஞானசுந்தரி | 43 |

| வரிசை எண் | படைப்பாளர் | பக்க எண் |
|---|---|---|
| 29. | முனைவர் ப. ராஜேந்திரன் | 44 |
| 30. | அகநம்பி (த. பாலசுப்பிரமணியம்) | 46 |
| 31. | எறும்பூர் கை. செல்வகுமார் | 48 |
| 32. | திருமதி. மாலதி அனந்தபத்மநாபன் | 49 |
| 33. | கவிஞர். பிரேமா அம்சவேல் | 51 |
| 34. | அ. ஜோசப் ஸ்டாலின் | 53 |
| 35. | கவிஞர் க. சுகுமாறன் | 55 |
| 36. | கவிஞர் க. சுகுமாறன் | 57 |
| 37. | கவிஞர் க. சுகுமாறன் | 58 |
| 38. | கவிஞர் சி. பா. அய்யப்பன்பிள்ளை | 59 |
| 39. | ஒடுக்கத்தூர் கவிஞர். ந. அரிமர்த்தன பாண்டியன் | 61 |
| 40. | தமிழருவி கோவை கோகுலன் (3-ஆம் பரிசு பெற்றவர்) | 62 |
| 41. | முகில் தினகரன் | 63 |
| 42. | புலவர் வீ. மாரப்பன் | 65 |
| 43. | கே.பி. பத்மநாபன் (2-ஆம் பரிசு பெற்றவர்) | 67 |
| 44. | கவிஞர் க. சிவராசு | 68 |
| 45. | கவிஞர் ஓவியர் மு. பிரகஸ்பதி | 70 |
| 46. | கவிஞர் பீனிக்ஸ் முருகேசன் | 72 |
| 47. | கவிப்பரிதி க. வேலுச்சாமி | 73 |
| 48. | கோவை அன்பு | 74 |
| 49. | தமிழ்ச்சிற்பி கு. பிரமநாயகம் | 75 |
| 50. | புலவர் ஆ. காளியப்பன் | 77 |
| 51. | தடாகம் காசு. குணசேகரன் | 78 |
| 52. | சங்கர் பெருமாள் | 79 |
| 53. | ந. நித்யானந்தபாரதி | 80 |
| 54. | கவிஞர் இரா. தன்மானம் | 82 |
| 55. | கவிஞர் செந்தமிழ்வாணி ச. மல்லிகா | 83 |
| 56. | கவிஞர் வீ. ரூஃபஸ் (முதல் பரிசு பெற்றவர்) | 84 |
| 57. | மைதிலி யோகராஜ் | 85 |

| வரிசை எண் | படைப்பாளர் | பக்க எண் |
| --- | --- | --- |
| 58. | கவிஞர் கொட்டாம்பட்டு ப. சந்திரவேலன் | 86 |
| 59. | மெசி. சதீஸ்குமார் | 87 |
| 60. | புலவர் நல்லாசிரியர் ப. பங்கசம்மாள் | 88 |
| 61. | ந. கருணைச்சாமி | 89 |
| 62. | பாவலர் இரா. கு. அரங்கசாமி க.இ. | 90 |
| 63. | கவியருவி இராம. பரஞ்சோதி | 92 |
| 64. | ஒண்டிப்புதூர் மு. நடராசன் | 93 |
| 65. | சோ.ம. செயராசன் | 95 |
| 66. | டாக்டர். திருக்குறள் கேசவசுப்பையா | 96 |
| 67. | வீ. உதயக்குமாரன் | 97 |
| 68. | பாவலர் தேவகி ஆனந்து | 98 |
| 69. | கூ.ரா. அம்மாசையப்பன் | 99 |
| 70. | ம. தோரணா | 100 |
| 71. | வ.வெ.நா. இராமன் | 103 |
| 72. | தமிழன்பன் ப. முத்துசாமி | 104 |
| 73. | எஸ். கர்ணன் | 106 |
| 74. | த. ராஜா, M.A. | 108 |
| 75. | பொற்காலச்சிற்பி. அப்சரஸ். ஆ. ராஜேந்திரன் | 110 |
| 76. | க. ரவீந்திரன் | 112 |
| 77. | கே. கோபால ரத்தினம் | 113 |
| 78. | வெ. முத்துலிங்கம் | 114 |
| 79. | சி. மாரியப்பன் | 115 |
| 80. | உ. இராமநாதன் | 116 |
| 81. | கு. குமாரசாமி (நக்கீரன்) | 118 |
| 82. | தேவனூர் ஆ.ச. செல்வராசு | 119 |
| 83. | தகடூர்த் தமிழ்க்கதிர் | 120 |
| 84. | புலவர் மு. சிவதாணு | 121 |

# 1 வான்புகழ் வள்ளுவர்

உலகத்து நீதிநூல்கள் ஆயிரம் ஆயிரமாய் குவிந்திருக்க
அத்தனை நூல்களிலும் அற்புதக் குவியலாக
ஓங்கு புகழ் வள்ளுவமே தனித்து சிறப்புடனே நாளும்
வளரும் தமிழினமும் ஓங்கு புகழ் பெறவே
ஒரு நூற்று முப்பத்து மூன்றெனவே அதிகாரம் படைத்து விட்டு
அதிகாரம் ஒன்றுக்குப் பத்தெனவே பிரித்து வைத்தார்
நாளும் புதுப் பொருளை குறள்தான் நமக்குத் தரும்
அறம் பொருள் என இரு இயலை பொதுவாக்கி
இன்பம் என்ற ஒன்று குடும்பத்தின் தலைவி தலைவனுக்கு
உரித்தாக்கிச் சென்ற பெருமை இனி எவர்தான் பெற்றிடுவார்
உலகத்து அறிஞர் பலர் விருப்புடனே படித்திருக்க
ஆழ்ந்த புலமையுடன் அவர் மொழியில் பெயர்த்து விட்டார்
ஓங்கு புகழ் வள்ளுவர்க்கு ஒரு நூற்று முப்பத்து மூன்று
அடியில் சிலை வைத்து மங்காப் புகழ் பெற்றதய்யா
குமரித்திருநாடு எந்நாளும் புகழ் பரப்பும் லெமூரியாக்
கண்டம் பார்த்து உலகுக்கு ஒளிபரப்பும் வள்ளுவம்
புகழ் பரப்பும் அழியாப் புகழுடனே வள்ளுவம் தழைத்திடவே
தேசிய நூலாக்கி அரங்கின் முதலிடத்தில் துணிந்து
சென்று வைத்திடவே நாளும் முனைந்திடுவோம் வாரீர் அன்பர்களே

மகிழ்வுடனே....
**K. கிருஷ்ணன்**
164A - சங்கரன்கோவில் ரோடு,
கழுகுமலை - 628552
போன் : **04632 - 251108**



# எழுவாய் தமிழா! 2

பண்பாட்டின் அரங்கமிது பழமையிலும் புதுமை காணும் பண்பிது
அடுக்கடுக்காய் நீதிநூல்கள் அள்ளக் குறையா அறிவுச் செல்வம்
மேல் கணக்கு பதினெட்டும், கீழ் கணக்குப் பதினெட்டும்
திரண்டிருக்கும் பெருமையால் உலகில் தலை நிமிர்ந்தோம்
மூத்த குடிமக்கள் நாமெனவே தோளுயர்த்தி கூறுகிறோம்
அன்பான குணத்தாலும் பண்புமிளிர் செயலாலே என்றும் உயர்ந்திருந்தோம்
நாடும் புகழும் நலமும் மக்கள் காண உயர்தனிச் செம்
மொழியாம் தமிழைக் கொண்டதனால் உயர்வாய் வீற்றிருந்தோம்
வளைந்தோடும் நதிகளிங்கே அள்ளக் குறையா செல்வக் குவியல் இங்கே
வானுயர் காடுகளில் அருமைமிகு செல்வம் கொழிக்க
உயர்ந்திருக்கும் இந்நாட்டின் மக்கள் என்ற பெருமை மிகும்
உலகுக்குக் கற்பு நெறி கற்பித்தது எங்கள் இனம்
உலகப் பொதுமறையாம் வள்ளுவம் தழைத்திங்கே
எல்லாப் புகழும் குவிந்திருக்க அண்ணல் காந்தியாரும்
அருட்சோதியாய் வள்ளலாரும் அவதரித்த பெருமை மிகு
பண்புகளின் பிறப்பிடமாய் ஒழுக்கச் சீலர்களின் உறைவிடமாம்
பாரதப் பூமியில் பிறந்து விட்ட மகனுக்கு உலகில் தனிப்பெருமை
அன்பு நெறியுடனும் ஆன்மா ஒழுக்கமும் நிறைந்த மக்களாலே
மங்காப் புகழுக்கே உரித்தான பூமி. இது நாளும் உயர்ந்திடவே
நாமும் உழைத்திடுவோம் அன்புநெறியைக் கொண்டு
தீமைகள் அகற்றிடுவோம் மக்களின் பாதுகாப்புக்கு நாமே
துணையாய் நின்று உலகில் உயர்ந்திருப்போம்
உலகிற்கு ஒளியான விவேகானந்தராலே இந்திய
மக்களுக்கு உலகில் தனியிடமாம் புகழுக்கே உறைவிடமாம்



**ப. புவன கிருபாதேவி**
164A - சங்கரன்கோவில் ரோடு,
கழுகுமலை - 628552
போன் : **04632 - 251108**

# 3 நாடு புகழை நாடு

பாரத நாட்டவர்க்கே உயரிய புகழுண்டு மங்காப் புகழும்
குவிந்திடும் அவர்க்கென்றே பாடி வைத்த பாரதியும்
தமிழன் என்று சொல்லிடத் தனிப்பெருமை பொங்கிடுமே
பாடி வைத்த பாட்டனவன் மொழியும் துணையாய் வர
உலகத்து மக்களுக்கு நாகரீகம் கற்றுத் தந்தோம் என்று
தணியாப் புகழ் என்றும் நமக்குச் சூழ்ந்து வரும்
பாரதியாய் பார் அதியாய் நீ எழுந்து வரவே
என்றும் பார்த்திருப்பேன் எழுவாய் தமிழ் மகனே
உலகுக்கு நாகரீகம் முதன் முதலாய் விளைத்த சொல்
மூத்த குடியெனவே தமிழினத்தைப் புகழ்ந்திடுவோர்
வற்றாத கங்கையுடன் காவிரியாள் இணைந்து வர
நாட்டில் குடிநீர் பஞ்சம் சடுதியில் அகன்றிடுமே
ஒன்று பட்டு உழைத்திருக்க உலகோர் வியப்படைய
உயரியப் பண்புகளின் உறைவிடமாய் நாமிருப்போம்
சங்கம் வைத்து மொழி வளர்த்தோம் முச்சங்கம்
கண்டதுடன் பல சங்கம் இன்றும் காண்கின்றோம்
பெருகி வரும் அறிஞர்களால் மொழியும் சிறப்படையும்
தமிழன் புகழ் உலகுக்கே வழிகாட்டுவதுறுதியென
நாடும் இப்புகழை ஈட்டுதற்கே விரைந்து புறப்படுவாய்
அன்புப் பெரியோரே ஆற்றல் மிக்க அன்னையரே
நன்மக்களினை நாட்டுக்களித்த சான்றோரே வணக்கம்
என்றும் உம் ஆசியுடன் நாட்டினை உயர்த்திடுவோம்.



**ப. சக்திக்குமார்**
168 - சங்கரன்கோவில் ரோடு,
கழுகுமலை - 628552
போன் : **04632 - 251108**

**வியவற்க எஞ்ஞான்றும் தன்னை; நயவற்க**
**நன்றி பயவா வினை.** (குறள் - 439)

# "நன்றி பயவா வினை"யை ஏற்றுவாழ்ந்தால் "குறையின்றி கடலளவு புகழ்சேரும்!"

*செல்வமுடன் பலவகையில் தான் உயர்ந்தால்*
*செருக்குடனே தனையுயர்த்தி மதிக்காதே!*
*செல்வமுடன் பணிவென்ற செல்வத்தை*
*சேர்த்துக்கொள்; இமயம்போல் உயர்ந்திடுவீர்!*

*ஆயிரம்தான் நமக்குயர்வு வந்தபோதும்*
*ஐந்தடங்கல் ஆமைபோல அடங்கிவாழு!*
*தீயினைப்போல் சுடுகின்ற நன்மைதரா*
*தீமைதரும் செயலையென்றும் விரும்பாதே!*

*நெல்பயிர்கள் பெருவிளைச்சல் தந்தபோதும்*
*நிமிர்ந்துநின்று தனையுயர்த்தி காட்டவில்லை!*
*நல்லடக்கம் காட்டுதற்கே தலைகுனியும்!*
*நெற்பயிர்போல் நாமிருந்து வாழவேண்டும்!*

*துரியன்போல், ராவணன்போல் நீயென்றும்*
*தனக்குள்ளே கர்வத்தைக் கொள்ளாதே!*
*பரிவில்லா நன்மைதரா செயல்விரும்பி*
*பாதகமாய் செய்யாது விட்டுவிடு!*

*தன்பெருமை பிறரிடத்தில் பேசுவதால்*
*தானென்ற அகங்காரம் வந்துவிடும்!*
*தன்மனதில் ஆணவத்தை வளர்த்துவிடும்!*
*தலைக்கனத்தால் அவமானம் உனைச்சூழும்!*

*நிறைகுடமோ எப்போதும் தளும்பாது!*
*நீயென்றும் அதுபோன்று வாழ்ந்துவிடு!*
*குறள்நெறியைப் பின்பற்றி நடந்துவந்தால்*
*குறையின்றி கடலளவு புகழ்சேரும்!*



கவிஞர் **அ. கனகசபாபதி** எம்.ஏ., பி.எட்.
132 - ஸ்ரீ விநாயகர் நகர்,
துருகம் சாலை, கள்ளக்குறிச்சி,
கள்ளக்குறிச்சி வட்டம் - 606 202.
செல் : **9245556195**

# 5 பிறந்து மீண்டும் வா....!

பசிக்கும் போது சோறும்
படுக்கும் போது நிம்மதியும்
பாதி வழியாய் இப்போது
போய் விட்டதே...

பாழாய்ப்போன நோய்
பசியையும் கொடுப்பதில்லை
படுத்தால் தூக்கமுமில்லை...
பழகிப் போனதே இது...

பஞ்சங்கள் எப்போதெல்லாம்
பயிர்களுக்கு வந்ததோ
பசுமைகளும் அப்போதே
பாடை ஆனதே...

பண்டங்களின் விலையோ
பயமாகி விட்டதாலே
பணத்தைச் செலவழிக்க
பீதியாகியதே....

போதும் இதுவென்று
போக்குக் காட்டினாலும்
பொலி காளைகளாய்த்தான்
பொலி விழந்துள்ளோம்...

பாவிகளாய் எங்களைப்
பரமன் ஏன் தான்
படைத்தானோவென
பட்டினியால் துடிக்கிறோம்...

பட்டியலிட்டே வாழ்க்கை
பாதையைக் கடக்கும்
பரிதாப நிலைமையைப்
பார்க்கவா பிறந்தோம்....

பாசமென்றும் நேசமென்றும்
பச்சோந்தி வேடம் போடும்
பசப்புக்காரர்களின் ஆசை
புண்ணாக்கி விட்டதே...

பசுமை வயல்களின் மேல்
பாசாணங்களைத் தூவும்
பாவிகளின் ஒய்யார
பேச்சினில் மயங்கிவிட்டோம்...

பண்டைப் பெருமைகளை
பாரதத்தில் காத்திட
பாரதப் பிதாவே
பிறந்து மீண்டும் வா...!



**கருவை வேணு**
11, பை பாஸ் ரோடு,
கரூர் - 639 001
அலை : **9843259065**

# வாழ்த்து மடல்

**6**

*கலை இலக்கிய மேம்பாட்டின் உலகப் பேரவையே!*
*தமிழ் வளர்க்க பாடுபட்ட சீத்தலைசாத்தனாரும்*
*தமிழ் தாத்தா உ.வே. சாமிநாதய்யரும்*
*திருக்குறளைத் தந்த திருவள்ளுவரும்*
*கம்பநாட்டரசன் கம்பனும்*
*ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாளும்*
*சுவைத்த தமிழ் இலக்கியத்தைக்*
*குமரியிலே வளர்க்க புறப்பட்டுள்ள*
*தமிழின் இனிய சிகரமே!*
*கலை இலக்கிய மேம்பாட்டு உலகப் பேரவையே!*
*உன்னை வாழ்த்த வயதில்லை*
*வணங்குகிறேன்!*
*ஆங்கில மோகம் கொண்டு அலையும் இந்த உலகில்*
*தமிழ் வளர்க்க புறப்பட்ட தமிழ்ப்படையே!*
*கலை இலக்கிய மேம்பாட்டின் உலகப் பேரவையே!*
*உன் தமிழ்த் தொண்டு சிறக்கட்டும்!*
*பட்டிதொட்டி எல்லாம் பரவட்டும்!*
*பாரதம் முழுவதும் உன் பணிசிறக்க*
*வாழ்த்துகிறேன்! வாழ்க பாரதம்! வாழ்க பாரதி!*
*வாழ்க அவ்வைப்பாட்டி!*

**ஜெய்ஹிந்த்**




கவிஞர் **P. ராஜ் பார்த்திபன்**
நிறுவனர் : ஸ்ரீ அக்ஷயம் சேவா டிரஸ்ட், 23/6A, கோவிந்தன் தெரு, அரிசிப்பாளையம், சேலம் - 636 009.
Cell : **89032 20088, 99407 40736**

# 7 பாரதி! இன்று! வந்தால்!

பாரதி இன்று வந்தால்
பாரதம் பரதமே ஆடும்
பாவையர் பெற்றிடுவர் ஆனந்தம்
பழமைக்குப் பாடை நிச்சயம்
பாப்பாக்களுக்கு மீண்டும் கொண்டாட்டம்
பாட்டிகளுக்குச் சற்று திண்டாட்டம்
பாட்டெழுதுவோர்க்குத் தடுமாற்றம்
பணமுதலைகளுக்கு மனமாற்றம்
இளைஞர்களுக்குக் கரகாட்டம்
இல்லாதோர்க்குக் கவித்தோட்டம்
இந்தியாவுக்கு இனியொரு சுதந்திரம்
இலக்கியத்திற்கு அவனுக்கு நிச்சயமாகும் நோபல் பரிசு
குச்சுப்புடி கும்மியடியாகும்
கதக்களி பாஞ்சாலி சபதமாகும்
வறுமை வளமையைப் பாடும்
வார்த்தைகள் கவிதைகளாய்த் தலைப்பாகை கிரீடம் சூடும்
சிங்கள தீவினுக்கோர் பாலம் நன்கமையும்
வங்கத்திலோடிவரும் நீரின் மிகை
கங்கை காவிரித்திட்டத்திலிணைக்கும்
பாரதமாதா ஆனந்தக் கண்ணீர் பொழிவாள்
மெல்ல இனி சாகுமென்றிருந்த தமிழ்
இனி நிரந்தரமாய் வாழும்
தமிழன்னைக்கு அவன் வருகை
தரணியின் கிரீடத்திற்குச் சரித்திர மகுடமாகும்.


கவிஞர் **நீலமலை ஜே.பி.,**
பிரோஜகர் பங்களா,
பழைய உதகை சாலை, உதகை - 693002.
செல் : **9626861174**




# தமிழென்று சங்கே முழங்கு! 8

கல்லுக் கும்சொல் லுக்குமுன் தோன்றிய
    தமிழென்று சங்கே முழங்கு!
கல்லா தவரைக் கற்கச் செய்யும்
    தமிழென்று சங்கே முழங்கு
வில்லை வளைத்த இராமனைப் போற்றும்
    தமிழென்று சங்கே முழங்கு
பல்லக் கில்பவனி வரும்அழ கான
    தமிழென்று சங்கே முழங்கு
பற்றில் லாத தமிழனி டத்து
    தமிழென்று சங்கே முழங்கு
விற்பனைச் செய்யா தேதமி ழனே
    தமிழென்று சங்கே முழங்கு
கற்பனைக் குபஞ்ச மில்லா மொழி
    தமிழென்று சங்கே முழங்கு
வெற்றி இலக்கியம் இல்லை யென்ற
    தமிழென்று சங்கே முழங்கு
உருகும் வாசகம் திருவா சகம்தந்த
    தமிழென்று சங்கே முழங்கு
பெருமை யான காப்பியம் நிறைந்த
    தமிழென்று சங்கே முழங்கு
கருத்து வளம்தரு கின்ற கருவியே
    தமிழென்று சங்கே முழங்கு
ஆருயிர் மருந்து அழகு மொழியே
    தமிழென்று சங்கே முழங்கு!




கவிஞர். **இர. நாகராஜ்** M.A., M.Ed.
(தமிழாசிரியர்)
க/எண் - 284, வி.சி. காலனி,
பிங்கர்போஸ்ட், உதகை - 643006.
அலைபேசி : 9487341492

# 9 வீரம்மிக்கப் புண்ணியப் பூமி!

படைத்தவனே பிறந்துவிட்டப் பாரதபூமி - நல்ல
பண்புகளில் சிறந்துவிட்ட பாரதபூமி!
அடுத்தவனைக் கெடுத்ததில்லை எங்கள் பாரதபூமி
- செல்வம்
அள்ளிக் கொடுக்க மறந்ததில்லை எங்கள் பாரதபூமி!

காரியக் கண்ணன் கடவுளுமானது துவாரகாப் புரிதனிலே
- எங்கள்
கருநிற இராமன் கருணைக் கொண்டது அயோத்தி நகரினிலே!
அழகு முருகனை அள்ளிக்கொண்டது சரவணப் பொய்கையிலே
- அந்த
அன்புச் சிவமே அரனாய் நின்றது எங்கள் வெள்ளி மலையினிலே!

இப்பெரும்பேர் பெற்றது எங்கள் திருநாடு - இங்கே
இருப்போரும் பிறப்போரும் இதையே நீ பாடு!
"எல்லோரும் ஓரினம்" என்கின்றது - இங்கு
எம்மதமும் சம்மதமென்றே சொல்கின்றது!

இமயம் தொட்டு, குமரிவரைப் பரந்துள்ளது - இங்கு
சமயம் விட்டு சாதிபேதம் பறக்கின்றது!
வெள்ளி மலையே இதற்குத் தலையானது - அது
வெளிநாட்டான் உள்ளே வரத்தடையானது!

ஆறுகள் நிறைந்தோடும் எங்கள் திருநாடு - சண்டைக்கு
யாரோடும் போவதில்லை எங்கள் திருநாடு!
அடுத்தவனை ஒருபோதும் நாங்கள் தொட்டதுமில்லை
- எங்களை
அடித்தவனை சும்மா நாங்கள் விட்டதுமில்லை!

முக்கடலும் பக்கம் வந்து முத்தமிடும் இந்த நாடு - அலைகள்
சத்தம் போட்டு பாடும் பாட்டுக்கு ஏதுயிங்கு ஈடு?
மூன்று அழகான கடற்கரைகள் அமைந்திருக்கும் எங்கநாடு
- இதை
முத்தமிழே நீயே வந்து சங்கம மைத்துப்பாடு!

கலைக்கோயில் பலயிங்கே உயர்ந்துள்ளது - அதைக்
கலைத்திடவே தீவிரவாதிகளின் சதி உருவானது!
காலதாமதமின்றி எமது படை அதைவென்றது!
- அதன் புகழ்
காலத் தாலழியாத சிறந்த கற்சிலையானது!

விஞ்ஞானத்திலும் எமதுத் திறமை வியப்பானது! - அது
விண்ணையும் தாண்டி சந்திரன், செவ்வாயிலும் இடம் தேடுது!
வீரத்திலும் எமது படைபலம் உலகம் போற்றுது! - என்றும்
வெற்றி வாகை சூடிடவே இந்தியா துடிக்கின்றது!!

கவிஞர். **B. இராமசாமி எம்.ஏ.**
(கதை கவிதை நாடகாசிரியர்)
25B, 1-வது தெரு, ஸ்ரீராம் நகர்,
சென்னை - 600 113
செல் : **9444914996**



# 10 அழகுக்கு அழகு!

இங்கே பாருங்கள் மனிதனின் அழகு - நல்ல
பண்போடு எல்லோரும் ஒன்றாகப் பழகு!
கேளுங்கள் உலகத்தில் அவன் அழகு - நல்ல
கேள்வியும் ஞானமும் சிற (இரு) ந்தாலே அழகு!

காலையில் எழுந்து கடவுளை நினைந்து
கடமையைத் தொடர்ந்தால் மனசுக்கு அழகு!
வேர்வையைச் சிந்தி உழைப்பது மழகு - அங்கு
வேறொருவரை இகழ்ந்துப் பேசாமை அழகே!

மனிதனின் குழந்தை மகிழ்ச்சியிலழகு! - என்றும்
மனதில் குழப்பமில்லாமை அழகு! - கொடுத்து
கொடுத்து வாழ்ந்தால் வாழ்க்கையிலழகு! - அதைத்
தடுப்பதிலில்லை மனிதனுக்கு அழகு!

சிரிப்பு மனிதனின் சிறப்பின் அழகு! - அறிவில்
சிறப்பது தானே அவனுக்கு அழகு!
விளைந்தது எல்லாம் நாட்டுக்கு அழகு - என்றும்
வளைந்துக் கொடுப்பதும் அழகுக்கு அழகே!

கடமையைச் செய்து களிப்பது மழகு - நாட்டை
கட்டிக்காப்பதும் அதனினும ழகே
சட்டத்தை மதிப்பது சங்கத்தின ழகு - சட்டசபையிலே
சட்டையைக் கிழிப்பதிலில்லை அழகு!

கவிக்குயில் போலே பாடுதலழகு! - என்றெங்கும்
கண்ணுக் கெளிதாய் காண்பது மழகே!
சான்றோரைக் கண்டால் வணங்குதலழகு - வாழ்வில்
சந்தேகமின்றி வாழ்வதும் அழகுக்கு அழகே!

நாட்டிய மேடை நாட்டுக்கு அழகே
நால்வகை குணமும் நங்கையர்க்கு அழகு
போட்டிப் போடுமிந்த கவிஞனினழகு - அங்கு
பொறாமையில்லா மலிருந்தால் அதைவிட அழகு

கலைகளை வளர்ப்பது மனிதனின் அழகு - கொண்ட
கடமையைச் செய்து முடிப்பதுமழகே!
கணக்கிலடங்கா கலைகளின் அழகு - என்றும்
காண்போரை ரசிக்கச் செய்வது மழகே!

மனிதனை மனிதன் மதிப்பதுமழகே - என்றும்
மாற்றான் மனைவியை நோக்காமை அழகு!
மானிடப் பண்பு கெடாமை அழகு - அங்க
மானமே போனா இறப்பது மழகே!



கவிஞர். **B. இராமசாமி எம்.ஏ.**

# 11 விடிவு காலம் தான் எப்போது?

*சத்தற்ற சமுதாயத்தில் உயிர்மூச்சாம் வரதட்சணையால் வாடும் வண்ண இளம் மலர்களுக்கு நல்வாழ்வளிக்க வரும் அந்த விடிவுகாலம் தான் எப்போது?*

*பட்டங்கள் பட்டமாகிப் பறக்காமல், நல்ல பதவி தந்து இளைஞர்களைப் பாதுகாத்து, அதனால் பெற்றவர்களும் மற்றவர்களும் பெருமை கொள்ளவரும் அந்த விடிவுகாலம் தான் எப்போது?*

*வேலையற்ற வீணர்களின் வேதனையைப் போக்கி, அவன் வீட்டில் சிரிப்பும் சிங்காரமும் சேர்ந்து வரும் அந்த விடிவுகாலம் தான் எப்போது?*

*குடியால் குடி மூழ்கிப் போனவன் குடும்பத்திற்கும் குதூகலம் கிடைத்துக் கொண்டாட வரும் அந்த விடிவுகாலம் தான் எப்போது?*

*இலஞ்சத்தை இலட்சியமாக்கி, குற்றத்தைக் குறிக்கோளாக்கி, நம் குடியாட்சியில் குடிகொண்டிருக்கும் கொடும் பாவியைக் குழித்தோண்டி புதைக்கவரும் அந்த விடிவு காலம்தான் எப்போது?*

*வறுமையும், வன்முறையும், வேலைநிறுத்தங்களுமின்றி அரசு வாகனங்களை மட்டும் எரித்து, கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஆட்களைக் கடத்தி பணம் பறிப்புமில்லாமல் நாம் நலமாக வாடி வகைசெய்யும் அந்த விடிவுகாலம் தான் எப்போது?*

*அருகும் ஆபாசம் அருகாமலும், பெருகும் ஆன்மீகம் பெருகாமலும், இருளின் இக்கட்டில் சிக்குண்டு, பெருகும்*

பொருளினால் பேரின்பம் கண்டு, சிதைந்துப்போக இச்சமுதாயத்திற்குச் சிறப்பை ஏற்படுத்தித்தர வல்ல அந்த விடிவுகாலம் தான் எப்போது?

திறந்த மேனியோடுப் பிறந்தவனைச் சிறந்த மேனியென்று வர்ணித்து, நவ நாகரீக நங்கைபால் பாழடைந்த சிற்றின்ப மனிதர்களைச் சீர்படுத்தவரும் அந்த விடிவுகாலம் தான் எப்போது?

இரவுபகல் பாராமல், பாரத்தைத் தலையிலே சுமந்து மனதிலே பெரிய பாரத்துடன், பிளாட்பாரங்களில் படுத்துறங்கும் பாமர மக்களுக்கு நல்வாழ்வு பெற்றுத்தர வல்ல அந்த விடிவுகாலம் தான் எப்போது?

மனிதருள் மாணிக்கமாம் மகாத்மா, மாமா நேரு மற்றும் தமிழ்நாட்டு தன்னலமற்றத் தலைவர் கர்மவீரர் காமராஜர் போன்ற தியாகிகள் மீண்டும் இம்மண்ணில் பிறந்து நற்சேவை செய்யவரும் அந்த விடிவுகாலம் தான் எப்போது?

விடியும்! என்றொருநாள் விடியுமென்றே விழித்திருக்கிறேன்! விடியட்டும்! விடிந்தால் விரைந்தோடி வந்து விவரமாகச் சொல்கிறேன். அதுவரை விழித்திருங்கள் நண்பர்களே! கவிஞர்களே!!

கவிஞர். **B. இராமசாமி** எம்.ஏ.



# 12 கவிஞன் கதை

வாணிமா நகரில் அறுபத்தி இரண்டில் பிறந்தானம்மா!
கோபால் என்றும் ஜெயலட்சுமி என்றும் பெற்றோரம்மா!
பத்து வயதில் படித்ததெல்லாம் கோகுலமும்
முத்துகாமிக்சும் முயலும் தானம்மா?
கல்கண்டு படித்து தமிழ்வாணன் போல கதையும்
கண்ணதாசன் மேல் வெறிகண்டு கவிதையும்
நாகமலை இதழும், முரசு இதழும் இவன் படைப்பு வந்தது?
கல்லூரி நாட்களிலே 'தூரிகை' கையெழுத்து பிரதி
நூலகத்திலே பொழுதைக் கழித்தும் நூல்களிலே
புழுவாயும் நெளிந்து திரிந் தானம்மா?
கட்சிகள் பல உழன்று, மன்றம் பல திரிந்தும்
ஊருக்கே மாணவர்க்கு உதவி திரிந்தானம்மா?
இரக்கமற்ற உலகினிலே மனதில் ஈரமுடன்
வியாபாரம் இறங்கி அல்லல் பட்டானம்மா?
திருமணாகி பிள்ளைகள் இரண்டு பெற்றும்
அறிவின்றி இரங்கி வம்பை பெற்றானம்மா?
ஆட்சியர் ஆக ஆசைப்பட்டான் முடியலை!
போலிஸ் ஆக முயற்சித்தான் தேறலை!
வக்கில் ஆக முடிவும் செய்தான், வெற்றியில்லை!
எழுத்தாளர் ஆக விரும்பினான் கூடவில்லை!
ஆனாலும் பத்திர எழுத்தாளராகி விட்டான்!

மக்கள் இவன் எழுத்துகளைப் பத்திரம் செய்ய
ஆண்டவனும் வழிவிட்டான் நடந்தது!
பெருமாள் பக்தியாலே இணை கிடைத்தது!
இப்போ நாளும் நல்லா யோசனை செய்து
கவிஞரானான் மக்களிடம் மதிப்பு வந்தது!
தமிழ் சுற்றமும், உலகத் தமிழ் வளர்ச்சி மன்றமும்,
நாடக நடிகர் சங்கமும், காமராஜர் மன்றமும்,
பத்திர எழுத்தர் சங்கமும், ஜனதா தளமும், தமிழர் உலகமும்
இவன் தலைமை ஏற்றதுண்டு!
யூனிவர்சிட்டி ஜெருசலேம் டாக்டர் பட்டம்
வழங்க கனிவுடனே வரவேற்றதய்யா!




கவிஞர் குடியாத்தம் **கோபி கண்ணன்**
57A, வ.உ.சி.தெரு, வள்ளலார் நகர்,
குடியாத்தம் - 632 602,
வேலூர் மாவட்டம்.

# 13 பொதுவுடைமை கதிரவன் புகழ் போற்றுவோமே!

குடும்பசுகம் துறந்துமே குருதி சிந்தி
    கொடுஞ்சிறை வாசமும் அடைந்து வெந்து
கடும்பாதை கடந்துமே கடமை யாற்ற
    கனிவுமிகு பட்டம்பிள்ளை ஈன்ற மைந்தன்
தடம்மாறி செல்லாமல் தன்மானம் காக்க
    தண்டமிழ் இலக்கியம் தான்கற் றுணர்த்தி
உடன்படாத இயக்கமதை உத்தமர் நடத்திய
    உருவத்தின் உறுப்பாகி உணர்ந் துழைத்தோன்

அன்னியன் ஆடைதனை அனலிலே எரித்து
    அன்றுமுதல் கதர்துணியை அணிந்து மகிழ்ந்து
அன்னையார் மறைந்தஅன்று அணிந்திட அளித்த
    ஆலைவிளைந்த ஆடைதனை அணிய மறுத்துமே
புண்ணியம்நிறை தாயாருக்கு கொள்ளி வைக்காமல்
    பொதிந்திருந்த கொள்கைதனில் உறுதி காத்தோன்
கண்ணியம் சிறிதும்குன்றாத காந்தியப் பாதையில்
    கனிவுமிகு செயலதனால் காலத்தை வென்றோன்

அடித்தட்டு மக்களின் அல்லலைக் களைய
    அரும்பாடு பட்டுழைத்து அகம் நிறைந்து
சூடியபெயர் மூக்காண்டி சொரிமுத்து மாற்றி
    சிந்தைதனில் ஒளிர்ந்தெழுந்த ஜீவானந்த மானோன்
மடல்விட்டு பூமலர்ந்து மணந்த ஆசிரமம்
    மகாத்மா காந்திஜீயின் மனதை ஈர்த்ததே!
படர்ந்த புவியில் சொத்துமக்கு பாரத மக்களா?
    பாரத சொத்தே நீதானென பகர்ந்தாரே மகாத்மா!

சுயமரியாதை இயக்கத்தில் சோர்விலா உழைப்பால்
சிந்தனையாளர் பெரியார் தொண்டனாய் இணைந்து
சுயமைதனை வேரறுக்க காரியம் ஆற்றி
களத்தில்வெற்றி கண்டதனை காட்டுமே வையகம்
தயையில்லாத வெள்ளையன் தடைவிதித்தானே பேசிட!
தனிமைச்சிறை வாசத்தாலே தனது மனமுருகி
பெய்யாத மழைமேகத்தின் புவியிருளைப் போக்கிட
புலர்ந்தெழுந்த ஜீவானந்தம் பொதுவுடமை கதிரவன்


வள்ளல் நம்பி, கவிஞர் **வீ. சௌரிராஜன்**
4 - அபிராமி நகர், கற்பகம் நகர் 4-வது சாலை,
திட்டை - அஞ்சல், சீர்காழி - வட்டம்
தென்பாதி - 609 111.
9787974527




# 14 சபலங்கள்!

இந்தியாவே
எங்களுடைய தேனும்
இறுமாப்பில்
தெருவுக்குத் தெரு
கொடி ஏற்றி - இனிப்பு வழங்கி
நிர்வாணமாய் திரிவோரில்
நிறைய பேர் தேர்தலில் நிற்கிறார்கள்!
நாற்காலியில் உட்காருவதற்காக!

மனிதர்களில்
நல்லவர்கள் யார் கெட்டவர்கள் யார் - என்பதெல்லாம்
நாற்காலிக்கு நன்றாகத் தெரியும்!

நாற்காலி நிரந்தரமானது
ஆனால்
அதில்
அமர்கின்றவர்கள் தான்
தற்காலிகமானவர்கள்!

நாட்டில்
நாற்காலி பிடிக்காத எத்தகையோ
நல்லவர்கள்
இருந்திருக்கிறார்கள்!

நாற்காலியை
அடைய நினைக்கின்ற நினைப்பிலேயே
மனிதர்களின் பாதி ஆயுள்
முடிந்துவிடுகிறது!
மீதிநாட்கள் அதன்மீது
சாய்ந்தமர்ந்து

தூங்க மட்டுமே செய்யமுடியும்!
வாலிப உள்ளங்களில்
காதல் அரும்புவதை
எப்படித்தடுக்க முடியாதோ
அதனைப்போல்
நாற்காலி மீது ஆசைகொண்ட
நெஞ்சங்களை அடக்கமுடியாது!

பூமி
எப்போதும் பூமியாகவே
இருப்பதைப்போல்
நாற்காலி எப்போதும்
நாற்காலிதான்!

பூமி
யாருக்கும் எப்போதும்
சொந்தமில்லையோ
அதனைப்போல்
நாற்காலி யாருக்கும்
சொந்தமில்லை!

கரையுடன் மோதி மோதி
நுரை தள்ளி சாகும் அலைகள்போல்
மனிதர்கள் அதன் மேலுள்ள
சபலத்தினால்
மண்டையை உடைத்துக்கொண்டு
மண்டையைப் போடுவதும் ஏன்?



மதுரை **க. பாண்டியன்,**
1C, ராக்கப்ப கோனார் சந்து,
கொத்தாலத் தெரு, அயன் பாப்பாக்குடி,
அவனியாபுரம், மதுரை - 625 102.
செல் : **9245571522**

# 15 நான் கண்ட பாரதியார்

முக்கனியில் சாறெடுத்து முழுமதியால் கவி படைத்து
முப்பாலும் தப்பாமல் தமிழ் வளர்க்கும் தமிழ் நெஞ்சங்களே
தேன் தமிழ் கவிதையினை வடிக்கும் கவிஞனவன்
அன்னைத்தமிழில் அழகாகக் கவிவடித்து
மண்ணை மணக்கச் செய்த மாணிக்கக் கவிஞனவன்
இமயம் முதல் குமரி வரை மக்கள் நெஞ்சங்களில்
சுதந்திரக்கனல் வித்தினை விதைத்தவனாம்
எட்டாக்கனியாக இருந்த விடுதலையை
பட்டி தொட்டி எல்லாம் அவன் கவிதையைப் பரப்பியவன்
எட்டையபுரத்திலே எழுச்சி கண்ட சிங்கத்தமிழன்
ஆங்கில ஆட்சியால் தலைகுனிந்த தமிழகத்தில்
காரிருளைப் போக்க வந்தக் கதிரவன் பாரதியார்
அஞ்சி அஞ்சி வாழ்ந்த தமிழர்கள் வெள்ளையன் ஆட்சியால்
வஞ்சகரின் சூழ்ச்சியை எதிர்த்து நின்றவன்
அருமைத்தாய் நாட்டிற்கும், தமிழுக்கும்
இப்போதே விடுதலைவேண்டுமென்று கூறியவன்
இடியென முழங்கி இளைஞர்களைத் தட்டி எழுப்பி
இந்தியரின் துயரினைப் போக்கியவன்
அண்ணல் வழியில் நின்று அகிம்சை நெறியில்
அன்னை பூமியில் அன்னியனை விரட்டியவன்
அன்னை வழியில் நின்று அகிம்சை நெறியில்
அன்னை பூமியில் அன்னியனை விரட்டியவன்
கலங்கரை விளக்காய்க் கரைகாட்டி நிற்பவன்
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று பாடியவன்
கொஞ்சுகின்ற குயில் பாட்டும், கண்ணன் பாட்டும்
விஞ்சுகின்ற பாஞ்சாலிக் கதையையும் எழுதிய
முண்டாசு முறுக்கு மீசைக் கவிஞனவன்
முப்பது கோடி மக்களும் வீழ்வோம் என்றான்
மீண்டும் நீ தமிழகத்தில் பிறக்கவேண்டும்
ஊரறிய, உலகறிய வந்த உத்தமனே நீ வாழ்க!




கவிப்பரிதி. **க. வேலுசாமி**
151, அன்னை இல்லம், கழுகரை,
மடத்துக்குளம் அஞ்சல் (வட்டம்) 642113, திருப்பூர் மாவட்டம்.
செல் : **7598016477**

# நீ.......

16

புரியலையா... மனுஷா

புரியலையா...

உலகம்நிரந்தரமில்லைன்னு

உனக்குப் புரியலையா...

ஏற்றத்தாழ்வே இல்லாமல்

எல்லோருக்கும் ஒரு நாள் உண்டென்று... (புரியலையா)

செய்யறவேலைக்கு

சம்பளம் வாங்குற நீய்யி...

லஞ்சம் எதுக்கு செய்ற நீய்யி...

பொய்யி எதுக்கு பேசுற

கௌரவபிச்சை எதுக்கு எடுக்குற (புரியலையா)

யாருக்கு யாரு இருந்தாலும்

நிரந்தரமில்லையடா மனுஷா...

...மரணம் மெய்யடா இதுல

மாற்று கருத்து இல்லையடா இதை

மனஷல நெனச்சி நடந்தா

சந்தோஷ வாழ்க்கையடா... இதுல

சந்தேகமே இல்லையடா... (புரியலையா)



**RAKKI MAHESH**
Short Film Director
Tamil Nadu Police
Cell : **9842271609, 94988171666**

# 17 எங்கே இருக்கிறோம்?

நாம் எங்கே இருக்கிறோம்
இந்தியாவிலா?
இந்தியா - சோசலிச ஜனநாயக நாடு
இங்கு சோசலிச ஜனநாயகம்
ஏதேனும் உண்டா?
வறுமைக் கோட்டுக்குக் கீழ்
எங்கள் ஊர் கூலித் தொழிலாளி
அரசு சலுகைக்கு வேண்டும் இருப்பிடச்சான்று
அதற்குச் செலவு ஆறாயிரம் ரூபாய்
விழிப்புணர்வும் எழுத்தறிவும்
எழுபது சதவிதம் உள்ள இந்தியாவில்தான்
17 மாடிக் கட்டிடம் ஒருபுறம்
17 அங்குலமும் இல்லாமல்
உடம்பைச் சுருட்டி உறங்கும் ஏழை ஒருபுறம்.
பக்தகோடிகள் மழை வருவிக்க
யாகக் குண்டத்தில் 108 கிண்ண நெய்
பாத கோடிகளுக்கு 108 பிச்சைப் பாத்திரம்
அரசு நிறுவனமொன்றில் தணிக்கை செய்ய
அலுவலர்க்கு ஆயிரம் ரூபாய்
அடித்தட்ட மக்கள் செத்தாலும் - இங்கு
ஆளில்லை கேட்க
உண்ணும் உணவைத் தட்டிப் பறித்து
ஊதாரிக்குத் தருவதாய்,
உழும் நிலங்களைத் தாரை வார்த்து
உழவர் தம்மை அடிமையாக்குவதோ?
மக்களாட்சியில் இருக்கிறோம் இன்னும்
மக்களாய் இருப்போம் மறவோம் நாமே
விண்ணை முட்டும் வீதியைக் கடப்போம்
கண்ணை முட்டும் குடிசை மறப்போம்.
தொழில்வளம் சொல்லி செல்போன் குப்பைகள்
தொண்வளம் தொலைந்தது அறியாமையினால்.



முனைவர் **க. பன்னீர் செல்வம்**
'தாமரை இல்லம்', 203/45, 13-வது குறுக்குத்தொரு,
த.வீ.வ.வா. பகுதி-1, ஆற்காடு 632503, வே.மா.
கைப்பேசி : **9443968692**

# ஏன் பெண்ணே அழகாய் பிறந்தாய்? 18

கண்ணில் கபடம் ஆண்கள் மத்தியில்,
பெண்ணைப் பொருளாய்த் துய்க்கும் உலகில்,
அழகை ஆராதிக்கத் தெரியா நாட்டில்,
எதற்கும் பெண்ணைப் பொறுப்பாக்கும் மண்ணிலே! - ஏன்

ஆடை அணிவதில் சொற்களை ஆள்வர்.
நடையிலும் காரணம் கண்டுரைப்பர்.
பேச்சில் நளினம் எதிர்நோக்கி இருப்பர்.
பெண்ணில் மனசொன்று இருப்பதை மறுப்பர். - ஏன்

அறிவார்ந்த சமூகம் என்பது பேச்சில்.
அறமறிந்த ஞானம் உள்ளது எழுத்தில்.
நாகரீகம் பகட்டும் நயமிகு உடையில்.
பெண்ணறிவு பெருமை கண்டு ஏனோ முறைப்பர்! - ஏன்

பெண்ணடிமை போனதென்று பாட்டு கூறி,
ஆண்டுகளோ நூறாச்சி!
வேறு வேறு ஆடைபட்டி வந்ததிங்கு,
வேதாளமாய் ஆட்டம் ஆடி! - ஏன்

எனது உடல் எனது உரிமை
என்று சொல்லும் உரிமை இருந்தும்,
பழமை வாதம் போக்கினிலே
பயங்கரங்கள் நேர்வது ஏனோ! - ஏன்

*அடங்கிப்போக பெண்ணென்ன ஆட்டுமந்தையா!*
*அடக்கிவைக்க ஆணென்ன சிங்கக் கூட்டமா!*
*உடலிச்சை இருவர்க்கும் பொதுவல்லவா! - இதில்*
*உள்ளமுண்டு என்பதை இங்கு உரக்கப் பாடவா?! - ஏன்*

*கற்பு என்றால் ஆணை மட்டும்விட்டு விடுவதா!*
*கறுப்பு திரைபோட்டு மூடி மறைப்பதா!*
*வெட்கம் அது ஆணுக்கும் வேண்டுமல்லவா!*
*வெள்ளைத்திரையிட்டு வீரம் என்பதா! - ஏன்*

*நித்தம் நிர்பயாக்கள் நிலவும் நிலவுலகில்,*
*சத்தம் வேண்டும் இங்கு சமூகம் விழிப்பதற்கு!*
*ஆதிக்க மனோபாவம் ஆடவரை அகல வேண்டி,*
*சாதிக்க பிறந்தவள் சிறகடித்துப் பறப்பதற்கு! - ஏன்*

**க. பழநிவேல், B.Sc., M.A., B.Ed.,**
பட்டதாரி ஆசிரியர்
29, நபிஷா நகர்,
வேலூர் பிரதான சாலை
ஆற்காடு - 632503, வே.மா.
செல் : 9840969106



# மேம்பாட்டுத் தென்றல்

19

கலை இலக்கிய மேம்பாட்டுத் தென்றல்
வீசட்டும் புவனமெங்கும் அரியதோர் பொற்காலம்
புலரட்டும் காணுமெங்கும் அன்புமணம் கமழ்ந்து
மாந்தர் சிறந்திட அறத்தனில் மனிதம்

வானமாய் விரிந்திட அறியாமை நீங்கி
கல்லாமை அகன்றிட அமைதி மலர்ந்துலகில்
மாந்தம் ஓங்கிட அறம் அன்பு தரணியெங்கும்
தழைத்திட புதியதோர் கலை இலக்கிய

மேம்பாட்டுத் தென்றல் வீசட்டும் புவனமெங்கும்
திருட்டும் புரட்டும் மண்டுமாசும் மறைந்திட
இல்லாமை இல்லாதுபோக பசுமை கொழிந்திட
எல்லைகள் அகன்று வையமெங்கும் இணைந்திட

தொல்லை இலாநல் வாழ்வு வாழ்ந்திட
எல்லோரும் சமமெனும் சமத்துவம் மலர்ந்திட
குவலயம் தூயதாகில் புகழ்வெற்றி கொண்டாட
கலை இலக்கிய மேம்பாட்டு தென்றல்

வீசட்டும் புவனமெங்கும் வசந்தம் வரட்டும்
நடுநிலைப் பிறழாத உள்ளம் கொண்டு
களங்கம் விரும்பாத நெஞ்சம் உடையராய்
எண்ணத்தில் செயலில் தூய்மைப் பேணி

திருப்புமுனை ஏற்படுத்தும் தென்றல் வீசட்டும்
அறநெறி காத்து அருள்நெறி காத்து
வன்மைகள் அகல நன்மைகள் பெருக
இன்னல்கள் பறந்தோட புதியதோர் கலை
இலக்கிய மேம்பாட்டுத் தென்றல் வீசட்டும்.



**EDWIN NELSON FURTADO**
"JUDE VILLA", 2nd Stage,
Viveknagar, Bangalore - 560 047.
Mob : **7760153152**, Tel : **080 - 25713594**

# 20 செம்பொருள் காண்பது அறிவு

1) மொழிகளில் மூத்தமொழி நந்தமிழே என்று
வழிவழியாய்ச் சொல்வ தறிவு.

2) அழிந்திடுமோ நந்தமிழும் ஐயத்தை நீக்கி
அழியாமல் காப்ப தறிவு.

3) தாய்மொழிக் கல்வியினைத் தள்ளாமல் பன்மொழியும்
ஆய்ந்துலகை ஆள்வ தறிவு.

4) நற்றமிழின் நன்னூல்கள் மாற்றுமொழி சோதரரும்
கற்றிடச் செய்த லறிவு.

5) வேற்றுமொழி நூல்களையும் வேறுபாடில் லாமலே
மாற்றித் தருவ தறிவு.

6) மண்மீது மாற்றங்கள் காலத்தால் வந்தாலும்
பண்பாடு காத்த லறிவு.

7) ஆயிரமாய் வாக்குறுதி அள்ளியே தந்தாலும்
தீயினத்தை நீங்க லறிவு.

8) சாதி மத வேறுபா டெண்ணாமல் சான்றோன்
நீதிமொழி கேட்ட லறிவு.

9) திருவுடையோர் என்றாலும் தீநெறியோர் தள்ளி
அருளுடையோர் சேர்த லறிவு.

10) பெண்ணினத்தைப் பேதையராய் எண்ணாமல் மாந்தர்தம்
கண்போலக் காத்த லறிவு.

11) மெய்ஞ்ஞானக் கொள்கையென மேலோர் உரைத்தவற்றில்
விஞ்ஞானம் காண்ப தறிவு.

12) செம்புலத்து நீர்போலச் சேரிடத்தால் மாறாமல்
செம்பொருள் காண்ப தறிவு.



பாவலர் நல்லாசிரியர் **வ. விஜயலட்சுமி**
72, மூன்றாவது தெரு, டாக்டர் புரட்சித்தலைவிநகர்,
தருமாபுரி, புதுச்சேரி. 605 009.
செல்: 9894629622.

# பாட்டி சொன்ன கதைகள் 21

வழக்கொழிந்த மொழி போல
அவசர சிகிச்சை பிரிவில்
பெருமூச்சு வாங்கியபடி இருக்கிறது.
பாட்டி சொன்ன கதைகள்
கதை சொன்ன பாட்டிகளும் வீட்டில் இல்லை
கதை கேட்க மழலைகளுக்கும் நேரமில்லை
அளவற்ற கோணங்களில்
எங்கள் பாட்டி சொன்ன கதைகள்
அற்புத கனவுகளைப் போல்
மூளைக்குள் தேங்கி
குளிர்வித்தபடியே இருக்கிறது
பாட்டி சொன்ன கதைகள் என்பது...
சுருக்கப்பட்டவையாக இருந்தது
உருமாற்றப்பட்டவையாக இருந்தது
மகிழ்விப்பவையாக இருந்தது
பிம்பங்களை உடைத்தெறியும் கருவியாய் இருந்தது
வலுவான பிணைப்பு உருவாக்கியாய் இருந்தது
பசி தீர்த்த வேட்கையாய் இருந்தது
கற்பிதங்களை துவம்சிப்பதாய் இருந்தது
நம்பிக்கை வறட்சியைத் தகர்ப்பதாய் இருந்தது
மொத்தத்தில் பாட்டி சொன்ன
பொய்கள் கூடி
கொண்டாடத் தகுந்தவையாக இருந்தது



**- பவித்ரா நந்தகுமார்,**
20/36, வெற்றிலைக்கார தெரு,
ஆரணிபாளையம், ஆரணி - 632301.
செல் : **9442378043**

# 22 அன்பின் வழியே

| | | | |
|---|---|---|---|
| அன்பின் | வழியே | ஆசைப் | பிறக்கும்! |
| ஆசையின் | வழியே | ஆணவம் | பிறக்கும்! |
| அனுபவம் | வழியே | ஆற்றல் | பிறக்கும்! |
| ஆழியின் | வழியே | அலைகள் | பிறக்கும்! |
| இசையின் | வழியே | இன்பம் | பிறக்கும்! |
| ஈதலின் | வழியே | இனிமை | பிறக்கும்! |
| உணர்ச்சிகள் | வழியே | காதல் | பிறக்கும்! |
| உதடுகள் | வழியே | உண்மை | பிறக்கும்! |
| எழுச்சியின் | வழியே | ஏற்றம் | பிறக்கும்! |
| ஏற்றத்தின் | வழியே | மாற்றம் | பிறக்கும்! |
| ஒற்றுமை | வழியே | உறவுகள் | பிறக்கும்! |
| ஓசையின் | வழியே | ஒலிநயம் | பிறக்கும்! |
| கண்களின் | வழியே | காட்சிகள் | பிறக்கும்! |
| கருத்தின் | வழியே | காவியம் | பிறக்கும்! |
| கற்பனை | வழியே | கவிதைகள் | பிறக்கும்! |
| கைகளின் | வழியே | கருணை | பிறக்கும்! |
| கூடல் | வழியே | குழவிகள் | பிறக்கும்! |
| நட்பின் | வழியே | நல்லவை | பிறக்கும்! |
| நடனம் | வழியே | நளினம் | பிறக்கும்! |
| நேசம் | வழியே | பாசம் | பிறக்கும்! |
| நேர்மை | வழியே | நாணயம் | பிறக்கும்! |
| முகிலின் | வழியே | மழையும் | பிறக்கும்! |
| சினத்தின் | வழியே | சண்டை | பிறக்கும்! |
| சோகத்தின் | வழியே | சுமைகள் | பிறக்கும்! |
| தாகத்தின் | வழியே | தவிப்பும் | பிறக்கும்! |
| பணத்தின் | வழியே | பகைமை | பிறக்கும்! |
| புரட்சியின் | வழியே | புத்தொளி | பிறக்கும்! |
| கடவுளின் | வழியே | காருணியம் | பிறக்கும்! |

கவிஞர். **விக்டர் ருக்கோலாஸ் M.A**
12, இரண்டாவது தெரு, விக்டோரியா நகர்,
புதுச்சேரி - 605005
அ.பே: **8015429152**



# கள்ளிப்பால்

23

உந்தன் மகிழ்விற்காய் உருவாக்கிக் கருவினிலே
எந்தன் வருகையை எதிர்பார்த்துக் களிக்கையிலே
வந்துன் மடியினில் வளம்பெற நினைக்கையில்
எந்தன் வாயினில் ஏனம்மா கள்ளிப்பால்!
தாய்ப்பால் மார்பினில் தேனாய்ச் சுவைத்திட
சேய்நான் மகிழ்வால் சிரித்துனை நோக்கிட
பாலாடைச் சங்கில் பாட்டியும் கள்ளிப்பால்
நான்வாடி மடிந்திடவே நாவிலே வைத்தாளே!
பல்லாசைக் கனவுடனே பாரினிலே வந்தேனே
பொல்லாத மனமுனக்கு பொங்கியேன் வந்ததம்மா?
வெள்ளைப்பால் என்று நான் வெகுளியாய் நினைக்கையில்
கள்ளிப்பால் கொடுத்திடவே கல்மனம் வந்ததெப்படி?
பெண்ணென்றால் பெருமையாகப் பேசுகிறார் மேடையிலே!
பெண்ணென்றால் தெய்வமெனப் போற்றுகிறார் கூட்டத்திலே
பெண்ணின்றி உலகேது பெரியோர்கள் சொல்வதுவே!
பெண்ணாக நான்வந்துப் பெற்றேனே கள்ளிப்பால்!
பெண்ணுக்குப் பெண்ணே நீ பெருந்தவறு செய்தாயே
மண்ணதில் நான்வாழ மனதுனக்கு இல்லையே!
விண்ணுக்குச் சென்றவளும் வீணைக்கை பெற்றவளும்
பெண்தானே தாயே நீ பேதமது கொண்டதேனோ?
ஆண்டுக்கு நாளொன்று ஆர்ப்பாட்டம் செய்கிறார்

மாண்டிட்ட, பெண்திலகம் மறந்ததைப் பொய்யாக
வேண்டுகிறார் சுதந்திரம் வையத்தில் உயர்வாக!
தாண்டிட்டோம் தடைகளென தாவிக் குதிக்கின்றான்!
உந்தன் தாயவள் உனையழித் திருந்தாலே
மங்கலமாய் மனையமர்ந்து மனைவியாகி இருப்பாயோ?
அழிக்கும் பொறுப்பினை அழித்தவனும் காலனோ?
அஞ்சாவது பெண்கூட அரசாளும் அறிவாயோ?
ஆசைதனை அடக்கினால் அடிவயிறு பெருக்காதே!
பேதமதுக் கொள்ளாதே பெண்மகவை, அழிக்காதே
நீதியது இல்லையம்மா நிச்சயமாய்க் கேடுவரும்
மோசமான கொள்கையிது முழுவதுமாய் மறந்துவிடு



கவிஞர். **விக்டர் ருக்கோலாஸ், M.A**
12, இரண்டாவது தெரு, விக்டோரியா நகர்,
புதுச்சேரி - 605005
அ.பே : **8015429152**

# வாழ்வு செழிக்கும்

24

பெண்கள் என்றொரு பிறவியை இறைவன்
மண்ணுக் களித்து மகிழ்வினைத் தந்தான்!
பெண்ணவள் உலகதுப் பெருகிட துணையாகி
தன்னவனைக் காக்கும் தாரமாகி ஒளிர்கிறாள்!

ஒளிரும் பொன்னது ஒப்புயர் வந்து
மிளிரும் எழிலினை மிகையாய்த் தந்து
அணியும் மங்கையரை அழகுறவே செய்தவர்க்கு
தணியாத தாகத்தைத் தந்திடும் உண்மையே!

உண்மை ஒன்றினை உயர்வாய் நினைத்து
தன்னைக் காப்பவன் தருக்கற்று வாழ்வான்!
விண்ணில் வாழும் விமலனைப் போன்று
மண்ணில் என்றும் மகிழ்வுடன் வாழ்வான்!

வாழ்வது வாழ்ந்திட வளமது வேண்டும்
தாழ்வது வந்திட தவிப்பது இயற்கை
மற்றவர்க் கீந்து மகிழ்வுடன் வாழ்வது
கற்றவர் தமது கடனெனக் கொள்க.

கொன்றும் கருத்தினால் குறைவின்றி வாழ்ந்தால்
என்றுதல் இன்றியே ஏற்றமது காணலாம்!
ஏற்றமது பெற்றால் எவரையும் வெல்லலாம்
வெற்றியது வந்தால் விதனம் மறையும்
(மனத்துயர்)

மறைந்திடும் ஓர்நாள் மதிப்புறுச் செல்வம்
கரைந்திடும் கோடிகள் கவனமது குறைந்தால்
செல்வம் பெரிதென செருக்கினைக் கொண்டால்
செல்வேன் என்றது சென்றிடும் செல்வம்!

செல்வம் என்றால் சிறப்பு மிக்கதோர்
கல்வி ஒன்றே களவாட இயலாது
கற்றவர் கற்று கற்றதைத் தந்தால்
மற்றவர் வாழ்விலும் மகிழ்வது செழிக்கும்!



கவிஞர். **விக்டர் ருக்கோலாஸ், M.A**
12, இரண்டாவது தெரு, விக்டோரியாநகர்,
புதுச்சேரி - 605005
அ.பே: **8015429152**

# 25 குறளே தெய்வம்!

*அணுவினுக்கூர் அணுவைப் பிளந்து*
*கவினுற அருந்தமிழ் யாத்தே - புவியதனில்*
*வையத்தோர் வாழ்வாங்கு வாழ*
*வைப்பெனத் தந்த குறள்!*

*கோபுர உச்சி எனக் குறளதனைக்*
*குவலயத்தோர் வியந்திடினும் - பொருந்தா;*
*குறள்பெருமை விண்ணளவு வியக்கின்*
*பொருள் அருமை அதற்குமப்பால்!*

*ஆதியை முன்வைத்துப் பொருந்த*
*ஆண்டவனையே பின்காட்டி - அகரம்*
*அவர்க்கும் முன்றென்றுணர்த்தி யுலகின்*
*அனைத்துயிரும் பின் என்றான் உண்மை!*

*படைத்தான் வள்ளுவன் திருக்குறளை பாடமாம்*
*வையநூல் படைப்புகளில் - ஏடறிவில்*
*அடிமையாவார் எவரும் அதன் வழிக்கு*
*பிடியளவேயாயினும் பெருங்கடல்!*

*அறத்தினை முன்வைத்துப் பொருந்த*
*பொருளினை இடையிற் காட்டி - இன்பம்*
*யாவும் கடைஎன்றுணர்த்தி - உலகோர்*
*மீள்வுறநெறி தந்த குறள்!*

*அகமும் புறமும் கைப்பிடி அளவே*
*அறமும் பொருளும் கடலெனத்*
*திறம் வியக்கின் பெருமைக்கு ஈடேது*
*தெரியுமோ குறளே தெய்வம்*

*அமுதுக்குக் கடல் கடைந்த*
*அமரரினும் மேன்மையுறும் - பொருந்த*
*குறளுக்குத் தமிழ் கடைந்தான்*
*குறளோனின் திறன் வியப்பே!*

*இப்படித்தான் வைய மென்று*
*என்றைக்கோ வகுத்த குறள் - நன்மையுற*
*அன்றைக்கும் இன்றைக்கும்*
*என்றைக்கும் அரிய நெறி!*

*சொல் வியக்கும், பொருள் வியக்கும்*
*சொல்வித்தை நயம் விளக்கும்*
*ஈரடி தன்னை படிக்கின் - வியந்து*
*பேரோடி யங்கும் பேருலகு!*

*அழியினும் வையம் ஆதாரம் குறளே*
*அறநெறி தன்னை ஆழிக்குணர்த்தும் - திறனாய்*
*பெரும் புகழ் சேர்க்கும் பேருடைத்தமிழுக்கு*
*சீரோடு விளங்கும் செகத்து!*



காஞ்சிக் கவிஞர் **கா. கலியபெருமாள்,**
தலைவர்,
புதுப்பட்டினம் முதல்நிலை ஊராட்சிமன்றம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

# 26 நமது தேசம்

தேசமே நமது தேசமே...
அண்ணல் காந்தி வாங்கித் தந்த நமது தேசமே,
நாசப் படுத்தும் நச்சல் கூட்டம் துளைந்து போகுமா,
எண்ணி எண்ணி நினைக்கும்போது தேசம் தேரும்மா,
உண்மை என்று உணர்ந்து நீங்கள் நன்மை செய்யவா வா...

தூய்மையாக வைத்திடுவோம் நமது தேசத்தை,
மது அருந்தி பகையைக் கொண்டு நாசமாவதா,
மோசமான குண்டு வெடிக்கு இரைக்கு ஆவதா,
அப்பாவி மானிடத்தை அழிப்பதேனடா...

இயற்கையான தேசத்தில் வாழும் மானிடா,
முயன்றவரை உறுதிக்கொண்டு உழைப்பில் காட்டுடா,
சோம்பி சோம்பி தாயகத்தில் அலைந்து திரிவதேன்,
தாயகத்தின் இந்தியன் வாழ்ந்து காட்டுடா...

வனத்தை அழித்து வீட்டைக் கட்டி வாழும் மானிடா,
பகுத்தறிவு கொண்டு நீயும் பாதைத் தேடிவா,
அண்ணல் காந்தி வாங்கித் தந்த தேசம் தானடா,
மறந்து போன பின்பு உனக்கு வேசம் ஏனடா.



கவிஞர். **வீ. திருமுருகன்,**
நெ. கொஞ்சும்கிளி மாரிஅம்மன்
- கோவில் பிளாட்
மேட்டுப்பாளையம் பாண்டி
செல் : **8754232180**

# நிம்மதி இல்லா மனம்

27

நிம்மதி இல்லா மனமே,
நினைத்து இருப்பது சரியா,
சம்மதம் இல்லா வழியே,
சாதித்து இருப்பது சரியா...

சொல்லி வரேன் என் கதையை,
என் சொல்லை மறுப்பது சரியா,
நான் சொல்லிப் புட்டேன் என் வழியை,
இனி உன் வழிப்போலே நடையேல்...

ஊரார் உறவார் உன்னை,
அல்ல ஊட்டி வளர்ப்பவள் அன்னை,
அன்னை தந்தையின் சொல்லை,
கேட்டு நடப்பது நன்மை...

சூழ்ச்சியின் பலவகைப் பேச்சு,
வாழும் மனிதர் கூட்டம் உயிர்மூச்சு,
பேச்சும் மூச்சும் நின்றால்,
நிம்மதி எல்லாம் போச்சு...

பொறுமை கடலிலும் பெரிது,
ஏட்டின் எழுத்தோ அதனிலும் சிறுசு,
நாம் பாடிடும் பாட்டு பழைசு,
நிம்மதி கிடைச்சிடும் மனசு.



கவிஞர். **வீ. திருமுருகன்**
செல்: 8754232180

# 28 மீண்டும் ஓர் விதி செய்வாய்...

* உதிர்த்த நிலவில், தெறித்த மலராய்!
சிறுத்த உலகில், விரித்த சிறகை,
நிறைத்த திரு - மேனி உருவாய்!
விழித்த என் - செல்ல மகனே!

* விதித்த உலகம் உறங்கிப் போக,
மரித்த மனிதன் பிழைத்துப்போக
கறைத்த உடலும் காசாய் மாற,
கலங்கிய கண்ணா...ய், - ஏன் நிற்கிறாய்!

* விடிந்தும், விழியாமல் சோம்பேறி ஒருவன்,
யாரோ சொத்துக்கு முதலாளி ஒருவன்,
பிறக்காத பிள்ளைக்கும் பட்டா போடுகிறான்,
பிச்சைக்காரனிடம் லஞ்சம் கேட்கிறான்!

* சாலையில் ரத்தமாய் துடித்தவனை படம் பிடிக்கிறான்!
அடுத்தவன் அங்கே மனிதம் பேசுறான்!
வீடே இல்லாதவன் மேடை அமைக்கிறாய்!
அறிவு வளராமலிருக்க அரசியல் செய்கிறான்

* எவனோ வாழ தீயும் குளிக்கிறான்!
தொட்டில் குழந்தையை தாயும் மறக்கிறாள்!
தொலைந்த உறவை நெட்டில் தேடுறான்,
வீட்டில் பஞ்சமாம் ஜீன்ஸில் ஓட்டை காட்டுறான்

* பூட்டி வைக்கிறான், புத்தியை குழிதோண்டி புதைக்கிறான்,
ஏட்டை கிழிக்கிறான், அவனே சட்டம் சொல்கிறான்!
மகனே, - போற்றிச் செய்யடா விதியை "புதிதாய்
கொய்யடா"
மாற்றிச் செய்யடா இவ்வுலகை "மதியால் வெல்லடா"



**மு.பா. ஞானசுந்தரி** **BPEd., M.A., B.Ed., M.Phil.**
6/392, ராஜமாணிக்கம் லைன்,
ஒசட்டி, அருவங்காடு அஞ்சல்,
நீலகிரி - 643 202
Cell: **9443099870**

## தமிழ்

அன்பெனும் வாழ்வில் வளர்ந்தோங்கும் வேளை
செந்தமிழ் உயர்வுக்குச் சிறுதொண்டு புரிவீர்;
பிறப்பும் இறப்பும் இயற்கையன்றோ - இச்சிறு
பொழுதில் ஊக்கமும் ஆக்கமும் கொள்வீர்
நன்றே தமிழ் தளைக்க...!

## கடவுள்

கடவுள் படைத்தான் - உலகதனை
மானுடன் மாண்புறவே - மண்ணில்;
மழைக்காற்று நெருப்பனைத்தும் - நெஞ்சம்
நெகிழ அருளினான் - உலகியங்க!
ஆற்றல் ஆகாயம் அவனருளால்
ஏனோ?
எம்மினத்தைத் தாய்போல்
தாங்காது; தவிக்கவேச் செய்கிறான்
துன்ப யிருளில் துடிதுடிக்க!

## மதம்

மனிதம் வாழ மதநெறியை - மனதில்
விதைத்தனர் மகான்கள் அன்றே;
மானிடனோ; சுயநலனுக் கதனை
சுவீகாரம் செய்கிறான்!
இன்றோ?
விஞ்ஞானம் விழிஉயரச் செய்திடினும்
நஞ்சு உள்ளங்கள் மதத்தை;
கொஞ்சமும் இரக்கமின்றிக் கொலை
பாதகம் செய்யவேத் தூண்டி;
குளிர்காய விழைவதும் யாருக்காக?

# விதி

மாயயுலகம் மனிதன் வாழ்வது
யாருக்காக?
கொடிய துன்பம் அடைவதும் மீள்வதும்
எதற்காக?
மனிதன் கடவுள் குழந்தை - அறிந்தும்;
அடித்தும் அழித்தும் கொள்வது
எதற்காகத் தானோ?

# கல்வி

கல்வியே ஞானறிவு தரும்
விஞ்ஞானம் விண்ணிலும் மண்ணிலும்
வேட்கையுடன் விளையாடும் - இவ்வேளை;
கல்வியோ காசாயிற்று; ஊழலோ ஊற்றாயிற்று!

துன்பம் தரும் தீவிரவாதம்
துணைவனாயிற்று; தகுதியில்லாத் தகுதியே!
இதற்கு நீதான் காரணமோ?
இந் நச்சுவேர் களைவதுதான்
யாரோ? எவரோ? எந்நாளோ?




முனைவர். **ப. ராஜேந்திரன் M.A., Ph.d.**
ஒருங்கிணைப்பாளர்,
இதழியல் துறை,
தொலைநிலைக் கல்வி,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.

# இயற்கையை வணங்குவோம்! 30

*இயற்கையை வணங்குவோம்!*
*கடுகு சிறுத்தாலும் காரந்தான் குறையுமோ?*
*குமரி குறுவட்டந் தானாயினும்*
*குவலயத்து அதுவே - கும்பம் போலாச்சு!*
*முத்தமிழ் மொழிமலர்ந்த நிலத்தே,*
*மூவேந்தர் - சேர, சோழ, பாண்டியரும்*
*சேர்ந்தே முப்பந்தல் தலமாச்சு!*

*தென்கோடி முனையோரம்*
*தேடி நின்றாள் தெய்வக் கன்னிகை*
*பகவதியும் - சிவனைச் சேர*
*குமரிக் கண்டம் மூழ்கியதில் - கரைசேர்ந்த*
*தொரு கன்னி காத்திருந்தாள்,*
*அவ்விடமே கன்னியா குமரியாச்சு!*

*இயற்கையே! நீயிங்குதான் - இசைந்தே சங்கமம்*
*எங்கு மிலாதோர் அதிசயம்;*
*வங்காளம் அரபிக் கடலும் இந்தியப்*
*பெருங்கடலோ டிணைந்தே - உறவாடும்*
*சித்ரா பௌர்ணமியில் சூரிய சந்திரர்*
*நேருக்கு நேராய் முகந்நோக்க!*

*சூரிய உதயம் அஸ்தமனமும் ஒருசேர*
*குமரியில் பெரு வியப்பே!*
*சூரியன் ஓய்வெடுக்க ஒதுங்கும் - அவ்வேளை;*
*குளிர்சந்திரனோ ஒளிவீசும் - என்னவிந்தை!*
*இயற்கையே, உன்னதம் படைப் பதுகுமரியில்,*
*கண்கொளாக் காட்சி யன்றோ!*
*குள்ளமுனி அகத்தியன் வசித்த - இவ்விடத்து*

ஹிமாலயத்து மருந்துவாழ் மலையை;
மாருதி இலங்கைக்குக் கொண்டுவரும் - வேளை
இடறி விழுந்த தொரு
துண்டு மலைஇம் மண்ணில் - எங்கணும்
பரவிற்று இயற்கை மருத்துவம்!

செந்நெல்லும் தென்னையும் பச்சைக் - கம்பளமாய்
பார்க்கையில் பாசம் உன்மேல் படரும்
வீரத்துறவி விவேகானந்தர் வீற்றிருக்கும்
கடலோரம், தெய்வப் புலவர் திருவுரு
நோக்கியே, கர்ம வீரராய் - காமராச பெருமானும்
வீற்றிருக்கும் விழிநிறைச் சத்திரமோ!

நேசமணியும் ஜீவாவும் நேசித்த மாநிலத்து,
தியாகிகளாம் மனக்காவலப் பெருமாள்
பிள்ளைவழி பேராசிரியர் சங்கரலிங்கனார் - அவர்போல
பண்புடை பகவதிபெருமாள் ஐயனாரும்;
அச்சமின்றி போராடி அடைந்த சுதந்திரம்
பெருமை யுடைத்து - போற்றிடுவோம்!

வள்ளல் கலைஞர் என்.எஸ். கிருஷ்ணனும்
கருத்துமழை பொழிந்த - கன்னியாகுமரி
புகழதனை; புவியெங்கும் பரப்பியதோர்
மானுடப்பறவை மாண்புறு - பொன்னீலனார்;
கவினுலகம் கல்வியில் களம்பதித்த - மண்ணன்றோ
நித்தம் வணங்கி நின்பெயர்,
நிலைத்திட எத்தனித்தல் என்கடனே



**அகநம்பி,**
கோசலை நினைவு கல்வி அறக்கட்டளை
இயற்கை சக்தி பப்ளிகேஷன்ஸ்,
புன்னமை கிராமம், சீவாடி கிராமம் & அஞ்சல்,
காஞ்சிபுரம் மாவட்டம்.
செல்: **9585480754**

# தமிழ் கற்றுத்தரப்படும்...!

**31**

விரல் நுனியில் உலகம்
நாநுனித்தமிழ் - என
மங்காத தமிழ்ப்பேச்சு
மெல்ல மெல்ல
மறைந்துப் போச்சு

தமிழினி விழும்
வீழ்வது எப்பொழுது?

கல் தோன்றி, முன் தோன்றியாய்,
தமிழன் தோன்றினான்.
அவன்மு(ன்)ள் தோன்றிய நாளாய்
வழக்குப்பேச்சாய்...
தமிழ்ச்சொல் மட்டும்
அவதியாச்சி!

எம் தமிழ்நாட்டில்
செம்மொழி தமிழாயினும்...
பைந்தமிழ் போற்றினும்...
நடைமுறை போக்கில்
முன்னிடம் பெறினும்
எம்மொழிக்கும் சம்மதம் தான்

தமிழ்க் கூறும் நல்லுலகம்
எங்கே...?!
நாடிப்போக போக
நற்றமிழும் கற்றுத்தரப்படும்
அங்கே...!




எறும்பூர் **கை. செல்வகுமார்,**
4/564, கீழ்ப்புதுப்பாக்கம் சாலை,
சிவாஜிநகர், செய்யாறு - 604407,
தி.ம. மாவட்டம்.
செல் : **9626579962.**

# 32 நானும் மகாகவி பாரதியாரும்

தூரத்தே தள்ளாடும் வயதில் மிக
மெதுவாக, தளர்வோடு வருகிறார் தன்
கனவில் கண்ட கற்பனையில் பூத்திட்ட
புதுமைப் பெண்ணாக என்னைக் கண்டு.
வந்தவரை இருக்கையில் அமர
வைத்தேன் பெண்ணே உன் முகத்தில்
என்ன சோகம் செப்புக என்றார்
கொட்டிவிட்டேன் இன்றைய பாதக பாரதத்தை
தன் வயது கூட அறியாமல் சும்மா
சுற்றிக்கொண்டிருக்கும் சில ஆசாமிகள்
பெண்மையை எந்த ஆண்பிள்ளையும்
கல்வி கற்காமல் கலவி கற்றுக்கொண்டு
ஐயகோ! நடுசாமத்தல் பெண் மதுவால் மயங்கி
பலரால் பலாத்காரம் செய்யப்பட்டு
மேலே கூறவும் உடலும் மனதும்
கூசுகின்றதே என வெட்கப்பட்டு
வேதனையில் கொட்டிவிட்டேன்
ஐயகோ என்னென்று இனி என் - பாக்கள்
அரங்கேறும் என்று பாட்டுக்கென பிறந்த
பாரதி, அந்நியன் கொடுத்த துயர் கூட
தாங்கி அடிகளையும் இடிகளையும்
தாங்கிக் கொண்ட நெஞ்சுடையவன் கலங்கிய போது
பொருளாதாரம் எப்படியான போதும்
அம்மா, அக்கா, துணையென உள்ள பூமியிது
பூமாதேவி, ஸ்ரீதேவியும் கொண்டாடும் மண்ணில்
வதங்கிபோய் விட்டதே இன்றைய
பாரதம் என நான் மிக வருந்தி மேலும்
சிறுமி முதல் அறுபதைக் கடந்த பெண்ணானாலும்
சிறுவன் முதல் அறுபதை மீறிய ஆண்வர்க்கம்
பெண்போதை கொண்டோர் ஆயினர்

என வருத்தத்தோடு வார்த்தைகள்
விட்டுவிட பாரதியோ என்னிடம்
காலை எழுந்தவுடன் படிக்கச் சொன்னேன்
இன்றோ,
பகலேது, இரவேது என அறியாமல் ஆடுகின்றனர்.
என்னை காலால் உதித்த ஆனைக்கு நன்றி
தவறியும் இனியொரு
பிறப்பெய்யமாட்டேன்
என்று செருக்குடன் கூறினான்
நம் மகாகவி நானோ ஐயா நீர்
இளங்சிங்கமென இனியொரு பிறப்பெடுப்பெடு
உன் அத்தனை கவலையும் வாடி,
வதங்கும் நம் தங்கங்களுக்கு
உணர்வு கொடுத்த பின்னர்
உன் முடிவை கையில் எடு.
கோட்சேவையே மன்னித்த பூமி தான்
இது உனக்கென்ன மறந்தா போச்சி
கவிஞரே! நுன்போலுள்ளவர் போற்ற
நாம் முதலில் இந்தியர்கள்
பாட்டெழுதும் கவிஞரே
நுன்புலமை மதித்து
நான் நீ பிறந்த இம்மண்ணில் பிறப்பெய்து
அறியாமை போக்கி, கல்லாமை நீக்கி
ஆண், பெண், இருபாலருக்கும்
நன்னடத்தை எடுத்துரைத்து
மற்றொரு புது அகிம்சா இந்தியாவை
அரங்கில் ஏற்றிவைப்போம்

**ஜெய்ஹிந்த்**



திருமதி. **மாலதி அனந்தபத்மநாபன்**
பார்வதிபவன், 14, நரசிம்மன் தெரு,
தர்மபுரி - 636701.
செல் : **9486833911**

# 33 முந்தானையின் தலைப்பு

முந்தானையின் முகம் துடைக்கும்
மழலையின் சந்தோஷம் மகத்தானது
மத்தாப்பு சிரிப்பும்
மயில் இறகின் நினைப்பும்
முல்லையின் மணமும்
பூரணமதியின் ஒலியும்
பச்சைக் கிளியின் பேச்சும்
பக்குவமாய் சமைத்திட
பால்அன்னமும் திகட்டுமடி
சொன்னால் இனிக்குமடி
சொல்ல துடிக்குமடி
கண்ணில் தெரியுமடி
என்றென்றும் திகட்டாதடி
அன்னையின் முந்தானையின் தலைப்பு

முந்தானையின் தலைப்பில் முத்தனை முடியும்
மணநாள் தானே மகத்தான சந்தோஷம்
உலகம் மறந்ததடி
உள்ளம் மயங்குதடி
கண்ணில் தெரியுதடி
காற்றில் களிக்குதடி
கட்டாயம் வெல்லுமடி
கடமை ஒன்று இருக்குமடி
முந்தானையில் முகம் துடைக்கும்
வாலிப இதயம்
காதல் வானில் சிறகடிக்கும்
சிங்கார சிட்டுகளாய்

முதிர்ந்து விட்ட போதிலும்
முந்தானை நிழல் கண்டு களிக்கும்
பொன் மணம் மகத்தானது
அன்பு கொண்டதடி
வெள்ளை உள்ளமடி
வேதனைப்பட்டதடி
தொல்லை தருவதடி
துவண்டு விழுவதடி
போனால் வராதடி
புரிந்தால் தெரியுமடி
சொல்லில் இனிமையடி
சொர்க்கம் தெரியுமடி
கார்மேகம் கண்டிட்ட மயிலின்
மனம்போல் முந்தானையின் நிழல்
கண்டுமகிழும் வயோதிக இதயம்
இனிமை சேர்க்கும் அந்தக் கால
இன்ப கனவுகளுடன்


கவிஞர் **பிரேமா அம்சவேல்**
97, வேல முதலி தெரு,
குறிஞ்சிப்பாடி.
செல் : **9345060415**
**9976166802**




# 34 மெய்ப் பொருள் உணர்ந்தேன்!

அவள் அழகானவள்
இதழ் ஊறும் தேனானவள்!
மனம் ஈர்க்கும் மலரானவள்
குழல் ஊதும் குரலானவள்
மென்மையின் பிறப்பிடம் காதலின் நாகரீகம்
அவளைக் காதலிப்பதே என் கௌரவம்!

இரவு பகலாய் உருகினேன்
என் இதழில் தாங்கவே ஏங்கினேன்
காலம் ஒரு நாள் கை கொடுக்க
அவள் காதல் என்னோடு கனிந்தது
ஆசைகள் நிறை வேறியது! வாழ்வோ திசைமாறியது!

எண்ணங்களை உள் வாங்குவதில் எதிர்மறையானாள்
உள்ளூறும் சிந்தனைக்கோ சிறையானாள்
தோழமைக்குத் தோள் கொடுத்தாள்
உணர்வுக்கும், உணர்ச்சிக்கும் அன்னியமானாள்
மெல்லப் பிழை திருத்தி மெய்ப் பொருள் தேடினேன்
வருந்தி வாடி நின்ற பொழுதே வேறொருவள்
வழியென வரக் கண்டேன்

அவள் குறு நகை புரிந்தே
எனக்குள் குடி புகுந்தாள்
வல்லினம், மெல்லினம், இடையினம்
தனக்குள் என்றாள்

*காதலின் கலித்தொகையை மனக்கண்ணில் உணர்த்தினாள்*
*காப்பிய கதம்பம் கொண்டே மன இருள் அகற்றினாள்*
*யாரடி நீ? இதுநாள் வரை எங்கே என்றேன்*
*நானே உன் இதழ் அசைவில் நின்றேன் என்றாள்*

*யுத்தம் முடித்துசித்தம் தெளிந்தேன்*
*மடை திறந்த வெள்ளமென மெய்யறிவு பெருக்கெடுக்க*
*வாழ்வுக்கு உகந்தவளைக் கண்டேன் உளம் மகிழ்ந்தேன்*
*முன்னவள் என் ஏக்கத்திற்குத்தோள் கொடுத்தாள்*
*அவள் பெயர் ஆங்கிலம்*
*பின்னவள் உணர்வுக்கும் உணர்ச்சிக்கும்*
*உயிர்கொடுத்தாள்*
*இவள் பெயர் என் தமிழ்!*

**அ. ஜோசப்ஸ்டாலின்,**
நெறியாளர்,
திருக்குவளை முத்தமிழ் மன்றம்,
மடப்புரம், திருக்குவளை தாலுக்கா,
நாகை மாவட்டம் - 610 204
அலைபேசி : **9790075826**



# 35 எதிர்பார்ப்பு

தவமிருந்து பெற்ற மகன்
தள்ளாடும் முதுமையில்
தாங்கிப் பிடிப்பானா? இது
தாயின் எதிர்பார்ப்பு!

தான்படும் சிரமத்தில்
தனயன் கைகொடுத்து
தன் மானம் காப்பானா? இது
தந்தையின் எதிர்பார்ப்பு!

தலைமுறைக்குத் தகுந்தபடி
தலைமுடி தனை வளர்க்க
தடையென்றும் நீங்காதா? இது
தம்பியின் எதிர்பார்ப்பு!

தனது மனம் கவர்ந்த
தனம் நிறைந்த வரன்
தனக்கு அமைவானா? இது
தங்கையின் எதிர்பார்ப்பு!

அமைதியில்லா வீட்டை விட்டு
அண்ணியுடன் வெளியேற
அனுமதி கிடைத்திடுமா? இது
அண்ணனின் எதிர்பார்ப்பு!

அரிதாக எஞ்சியுள்ள
அரை ஏக்கர் விளைநிலத்தை
அனுபவிக்க சாத்தியமா? இது
அக்காவின் எதிர்பார்ப்பு!

அன்பால் ஈர்க்கின்ற
அழகான மைத்துனியும்
அன்பளிப்பாய் கிடைப்பாளா? இது
அத்தானின் எதிர்பார்ப்பு!

மாதம் ஒரு முறையேனும்
மணிக்கணக்காய் பேசி
மனக்குறையைக் கேட்பாரா? இது
மனைவியின் எதிர்பார்ப்பு!

எல்லையில்லா கவலைகள்
எள்ளளவும் இல்லா நாள்
என்றாவது வந்திடுமா? இது
என்னுடைய எதிர்பார்ப்பு!

கவிஞர் **க. சுகுமாறன்,**
புதுக்கோட்டை.
அலைபேசி : **9443867387**
**9486954801**



# 36 நாங்கள் மனிதர்களே அல்ல

அடிப்படை வசதியின்றி
அன்றாடம் சீரழிவோம்.
ஆடம்பர பிரியர்களை
அரியணையில் ஏற்றிடுவோம்.

நிரந்தர தொழிலின்றி
நித்தமும் தவித்திடுவோம்.
நிம்மதியை மட்டும்
நிரந்தரமாய் தொலைத்திடுவோம்.

உறுதுணையாய் இருப்பவரை
ஒதுக்கியே வைத்திருப்போம்.
உண்மையாய் உழைப்போரை
உதறியே தள்ளிடுவோம்.

வரம்பில்லா உறுதிமொழி
வார்த்தையில் மங்கிடுவோம்.
இலவசத்தைக் கண்டு - என்றும்
ஏமாளியாகிடுவோம்.

தேர்தல் முடியும் வரை
தெய்வத்திற்கு நிகராவோம்.
ஜெயித்து வந்தவுடன்
தீண்டா பொருளாவோம்.

கொள்கையுடன் வாழ்பவரை
குப்பையில் எறிந்திடுவோம்.
கொள்ளை அடிப்போரை
கொண்டாடி மகிழ்ந்திடுவோம்.

வாழ்நாள் முழுவதுமே
வறுமையில் உழன்றாலும்
மறந்திடுவோம் மதியிழப்போம்
மனிதரில்லை நாங்கள் மந்தைகள்.



கவிஞர் **க. சுகுமாறன்,**
புதுக்கோட்டை.
அலைபேசி : **944387387, 9486954801**

# தேவை



பாலூட்டி சீராட்டி
பக்குவமாய் அரவணைத்து
பள்ளிக்கு அனுப்பி வைக்க
பாசமுள்ள அம்மா தேவை

கல்லூரிக்குச் சென்று (உயர்)
கல்வியெல்லாம் கற்பதற்குக்
கடன் பட்டு செலவு செய்ய
கண்டிப்பாக அப்பா தேவை

தாமதம் ஆனாலும்
தரமான பணியமர்ந்து
தன் காலில் நிற்கும் வரை
தாய் தந்தை உதவி தேவை

உயரே பறக்கும் வரை
உறுதுணையாய் இருந்து
உதவிக்கரம் நீட்ட
உடன் பிறந்தோர் தேவை

பெற்று வளர்த்து
பெருமையைச் சேர்த்தாலும்
பெண் தேடிக் கொள்ள மட்டும்
பெற்றோர் துணை ஏன் தேவை?

கருவிழியாய் எண்ணியது (முகத்தில்)
கரி பூச துணிந்தாலும்
கை கழுவ மனமில்லை (பிள்ளை)
கண் மூடும் வரை தேவை.



கவிஞர் **க. சுகுமாறன்,**
புதுக்கோட்டை.
அலைபேசி : **944387387, 9486954801**

# 38 "காலத்தால் அழியாத பெருந்தலைவர் காமராஜர்"

"காலத்தால் அழியாத பெருந்தலைவர் காமராஜர்"
உழுதுண்டு வாழ்வதே வாழ்க்கை
பழுதில்லா ஏட்டனைத்தும் படித்தோம்
உழுது பண்படுத்த நீர் நிலம் வேண்டும்
உழவன் மகிழ்வதற்கு நிலவளம் வேண்டும்
ஏழை பங்காளன் பெருந்தலைவர்
பாழாய்போகும் நீரைத் தடுத்து
உழவர் வாழ்வில் மகிழ்ச்சி கொடுத்து
அணைகள் இம்மண்ணில் பல அமைத்தார்!!

"காலத்தால் அழியாத பெருந்தலைவர்
ஞாலத்தில் என்றென்றும் வாழ்ந்திருப்பார்"

படித்ததும் பறந்து போகும்
பசி தொடர்ந்து வந்தால்
மடிவந்து மனம் சோர்ந்து
உடல் நலிந்து போகும்
விடிவேது என்று ஏங்கிய
மாணவ மணிகளுக்கு முன்தோன்றி
படி நன்றாய்படி பசிபோக
மதிய உணவைப் பிடி என்றார்!!

"காலத்தால் அழியாத பெருந்தலைவர்
ஞாலத்தில் என்றென்றும் வாழ்ந்திருப்பார்"

*ஏழை எளியவரின் நலிவை*
*எண்ணி கண்ணீர் வடித்தார்!*
*வாழும் வகையெல்லாம் வகை*
*வகையாய் வகுத்து வைத்தார்!*
*பாழும் சாதிமதக் கொடுமை*
*பரவாமல் மண்ணில் தடுத்தார்!*
*நாளும் சிந்தித்தே தமிழகத்தைச்*
*சோலைவனமாக்கி தானும் மகிழ்ந்தார்!*

*"காலத்தால் அழியாத பெருந்தலைவர்*
*ஞாலத்தில் என்றென்றும் வாழ்ந்திருப்பார்"*


தமிழறிஞர்,
கவிஞர் **சி.பா. அய்யப்பன்பிள்ளை,**
பொதுச்செயலாளர்,
தமிழ்நல எழுத்தாளர் சங்கம்.
செயலாளர்,
பன்னாட்டு தமிழுறவு மன்றம்,
நாகர்கோவில்.
செல் : **9840089377**




# 39 "வீரமாமுனிவர்"

கிருத்துவத்தைப் பரப்புதற்கே எண்ணம் கொண்டு
கிளர்ந்தெழுந்து தமிழ்நாடு வந்தார்! வந்து
பெருமையும் தொண்டிற்கே உதவும் என்று
பெரிதும்நம் தமிழ்மொழியைக் கற்க லானார்!
அருந்தமிழைக் கற்றதிலே அழகை நோக்கி
ஆழ்ந்துகற்றுத் தமிழ்ப்பண்பில் ஊன்றிப் போனார்!
கருத்துடைய தமிழ்நூல்கள் எழுதும் வன்மை
கைவரமே பெற்றுவிட்டார் வியப்பு தானே!

இத்தாலி நாட்டினிலே பிறந்தார்! இந்த
இனியதமிழ் நாட்டினிலே தமிழ்த்தொண் டாற்றி
எத்தனையோ சிறப்புகளைச் செய்தார்! நந்தம்
இயல்மொழியின் எழுத்தினிலே சீர்த்தி ருத்தம்
உத்தமர்தாம் செய்தளித்தார்! தமிழ்மொ ழிக்கே
உயர்வான அகராதி எழுதித் தந்தார்!
முத்துத்தேம் பாவணியாம்! காவி யத்தை
முத்தமிழுக்கே காணிக்கை யாக்கி வைத்தார்!

நம்குறளின் அறத்துப்பால் பொருட்பால் தம்மை
நன்றாக இத்தாலி மொழியில் செய்தார்!
செம்மையுடன் தமிழ்த்தொண்டில் தமிழர் போல
சிறப்பாக விளங்கிவந்த புனிதர் யாரே?
மும்மைக்கும் உதவுகின்ற ஆன்மீ கத்தில்
முத்தெடுத்தும் முத்தமிழில் மூழ்கி வந்து
மம்மரின்றி மணம்தந்து சிறந்த வீர
மாமுனிவர் மாணிக்கம் போன்ற சான்றோர்!



ஒடுக்கத்தூர் கவிஞர் **ந. அரிமர்த்தன பாண்டியன்,** க.மு., கல்.இ.
தமிழாசிரியர் (பணிநிறைவு)
17, பழனி ஆச்சாரிவீதி
கலவன்பேட்டை, வேலூர் - 632 001.
செல் : **9600592687**

# அகிலத்தின் அகல்விளக்கு

**40**

**(எண்சீர் விருத்தம்)**

திருக்குறளின் மொழிநடையைச் சொல்லு தற்கே
    தீந்தமிழின் நிறைபொருளே சான்று ஆகும்!
ஒரு குறளே தரும்பொருளால் பலவி டத்தும்
    ஒவ்வொன்றும் நிறைகருத்தாய் பொலிந்து தோன்றும்!
வருங்காலம் வந்தகாலம் எதிராம் காலம்
    வசதியாகப் படிப்பதற்கு வழிகள் தோன்றும்!
ஒருநாளும் மறவாது ஓது வார்க்கு
    ஒவ்வொன்றாம் புதுமைகள் பூத்து நிற்கும்!

வானளவும் கடலளவும் நல்ல செய்தி
    வசந்தத்துப் பந்தலிலே காய்த்து நிற்கும்!
மானமொன்றும் விளக்கம் பெற்றே
    மதிநுட்பம் நூலோடு நல்கும் என்றும்!
ஆனாலும் அறிவுநுட்பம் பெறுவ தற்கே
    அன்றாடம் வாசித்தல் கடனே ஆகும்!
தேன்போன்ற சொல்நலமே பெறுவ தற்கே
    செந்தமிழின் பொதுமறையை எடுத்துச் செல்வோம்!

தமிழுக்கு அணிகலனாய் தகுதி சான்ற
    தகவோர்க்கோர் உரைநலமாய், அன்பின் வந்த
அமிழ்தனைய ஆன்றோர்க்கோர் அகல்விளக்காய்
    அமைந்திட்ட ஆனந்த ராகமே நின்னை
இமிழ்கடல் சூழ்நாடு எங்கெங் கும்யாம்
    எடுத்தியம்பும் கடப்பாடு என்றும் உடையோம்!
சிமிழுக்குள் பொதிந்திருக்கும் சாந்தே! சங்கத்
    தமிழ்த்தாயே! தகும்மறையே போற்று வோமே!



தமிழருவி கோவை **கோகுலன்**
9/68, பெரியார் நகர், நேரு நகர் கிழக்கு,
விமானநிலையம் அஞ்சல்.
கோவை - 641014
அலைபேசி : **9842238022**

*மூன்றாம் பரிசு பெற்ற கவிதை*

# 41 பாத்தியப்படுத்துவோம்!

இயற்கையதன் அற்புதங்கள் ஏராளம் நம்மண்ணில்
இயன்றவரை காத்திடத்தான் இச்சையிலை நம்மினில்!
செயற்கையால் வந்திறங்கும் சீர்கேடுகள் ஏற்கின்றோம்!
சிந்தனையைச் சிறிதேனும் செப்பனிட மறுக்கின்றோம்!

அயற்கையின் ஆக்கங்களை ஆர்வமுடன் சேர்க்கின்றோம்!
அத்தனையும் அருமையென அப்பாவியாய்ப்
பார்க்கின்றோம்!
மயக்கத்தில் மூழ்கியிவன் மாயங்களைக் கோர்க்கின்றோம்!
மண்ணுக்கும் விண்ணுக்கும் மாசுகளைக் குவிக்கின்றோம்!

வித்தைகளை உலகிற்கே வியந்தளித்த நம்நாடு
வேதங்கள் மூலமொரு விஞ்ஞானம் சொன்னநாடு!
புத்திக்கூர்மை கொண்டேநல் புவியியலை வடித்தநாடு!
புரியாத விந்தைக்கும் புதுவிளக்கம் தந்தநாடு!

அத்தனையும் ஆக்கியநாம் அடிமைபோல் இன்னும்
அன்னியரின் தோட்டமதை அண்ணாந்தே
பார்க்கின்றோம்!
எத்திறம் இல்லையிங்கு எல்லாமே உண்டுதானே?
ஏனின்னும் உணராது கிடக்கின்றாய் நம்மவனே!

ஆன்மீக நெறிகளிலும் அற்புதங்கள் ஆக்கிட்டோம்!
அரும்பிறவி மகிமைதனை அகிலத்திற் குரைத்திட்டோம்!
தேன்ஒத்த குடும்பநெறி தெய்வீக கற்புநெறி
நமதென்று நிமிர்ந்திட்டோம்! நானிலத்தில்
சிறந்திட்டோம்!

சாத்திரங்கள் ஓதியதில் சரித்திரமே கண்டிட்டோம்
சத்தியத்தைச் சோதித்துச் சாதனைகள் செய்திட்டோம்!
சூத்திரங்கள் கண்டுணர்ந்து சொக்கவைத்தோம் வானியலை
சோம்பலாகிப் பிறரிடம்கை ஏந்துவதேன் புரியவில்லை!

காத்துநின்றோம் கலாச்சார சிறகினையே கண்போலே
கண்ணெதிரில் கரையுதது காற்றிடை புகைபோலே!
பாத்தியப் படுத்துவோம்நம் பழைமை நிலைகளையே!
பத்திர மாக்குவோம்நம் பாரம்பரியப் பூக்களையே!

**முகில் தினகரன்**
எண் : 3, சாந்தி நகர்,
ஆவாரம்பாளையம் சாலை,
கணபதி அஞ்சல்,
கோயமுத்தூர் - 641006.
அ.பே : **9894125211**



# 42 உய்யும் நெறி உணர்வோம்!

பேராசை பெருநட்டம் உணரா ததாலே
பெருஞ்சிக்கல் ஊர்தோறும் உலவக் கண்டோம்!
ஊர்தோறும் மன்றங்கள் இருந்த நாளில்
உலவாத வன்வழக்கு கொடுங்கொ லைகள்
தேர்வீதித் தெருவினும் பதைக்கக் கண்டோம்!
தேர்ந்தறிஞர் சொல்லெல்லாம் செல்லாக் காசே! (1)
கார்மழையின் பெருஞ்சீற்றம் நகரந் தன்னில்
கடுமையாப் பெய்வதனால் பயன்தான் உண்டோ?

பக்திநெறி அறியாத பழக்கத் தாலே
பாழ்பட்டுப் போகிறதே பண்பாடெல்லாம்!
சக்திநெறி சகலநெறி அறிந்த நாளில்
சகலர்க்கும் உய்யுநெறி சமமாய்க் கண்டார்; (2)
ஊக்கநெறிப் படுத்ததாலே உறுதி கொண்டு
உண்மையாகும் நெறிநின்றார்; உணர்வு பெற்றார்;
தாக்குநெறி அதிகமில்லை அந்த நாளில்
தமிழ்வழியில் அதிகமாக நின்ற தாலே!

பெருஞ்செல்வர் செல்வவளம் கொண்டோ ரெல்லாம்
பெருகியஅச் செல்வத்தின் சிறிய பங்கை
உருகிவரும் நெஞ்சத்து ஏழைக் கெல்லாம்
ஒருவாறு கொடுத்துநாளும் அறத்தைக் காத்தால்

*சிருகிவிடும் பெரும்பஞ்சம்! செம்மை மீளும்!*
*சிக்கறுத்த சிலந்திபோல துன்பம் ஓடும்! (3)*
*கருகிவரும் கலாச்சாரச் சீரழிவை*
*கண்ணெதிரே தூளாக்கும் நிலையும் வருமே!*

*கொலைகளவு வஞ்சகமாம் சூது எல்லாம்*
*கொடுக்கின்ற எண்ணங்கள் குறைந்த தாலே*
*அலையலையாய் மக்களையே அழிக்கக் கண்டோம்!*
*அன்பென்னும் பேராற்றல் வீழ்த்தக் கண்டோம்!*
*சிலைகடத்தும் கூட்டத்தோ டுசீட்டுக் கூட்டம்*
*செந்தமிழை அழிக்கின்ற செல்வர் கூட்டம்*
*வலைவிரித்துத் திரிகின்ற செல்வர்கூட்டம் (4)*
*வளஇளைஞர் வாழ்வளிக்க வருகின் றாரே!*




கோவை நம்பி,
புலவர் **வீ. மாரப்பன் எம்.ஏ., எம்.ஃபில்.**
மாவட்டத் தலைவர்,
தமிழகத் தமிழாசியர் கழகம்,
நூலாசிரியர், சமச்சீர் கல்வி, தமிழ்நாடு
பாடநூல்குழு.

32, வசந்த் நகர்,
4-வது தெரு, உழவர் சந்தை எதிரில்,
சிங்காநல்லூர்,
கோயமுத்தூர் - 641 005.
கைபேசி : **98437 23312**

# 43 கவிதை அரங்கேறும் நேரம்

*கருங்குயில் இயற்றும் கவிதைக ளெல்லாம்*
*காலையில் தானரங் கேற்றம்;*
*விருந்துணும் காகம் விரும்பிடும் கவிதை*
*விடியலில் தானரங் கேற்றம்;*
*செருக்குடை சேவல் செய்திடும் கவிதை*
*சீர்பனி தனிலரங் கேற்றம்;*
*உருள்விழி ஆந்தை உருவிடும் கவிதை*
*ஓரிருட் டினிலரங் கேற்றம்.*

*மல்லிகை மலரின் மணமிகு கவிதை*
*மாலையில் தானரங் கேற்றம்;*
*அல்லியின் அழகுக் கவிதைகள் இரவின்*
*அடர்த்தியில் தானரங் கேற்றம்;*
*சில்லிடும் குளிரில் பவழமல் லிகையும்*
*செய்திடும் கவியரங் கேற்றம்;*
*மெல்லிய குறிஞ்சி பன்னிரண் டாண்டில்*
*மெய்க்கவி தனையரங் கேற்றும்.*

*நித்திரை யின்றித் தவித்திடும் நேரம்*
*நித்திலக் கவியரங் கேற்றம்;*
*புத்தியைத் தீட்டும் கவிதைகள் புரட்சிப்*
*பொழுதினில் தானரங் கேற்றம்;*
*முத்தியை வேண்டும் தத்துவக் கவிதை*
*முடிவுறும் தனிலரங் கேற்றம்;*
*சத்திய முரைக்கும் கவிதைகள் யாவும்*
*சந்தத முமரங் கேற்றம்.*

*நெஞ்சினில் உயிர்க்கும் கவிதைக ளெல்லாம்*
*நினைத்ததும் உடனரங் கேற்றம்;*
*கஞ்சியை மறந்து கவிதையில் திளைப்போர்*
*கவிதைகள் தினமரங் கேற்றம்;*
*வஞ்சியர் வடிக்கும் கவிதைகள் யாவும்*
*வாலிபந் தனிலரங் கேற்றம்;*
*கொஞ்சிடும் மழலைக் கவிதைகள் யாண்டும்*
*குவலயத் தொழிலரங் கேற்றம்!*



**கே.பி. பத்மநாபன்**
6, இந்திரா நகர், சாந்தி கியர்ஸ் அருகில்,
சிங்காநல்லூர், கோவை - 641005
அலைபேசி : **9488153283**

*இரண்டாம் பரிசு பெற்ற கவிதை*

# கவிஞர் பார்வையில் மாணவர்கள் 44

முதல் - இடை - கடையென முக்குண இயல்பால்
முன்னிலை அடைவதும் நடுநிலை ஆவதும்
கடைநிலை எய்தலும் மாணாக்கர் வகையென
திடநிலை கொண்ட பெரியோர் தேர்ந்து தெளிவர்!

முதல் மாணாக்கனோ எந்நிலை வரினும் தன்னிலை அறிந்து
நன்னிலை எய்த நாளும் முயன்று
முன்னிலை அடைய முனைந்து வினையாற்றி
வெல்லும் நிலையை விரைந்து ஈட்டுவான்!

அன்னத்தை ஒத்த ஆற்றல் ஆள்பவன்
பாலையும் நீரையும் பகுத்தாய்ந்து
நீரைப் பிரித்து பாலைப்பருகும் அன்னப்பறவையாக
நல்லதை பற்றி அல்லதை நீக்கி அவனியில் சிறப்பான்!
முதல்நிலை மாணாக்கன்

இடைநிலை மாணவன் என்றும் ஒரு நிலை நின்று
கடைநிலை காணா கண்ணியம் காத்து
நடுநிலை இருப்ப நாளும் முயன்று
கடுநிலை புரியா காரிய மாற்றுவான்!

முயற்சிக்குத் தகுந்த பலனை அனுபவித்து
வறட்சி நிலையிலும் குன்றா தருவாக
கற்பிக்கும் மொழியை ஒப்பிக்கும் கிளியாக
எத்தகு தருணத்திலும் இடும்பை
எய்தான் இடைநிலை மாணாக்கன்!

கடை மாணாக்கனோ கலங்கியே ஒதுங்குவான்
திடநிலை கொள்ளா திசைமாறும் பறவை!
படுதுன்பம் கண்டும் பதறாதிருப்பான்
கடுமொழி பேசி காரியத்தைக் கெடுப்பான்!

ஓடும்போது உறங்கியே விழுவான்
தீதைக் கண்டும் திடுக்கிடமாட்டான்!
இழிச் சொல் இயம்பியும் பழிச் சொல் பேசியும்
வழி நெடுகிலும் வம்பை வளர்த்து துன்பம் அடைவான்

பார்த்ததிலெல்லாம் பற்றையே வைத்து
ஆர்ப்பரித்து அட்டகாசம் செய்து
சூதும் வாதும் மனதில் தேக்கி
துடுக்காய் நின்று அடுக்காய் குற்றம் புரிந்து
குலப்பெயர் கெடுப்பான் - இவனே
கடைநிலை மாணாக்கன் என ஆன்றோர் ஆய்ந்தனர்.


கவிஞர் **க. சிவராசு, கி. நீலம்பூர்,**
ச.க. புதூர் அஞ்சல், மடத்துக்குளம் வட்டம்,
திருப்பூர் மாவட்டம் - 642 113.
அ.பே. : **9688579907**




# இயற்கையோடு இணைந்து வாழ்வோம்!

45

நாம் வாழும் பூமியின் வயதோ நானூற்றியறுபது
கோடியாண்டுகள்
நம்மில் வாழும் ஓருயிர் புல்பூண்டின் வயதோ
நான்கரைகோடி யாண்டுகள்
நம் மானிடம் தோன்றியதோ வெறும்நூற்றயிம்பதாயிரமாண்டுகள்
நம்மானிட ஆறறிவு மனிதனின் தோற்றமோ வெறும்
அய்ம்பதாயிரமாண்டுகள்

இம் மண்ணில் தோன்றிய னைத்துயிரினத்திற்கும் சம உரிமை
உண்டு
இம் மண்ணி னிறுதியில் தோன்றிய மனிதனின்
ஆதிக்கமோ அனைத்துயிர்களிடத்திலு முண்டு
இம் மண்ணின் அய்வகை நிலத்திலும் அனைத்துயிர்களும்
செழித்தோங்கின
இம் மண்ணின் ஆறறிவு மனிதன் அனைத்தியற்கை
வளத்தையும் ஒழித்தோய்ந்தான்.

இயற்கையோ டிணைந்து வாழ்ந்த மனிதன் நோயற்று
வாழ்ந்தான்
செயற்கையைப் பிணைத்து வாழ்ந்த மனிதன் நோயுற்று
வீழ்ந்தான்
குடிகுடியைக் கெடுக்கும், குடிப்பழக்கம் உடல்நலத்தைக்
கெடுக்கும் அரசெச்சரிக்கை
குடியழித்து சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் நெகிழியை
பயன்படுத்தாதீர். இதுகூட அரசறிவிப்பு தான்.

புகை யுயிருக்குப் பகை, புற்றுநோயை உண்டாக்கும்,
இதுவும்கூட அரசெச்சரிக்கைதான்
புகையை, குடியை, நெகிழியை தொழிலாகச் செய்ய
அனுமதித்ததும் இதேயரசுதான்
இதையரசு வழிகாட்டுத லென்றேற்பதா? மறுப்பதா? எதைப்
பின்பற்றுவது?
எதைப் பின்பற்றினால் நமக்கும் நம்சந்ததியினருக்கும்
நலமென்றறிவது.

இயற்கையை யழிக்கும் செயற்கை மது, புகை, நெகிழியை
யொழிப்போம்!
இயற்கைச் சூழலையழிக்கும் மாசுபாடுகளை ஒழித்து
நற்சூழலை வளர்ப்போம்
இயற்கை உயிர்காற்றைத்தரும் தாவர மரவகைகளை
யொவ்வொருவரும் வளர்த்தெடுப்போம்
இயற்கையை நட்பாக்கி நலமுடன் நல்ல வளமுடன்
இயற்கையொ டிணைந்து வாழ்வோமாக.



கவிஞர். ஓவியர் **மு. பிரகஸ்பதி, எம்.ஏ., எம்.ஃபில்.**
33/66, 67 தர்மராஜா கோயில் வீதி,
“ஈரோடு வளாகம்”, கோவை - 641001.
செல்பேசி : 9942046019

# நிலையான வாழ்வுக்கு...

46

*தாகம் எடுத்தோர்*
*தண்ணீர் அருந்துதலொன்றே*
*தாகம் தணியும் வழியாகும்*
*அன்புதனை மட்டுமே*
*அணிகலனாய் கொள்வதொன்றே*
*அமைதியான வாழ்வதனை பெறுகிறவழியாகும்*
*வாட்டும் வயிற்றுப் பசிக்கு*
*வயிராற உண்பதொன்றே*
*வாட்டத்தைப் போக்கும் வழியாகும்*
*பொங்கிவரும் கோபந்தனை*
*பொறுத்துக் கொண்டு போவதொன்றே*
*பொறுமைக்கு அழகாகும்*
*மாற்றுவழி அறியாமல்*
*மனம் குழம்பும் நேரத்தில்*
*மனதை ஒரு முகப்படுத்தி*
*தெளிவடைவதொன்றே வழியாகும்*
*நினைத்த எண்ணம் நிறைவேற*
*நீண்ட காலமே யானாலும் குறுக்குவழியை நாடாமல்*
*நேர்வழியொனறே*
*நினைத்ததை அடையும் வழியாகும்*
*நிலைத்த வெற்றி நிலையாகும்*
*பற்றி எரியும் நெருப்பு*
*பாதாளத்திலானாலும்*
*பற்றிப் படர்ந்து எரிவதோ*
*வானின் உயரம் நோக்கித்தான்*
*அறத்துணை மட்டும் நெஞ்சினிலே*
*அணையா விளக்காய்க் காத்துக்கொண்டு*
*நேர்மைக்காக நெஞ்சினை உயர்த்தி*
*நீங்கா வாழ்வை அமைத்துக் கொண்டால்*
*நிலையாகப் பிறவிப்பயனை*
*நீயும் இன்றே பெற்றிடுவாய்*




கவிஞர். **பீனிக்ஸ் முருகேசன்**
221/2A, அய்யப்பநகர், பொள்ளாச்சி மெயின்ரோடு,
ஈச்சனாரி, கோவை - 641021
செல் : **9443248947**

# 47 யார் மனிதன்?

மண்ணுலகில் பிறக்கின்ற மாந்தர் எல்லாம்
மனித உயிரே பெரிதென்பர்
சொல் அறிவும், நல்லறிவும், சுகமெனப் பட்டதாலே
நல்லதும் கெட்டதும் நாம் அறிவோம்
மானிடராய் பிறப்பதற்கு மாதவம் செய்ய வேண்டும் என
குன்றாத புகழை இந்தக் குவலயத்தில் கண்டுவிடவே
குன்றெனத் தெரிபவனே மனிதன் ஆவான்
தோன்றினால் புகழுடன் தோன்று - இல்லையேல்
தோன்றாமல் இருந்துவிடு என்றார் வள்ளுவர்
வீதியில் திரியும் விலங்குகள் போல் பிறந்து
இவ்வுலகில் தோன்றுபவன் மனிதன் தானா?
நாற்காலி சுகம் கண்ட நல்லவர் போல்
நாடெங்கும் பவனிவரும் அரசியல்வாதி போல் இல்லாமல்
சான்றோர் சில நாட்கள் வாழ்ந்தாலும் சிறப்பு அடைவர்
உச்சிமீது வானிடிந்து வீழ்ந்தாலும்
உண்மையை உரைப்பவனே கவிஞன் ஆவான்
யாராக இருந்தாலும் யாதொன்றைச் செய்தாலும்
நீதி நியாயம் சீராக இருந்திட வேண்டும்
நாராக இருந்தாலும் மலரின் நறுமணம் பெற வேண்டும்
வேராக இருந்தாலும் வெட்டி வேர் போல் இருத்தல் வேண்டும்
வேலோச்சும் காளையர்க்கு வீரமும்
விழி யோச்சும் கன்னியர்க்கு கற்பும்
நூலோச்சும் கவிஞர்க்கு எதுகையும் மோனையும்
கோலோச்சும் அரசருக்கு நீதியும்
கொழு வோச்சும் உழவர்க்கு உழைப்பும்
பாலோச்சும் ஆய்ச்சியர்க்கு தூய்மையும்
பக்குவங்கள் அவரவர்க்குப் புகழைச் சேர்க்கும்
மனிதன் மனிதனாக வாழ நல்ல மனது வேண்டும் கவிஞர்



**க. வேலுச்சாமி**
151, அன்னை இல்லம், கழுகரை,
மடத்துக்குளம் அஞ்சல்,
மடத்துக்குளம் வட்டம் - 642113
திருப்பூர் மாவட்டம்,
செல் : **7598016477**

# காலம் தரும் பாடம்

48

கீழ்த் திசையை
கிழித்து வெளிவரும்
கதிரவன்,
காலம் கடந்து
உதயமாவதில்லை.

ஓய்வின்றி சுழலும் பூமி
இமைப் பொழுதும்
இடைவெளி விட்டதில்லை.

சூரியக் கதகதப்பை
சூடேற்றுவதற்கு முன்,
சேவல், நேரம் தவறி
கூ வியதில்லை.

இரை தேடச் செல்லும்
வானம் பாடிகள்
சிறகுகளைச் சுருக்கி, நீட்டி
சோம்பல் முறித்ததில்லை.

தனித்து போகும் எறும்புகள்
கூட்டுறவால் வாழ
கோபித்து கொண்டதில்லை.

சோலைக் பூக்கள்,
காற்றோடு கைகோர்த்து
வாசம் எதற்கென, என்றும்
வாடிப் போனதில்லை.

காலத்தே விளையும்
பயிர்கள்,
காலம் கடந்து
விளைந்த தில்லை.

பாயும் நதிகள்
பள்ளம் கண்டு
பயந்து போனதில்லை.

நமக்குத் தேவையான
காலம்,
நலமறிந்து செய்கையில்,
நாம் மட்டும் ஏனோ.....
விழலுக் கிறைத்த நீராய்
வீணாகிக் கொண்டிருக்கிறோம்.
முடங்கி கிடந்தே
முகவரி யற்றுப் போகிறோம்.

**கோவை அன்பு**
33, மேட்டுத் தோட்டம்
வெள்ளலூர் சாலை
போத்தனூர்
கோவை - 23, 641023
காற்றலை எண்: 9942070880



# 49 பாவேந்தரின் பெண்ணியம்!

குலவிளக்கு நங்கையவள் குத்துவிளக்கு தானாவாள்
குலம்காக்க வந்தமகள் குதூகலம் தந்திடுவாள்
குணத்திலே அன்புகாட்டி குடும்பத்தைக் காத்திடுவாள்
அகத்திலே நிறைந்திடுவாள் ஆயுளுக்கும் நிலைத்திடுவாள்!

மங்கை நல்லாள் பின்தூங்கி முன்னெழுவாள்
மாக்கோலம் போட்டிடுவாள் மனைக்குமே விளக்காவாள்
கொத்துமல்லி நீர்தருவாள் கொத்துமஞ்சள் பூசிடுவாள்
சத்தான உணவு தந்து சந்ததம் காத்திடுவாள்!

கொண்டவன் மனமறிந்து குடும்பம் நடத்திடுவாள்
தென்பாண்டி நாட்டிலவள் தேர்ந்தெடுத்த முத்தாவாள்
பொன் வேண்டாள் பொருள் வேண்டாள்
பொன்மானாய் திகழ்ந்திடுவாள் அருள்வேண்டி இறைதொழுவாள்!

செவ்விதழில் நகைகூட்டி செந்தூர மிட்டிடுவாள்
செவ்வாயால் சிரித்திடுவாள் சிறப்புக்கள் செய்திடுவாள்
இலக்கியத்தைச் சுட்டியே இன்பமே கூட்டிடுவாள்
பாக்கியம் பெற்றமகள் துன்பத்தை ஓட்டிடுவாள்!

பெற்றெடுத்தப் பிள்ளைகளைப் பெருமைபட வளர்த்திடுவாள்
கற்றுணர்ந்த கல்விதனைக் கடமையாய்க் கொண்டிடுவாள்
உற்றுணர்ந்து ஓதிடுவாள் உள்ளுணர்வைக் காட்டிடுவாள்
பற்றுடனே நடந்திடுவாள் பண்புதனை விதைத்திடுவாள்!

*மாமன் மாமிக்கு மனமுவந்து பணிசெய்வாள்*
*இளகிய நெஞ்சத்தாள் இல்லத்தின் தலைவியாவாள்*
*பழகிய பல்லோரும் பார்த்துத்தான் மகிழ்ந்திடுவாள்*
*அழகிய பெண்ணாவாள் ஆற்றலில் குன்றாவாள்!*

*ஒருநாளும் திருநாளாம் ஒவ்வொன்றும் நன்னாளாம்*
*மறுநாளும் நன்னாளாம் மாதமெல்லாம் பொன்னாளாம்*
*எந்நாளும் மகிழ்ந்திடலாம் ஏற்றமே கண்டிடலாம்*
*பெண்ணாளும் பூமியிலே நாம்பிறந்ததே நல்யோகமாம்!*

*இலக்கிய வரலாறு இயம்பிடும் பெண்மைதனை*
*செதுக்கிய சிற்பமாய் நிறைந்திடுமே பெண்குலமே*
*அடுக்கிய சுற்றங்கள் ஆல்போல் வளர்ந்திடுமே*
*– இவ்வாறு*
*வடித்திட்டேன் கவிதனை வாழ்த்திடுவார் பாவேந்தருமே!*




இவண்
தமிழ்ச்சிற்பி **கு. பிரமநாயகம்**
வசந்தவாசல் கவிமன்றம்
கோவை-14

# 50 இளமையும் முதுமையும்

நில்லாது நில்லாது இளமை - ஓடி
வந்திங்கு நின்றதே முதுமை
கல்லையே செரித்தது இளமை - பச்சைத்
தண்ணீரே செரிக்காத முதுமை
உண்டு களித்தது இளமை - எதையும்
கண்டு களிக்குதே முதுமை
களியாட்டம் போட்டது இளமை - அதைக்
கனவாகச் சுவைக்குதே முதுமை
நாத்திகம் பேசியது இளமை - நல்ல
தத்துவம் பேசுதே முதுமை
பாதகங்கண்டு பொங்கியது இளமை - பரவா
யில்லை என்றது முதுமை
எடுத்தெறிந்து பேசியது இளமை - எதற்கும்
தலைபணிந்து போகுதே முதுமை
புத்திமதி கேட்காது இளமை - புத்தி
கூறியே சலிக்குது முதுமை
உச்சிமரம் ஏறியது இளமை - வாயிற்
படிஏறத் திணறுதே முதுமை
உடற்பயிற்சி செய்தது இளமை - இன்று
யோகாவை நம்புதே முதுமை
சுருட்டியே சீவியது இளமை - பின்பாதி
முடிக்கும் மைபூசுதே முதுமை
துள்ளாமல் துள்ளியது இளமை - துவண்டு
தண்டூன்றி நடக்குதே முதுமை
தம்பி என்றாகிய இளமை - ஒன்று
தாத்தா வென்றானதே முதுமை
படுத்ததும் உறங்கியது இளமை - உறக்கம்
வாராது புரளுதே முதுமை
போதாது என்றது இளமை - பொழுது
போகாதோ என்பது முதுமை
என்றுமே நில்லாது இளமை - இனி
எமலோக வழிகேட்கும் முதுமை



புலவர். **ஆ. காளியப்பன், எம்.ஏ., எம்.எட்,**
முத்தம்மாள் நிலையம், பூலுவபட்டி(அஞ்),
கோவை(மா) - 641101.
அலைபேசி: 9788552993.

### பெண் மனம்

*வீரம் விளைந்த மண்ணில் - பெண்*
*ஜான்சி ராணிபோல் மலரவேண்டும்!*

*நேரம் காலம் பார்க்காமல் உழைக்கும் - பெண்*
*சின்னப்பிள்ளை போல் மணக்க வேண்டும்!*

*வீரத்தின் நிழலாய், விளையாட்டியின் நிஜமாய் - பெண்*
*மேரிகோம் போல் வர வேண்டும்!*

*இளம் வயதில் போராடி சிறை சென்ற பெண்*
*தில்லையாடி வள்ளியம்மைபோல் வர வேண்டும்!*

*இளமை காலத்தில் பெண்கள் கல்வி கற்கா பெண்*
*மலாலாபோல் வீரத் திருமகளாய் வரவேண்டும்!*

*விஞ்ஞானத்தில் வீரமும், தீரமும் பல பெண்*
*கவிக்குயில் சவுலா போல் வர வேண்டும்!*

*சுதந்திரம் அடைய பாடுபட்டவர் பலர் - பெண்*
*கவிக்குயில் சரோஜினி போல் வர வேண்டும்.*

*சட்டமும் திட்டமும் பல படித்த - பெண்*
*பாத்திமா பீவீ போல் வர வேண்டும்!*

*மதுரை எரித்த வீரத்திருமகள் - பெண்*
*கண்ணகி போல பலர் வர வேண்டும்.*

*வெள்ளையனை எதிர்த்து போராடிய - பெண்*
*வேலுநாச்சியார் போல் வர வேண்டும்!*

*அமைதியின் சிகரம், ஆற்றலின் பெரும் கடல் - பெண்*
*அன்னை தெரெசா போல் வர வேண்டும்!*

*பெண்மனம் என்றும் மலர்போல் - பெண்*
*மகிழ்ச்சியாய், மலர்ச்சியாய் என்றும் வர வேண்டும்!*



தடாகம். **காசு. குணசேகரன்.**
18, முருகன் இல்லம், அன்னை அமிர்தானந்த நகர்,
டி.வி.எஸ். நகர், கோவை - 641 025.
பேச. **9344693329**

# 52 வல்லினமே... மெல்லினமாய்!

❀ பைந்தமிழ்ப் பெண்ணாள் பைய வருகிறாள்!
மைவிழிக் கண்ணால் மையல் தருகிறாள்!
பூந்தமிழ்ச் சொல்லை தேன்துளியாக மொழிகிறாள்!
செந்தமிழ் ஏடெங்கும் வான்மழையாய் பொழிகிறாள்!

❀ ஒரு பார்வையில் வல்லினம்!
மறுபார்வையில் மெல்லினம்!
எது...கைகளில் சிக்காத இடையினம்-ஆகா
சந்தமொழி சிந்துகின்ற நடையினம்-அவள்
கொஞ்சும்மொழி அத்தனையும் குயிலினம்! - இவள்
அஞ்சும்விழிப் பார்வையோ மயிலினம்!

❀ முத்துப்பல் விரிக்காத குறுநகை! - இவள்
மூப்பேதும் இல்லாத குறுந்தொகை!
கொட்டிக் கொடுத்தாலும் கிடைக்காத பெருந்தகை!
பாட்டில் வடித்தாலும் அடங்காத நெடுந்தொகை!

❀ அகத்தியன் வடித்தானே!
உனக்கென இலக்கணம்!
உன்னை அறிந்திடில்
அகன்றிடும் தலைக்கனம்!

❀ நீயே! முக்கனியாய் முத்தமிழாய் நிலைக்கணும்!
தாயே! என் தமிழினம் தலைதாளாது பிழைக்கணும்!
ஒரு சேயாய் உன் மடியில் கண் மலரணும்!
ஒரு பூ...வாய் தமிழமுதம் பருகணும்!
உலகெலாம் பொதுமொழியாய்
தமிழையே உரைக்கணும்!
என் முதுமையும் தமிழ் நுரையால் நரைக்கணும்!
என் முகவரியும் அகவரியும் தமிழின் நிழலில்
நடக்கணும்!



**சங்கர்பெருமாள்**
30A, பூந்தோட்டம் முதல் வீதி,
கணபதி, கோவை-6,
செல் : **9786022747**

# தளர்வுற்றாயோ தமிழா

53

ஏழு தனி நாடும் ஐந்து பேரரசும் கொண்டு இருந்ததமிழன்
இன்று நாடு இல்லாமல் வாழவழி இல்லாமல் நடு வீதியில்
இருக்கிறோம் என்று நினைத்து "தளர்வுற்றாயோ தமிழா"

உலகத்தில் உள்ள கடல் பகுதி எல்லாம் தன் கட்டுக்குள்
வைத்து இருந்த - தமிழன் கொற்கை பாண்டியன் வழி வந்த நாம்
இன்று ஐந்து கடல் மையில் தாண்டினாலே சுட்டுக் கொல்லுகிற
நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டோமே என்று நினைத்து
"தளர்வுற்றாயோ தமிழா"

பிற நாட்டை பிடித்து அடிமைப்படுத்தாமல்
பிற நாட்டின் செல்வத்தைக் கொள்ளை அடிக்காமல்
பிற நாட்டின் பண்பாட்டை, மொழியை அழித்து ஒழிக்காமல்
வெற்றி என்பது போர்களத்தில் தான் பிறரை அடிமைப்படுத்த அல்ல
என்று உலகுக்கு சொன்னவன் - நீ ஆனால் இன்றோ
24 மணி நேரமும் பிறர்க்கு அடிமையாய் வாழ்கிறோமே
என்று நினைத்து "தளர்வுற்றாயோ தமிழா"

கங்கை கொண்டவன் இமையத்தை வென்றவன்
கடாரம் வென்றவன் கலிங்கம் வென்றவன் - என்று
வீரத்தைப் போற்றி புறநானூறு என்ற இலக்கியம் படைத்தவன்
தமிழன்
இன்று 1½ லட்சம் தமிழ் உறவுகள் செத்த போது மௌனம் காத்து
நின்றோமே என்ற நினைத்து "தளர்வுற்றாயோ தமிழா"

ஆற்றைத் தடுத்து அணைகட்டி வாய்க்கால் வெட்டி வயல் உழுது
நெல் விதைத்து, நாற்று நட்டு, நீர் பாய்ச்சி, வளர்ந்த பின்
அறுவடை அன்று உழுதவனுக்குக் கொடுத்து, தனக்கு எடுத்தது போக
மீதியை நெல் குதிரில் சேர்த்து வைத்து பசி என வந்த
உலகத்துக்கே
சோறு போட்ட - நாம் இன்று மூன்று போகம் விளைந்த
நெற்களஞ்சியம்
காய்ந்து போனது என்று நினைத்து “தளர்வுற்றாயோ தமிழா”

மூன்று தமிழ்ச்சங்கம் வைத்து இலக்கியம், இலக்கணம், அறிவியல்
புவியல், பூகோளம், வரலாறு என 64 கலைகளுடன் தமிழ்
வளர்த்த - நாம்
இன்று அடிப்படைக்குக் கூட தமிழைப் பயன் படுத்தமுடியவில்லை
என்று நினைத்து “தளர்வுற்றாயோ தமிழா”
தளராதே நம் கையில் திருக்குறள் உள்ளது.
வரலாறு திரும்பும் “நாளை நமதே”

**ந. நித்தியானந்தபாரதி**
நிறுவனத் தலைவர்,
கணபதி தமிழ்ச் சங்கம்,
திருக்குறள் பயிற்சி வகுப்பு,
1, பெரியார் நகர்,
கணபதி கோவை - 6
செல் : 9842252051



# 54

# எழுத்தெல்லாம் தூயதமிழ் எழுத்தாகுமா?

இலக்கிய வளமும் இலக்கணச் செம்மையும்
இயல்பாக அறியாது எண்ணத்தில் உருவாகும்
இதுவென்றே தெரியாதும் ஏதோன்றும் புரியாதும்
எழுதும் எழுத்தெல்லாம் தூயத்தமிழ் எழுத்தாகுமா?

அலங்கார சிலைக்கும் அனுதின பூஜைக்கும்
அடுக்கடுக்காய் உச்சரிக்கும் அமுத மொழியை
அகிலமே ஆட்சி செய்தாலும் முதுமொழியில்
அணிகளே இல்லாத எழுத்தெல்லாம் எழுத்தாகுமா?

வாய்பேசா மனிதனும் வார்த்தைகள் தேடுவது
வழக்கமாக உச்சரிக்கும் பழக்கமான பழந்தமிழை
வடிவமே அறியாதவரும் செம்மொழியை ஒரு
வரி கூட எழுதாமல் தூயதமிழ் எழுத்தாகுமா?

உயிரும் மெய்யும் உணராத போதும்
உலகம் முழுவதும் சுற்றி வந்தாலும்
உயரிய மொழியைக் கற்றாலும் கூட தமிழை
உன்னதமாய் எழுதாத வார்த்தைகள் எழுத்தாகுமா?

எந்தத் தருணங்களில் எப்படி அமைந்தாலும்
எங்கள் தமிழை நிறைவாய் உணர்ந்து
எளிமையாய்ப் பயின்று இனிமையாய்க் கற்றால்
எழுதும் எழுத்தெல்லாம் எழுத்தாகுமே?.....!

**சிறு மழைத்துளி பூமியை பசுமையாக்கும்.**
**நம் தாய் மொழி நாளெல்லாம் நம்மை பெருமையாக்கும்.**




கவிஞர் **இரா. தன்மானம்**
கோயம்புத்தூர் - 641035.
அலைபேசி : **9244682859**

# 55 இயற்கையோடு இணைந்து வாழ்வோம்!

காலை கதிரவன் உதிப்பது நமக்காக
காற்றும், மழையும் உலக நன்மைக்காக
மாலை மறையும் ஒளியின் நிறமும்
வான வில்லின் ஏழு வண்ணமும்
சாலை மரமும் செடியும் கொடியும்
மலையும் குன்றும் குறிஞ்சி முருகனும்
பாலை மணலும் ஓடை நிழலும்
பயணம் செய்பவர் மகிழும் இயற்கை

பஞ்சம் இல்லாமல் உலகம் வாழ
பறக்கும் பறவை குரலில் இசை
நஞ்சை பயிரின் பசுமை புரட்சி
மக்கள் மகிழ்ந்து பாடும் இசை
மஞ்சள் மா பலா கனிகள்
மரங்கள் கொடுக்கும் கொடை உள்ளம்
மஞ்ஞையில் அமர்ந்த முருகன் மலையும்
அருள் கொடுக்கும் கொடை உள்ளம்

ஒன்றுடன் ஒன்று இணைந்து வாழ
இயற்கை கொடுத்த இனிய கொடை
நன்கு புரிந்து நாமும் வாழ
இயன்ற அளவு செயற்கை தவிர்ப்போம்
கன்று போல் துள்ளி விளையாடி
காணும் காட்சிகள் கண்டு ரசித்து
இன்று போல் என்றும் வாழ
இயன்ற அளவு முயற்சி செய்வோம்.

இயற்கை உரம் பயிர் விளைய
கதர் பை காய் வாங்க
உயர்த்தி நீர் தேங்க அணை
உயர்வு கொள்ள முயற்சி செய்வோம்
தயவு காட்டி தடைகள் அகற்றி
தரணி காக்க வளம் சேர்ப்போம்
செயற்கை இல்லா நாடாய் மாற்றி
இயற்கையுடன் இணைந்து இன்புற்று வாழ்வோம்



செந்தமிழ் வாணி **ச. மல்லிகா,**
எண். 70, பிரம்ம இல்லம் சக்திநகர்,
நேருநகர் மேற்கு, காளப்பட்டி. (அஞ்)
கோவை - 641048

# அது ஒரு கனாக் காலம்! 56

*அது ஒரு கனாக் காலம்!*
*அந்த ஒற்றைப் பட்டாம்பூச்சி...*
*பூக்களைத் தேடித் தேடி அலைந்தது!*

*அங்குமிங்கும் பறந்து... பறந்து...*
*செங்கல் சுவர் கட்டடங்களில் மோதியதில் - தன்*
*வண்ணங்களையும்..... கால்களின் பிடிமானங்களையும்*
*சிறுக... சிறுக... இழந்திருந்தது!*

*தன் உயிர் தோழிகளான*
*தேனீக்களையும் பொன்வண்டுகளையும் காணாது...*
*நகரத்துத் தெருக்களில்*
*சுற்றிச் சுற்றி வந்தது!*

*தன் சுயத்தை இழந்துவிடுவோமோ என்றெண்ணி...*
*தேனருந்தா பசி மயக்கத்தில்...*
*கண்கள் இருட்ட... வாகனங்களால் மோதிவிடாமல்*
*கட்டடங்களின் மதிற்சுவர்களின்*
*சூடு தாங்காமல்... நிழல் தேடி அலைந்தது...!*

*கூட்டுப்புழுவாயிலிருந்து... பட்டாம்பூச்சியாய்...*
*மறுபிறப்பெடுத்து...*
*வண்ணங்களையும்... சிறகுகளையும் பெற அது*
*போராடிய நாட்களை விட - இப்போது*
*மிகுந்த துயரம் மனத்தை அழுத்தியது...*

*அதன் மூதாதையர்கள்... வசந்த காலங்களில்*
*வகைவகையான மலர் கூட்டங்களில்...*
*தேன்களைச் சுவைத்துக் குடித்து*
*களியாட்டம் போட்டதை நினைத்து...*
*பெருமூச்சில்... கவலை கொள்கிறது!*

*மலர்களையும்... செடிகளையும்... தேடுகின்றது...*
*பல வகை வண்ணங்களோடு*
*மயக்கும் அழகாவிருந்தும்... வீடுகளில்*
*பட்டாம்பூச்சியை யாரும்...*
*வளர்த்ததாக வரலாறுகளில்லை!*




கவிஞர். **வி. ரூஃபஸ்**
130, கிருஷ்ணர்கோவில் வீதி,
இராமநாதபுரம், கோவை-641045
அ.பே. : **9629646345**


*முதல் பரிசு பெற்ற கவிதை*

## 57 போதையின் பாதையில்

போதையின் பாதையில்
போகின்ற மனிதா
வாழ்க்கைப் பாதையில்
நீ சரியாகப் பயணிப்பது
எப்போது?

சருகாய் நீ ஆகவா
புதைந்து கிடக்கும் புகையிலை
சருகுகளை நாடுகிறாய்

தீக்குச்சியைத் திரியில்
ஏற்றினால் தீபம்
சிகரெட் நுனியில்
ஏற்றினால் மரணம்

வெண்ணிற ஆடை
அணிந்து வருவது
உன்னை வாழவைக்கும்
தேவதையல்ல
மரணப் பாதையின் தொடக்கம்

எதிரியை உதடுகளோடு
முத்தமிடுபவனே
மரணம் புறவாயில்
வழியாக வருவது
தெரியவில்லையா?

ஒட்டிக்கொண்டுள்ள
ஒற்றை விரலை வெட்டி விடு
வெற்றி பெறு.



**மைதிலி யோகாராஜ்**
52/3, டி.நகர் 3-வது வீதி,
இராமநாதபுரம், கோவை - 641045.
அ.பே. : **9543132323.**

# பழமை போற்றுதும்

**58**

யாங்கண் புகல்வேம் எதுவினைப் பாடென்
றோங்கு புகழார் உயரியச் செந்தமிழ்
மொழியும் இனமும் முடம்பட் டனவே
தொன்மை மரபின் துகளறு முனைப்பால்
பட்டுப் பயின்று பழகிய நந்தம்
பண்பாட் டுணர்வும் பரிவும் கனிவும்
சென்ற தென்கோ! தெருமணல் அளையும்
சிறாஅர் போல தெளிவின் றுள்ளோம்!
புதுமை வேட்பும் பொய்வினை மயக்கும்
வாழ்முறை கெடுக்க வருமுதன் நோயாம்!
அற்றைப் பழமை அகம்புற வொழுக்கம்
ஈகை இரக்கம் இகலாக் கற்பும்
மூதுரைத் தெளிவும் முன்னோர் மொழியும்
பாழ்படச் செய்தோம் பயனில விளைத்தே!
அறிவியல் நுணுக்கம் ஆயிரம் ஆய்ந்தென்?
நெறிபிறழ் வொன்றே நிகழ்வுறக் கண்டோம்!
ஏந்தும் சூழலும் நுகர்பொருள் வாய்ப்பும்
முன்னைப் பழமை வாழ்வைத் தகர்க்கக்
கெடுவழி நடந்து கீழ்மையிற் படிந்து
வன்முறை யொன்றே வாழ்வெனக் கொண்டோம்!
உள்ளும் புறமும் ஒன்றெனப் படூஉம்
முன்னை நன்னெறி சால்பின் வழாஅது
அஞ்சுவ தஞ்சி அறிபவை யறிந்தே
இனப்புகழ் மானம் என்றும் சிறக்க
பழமைச் செறிவைப் பற்றி
உயர்வோம் வம்மின் ஓர்நிலை நின்றே!



கவிஞர் கொட்டப்பட்டு **ப. சக்திவேலன்**
28, ஐஸ்வர்யா எஸ்டேட்ஸ்,
கொட்டப்பட்டு, பொன்மலை,
திருச்சி - 620 004
செல் : **9443638947**

# 59 கடலே... நீயே சொல்

கலங்கிய கனவுகளை
கலக்கிய கடலே
கடல்நீர் உப்பின் காரணம் என்ன...?

படகு பயணியின் வியர்வை துளியோ
பால் வண்ண சேலையின் கண்ணீர் துளியோ...?

ஈழத் தமிழ் மரபை
இருள் மனம் குடித்தது ஏன்...?
உயிரைப் பலி கொண்டது சரிதானோ
உடலைத் துளைத்ததும் முறைதானோ
உயிரைச் சபித்ததும் நீ தானோ
வாழ்வைக் கலைத்ததும் நீ தானோ...?

சமுத்திரம் பெரிதன்றோ
சதிகளின் சாயத்திலே
உன் வண்ணமும் மாறிடுமோ

எட்டி நின்று பார்த்தாயோ
என்ன நீயும் செய்தாயோ
சொல் கடலே நீயே சொல்...!

மீன்களின் வாழ்க்கை நிலம் தொட துடிக்கிறது
மீனவன் வாழ்க்கை கடலில் துடிக்கிறது.

ஆழ்கடல் அமைதியிலே - உன்
அடிமனம் துடிக்கிறது
வாழ்வை நினைவில் கொண்டு
வழக்கினை முடிக்காதோ
சொல் கடலே நீயே சொல்...!



**- மெசி. சதீஷ் குமார்**
த/பெ. மெய்யப்பன், 294/17, செந்தில் நகர்,
கிருஷ்ணாபுரம், சோமனூர், கோவை - 641 668.
அலைபேசி : **96988 86771**

**60**

### நேரிசை ஆசிரியப்பா

கவினுறு கவிதைகள் கருத்துக் களஞ்சியம்
செவியுறு வழியினில் செதுக்கும் சிற்பங்கள்
புவியினில் எண்ணிலார் பொற்றமிழ்ப் படைப்பில்
நவின்றனர் நயமிகு நல்லிலக் கணந்தனில்!
சொற்சுவை பொருட்சுவை தொன்மையின் புலமையில்,
நற்சுவை நனிமிக நயங்களில் நல்கினர்
கற்பவர் களிகொளக் களங்கள் தோறும்
தெற்றெனத் தேர்ந்தே தெரிந்திடச் செய்தனர்
சித்தன்ன வாசல் சிற்பங்கள் போலச்
சத்துள வண்ண வார்ப்பினில் தந்தால்,
கொத்தாய் மலரும் கொடிப்பூ மணமாய்;
முத்திரைப் பதிக்கும் மூதறி யணிநலன்!
உவமை உருவகம் உருக்கிச் செய்த
குவளை மலர்போல் குமிண்சிரிப் பினிலே
தவழும் தனித்தமிழ் தங்கத் தாமரை!
உவத்த லாலே உயர்ந்திடும் என்றுமே!
காலக் கண்ணாடி கவிதை யாகும் -
போல வாழ்ந்திடப் புதுப்பொலி வூட்டும்
சாலப் பரிந்து சான்றோர் பெயரை
ஆலம் விழுதாய் ஆண்டுபல வளர்த்திடும் -
காகிதம் என்றே நினையாமல் கற்பனை
வளமதை யாய்ந்து மன்றத் தமிழை
ஒளிரச் செய்தால் ஓங்கும்!
காலமுணர் கவிதைகள் காகிதம் அல்லவே.



நல்லாசிரியர் - புலவர் **ப. பங்கசம்மாள்**
எண் : 6, நான்காம் குறுக்குத்தெரு,
ஆசிரியர் குடியிருப்பு, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்,
மூலகுளம், புதுச்சேரி - 605 010
அலைபேசி : **0413 - 2293372**
செல் : **9943528716**

61

# முடிசூடிய மாமன்னன் இராசேந்திர சோழன்

புலிக்குப் பிறந்தது பூனையாய் ஆமோ?
வலிமிகு ராசராசன் பெற்ற - புலிக்குட்டி
ஆயிரத்து நாற்பதிநான் காமாண்டில் பேரரசன்
ஆயினான்; பேர்பெற்றிட் டான்.

ராசேந் திரனவனை வீரனாக்கி விட்டவன்
ராசராசன்; மாதண்ட நாயகனாய் - ராசேந்
திரனை இளம்வயதில் வேங்கியுடன் கங்க
அரசுக்கும் முன்நிறுத்தி னான்!

ஈழத்துப் போரினிலும் சேரனை வென்றபோதும்
வேழம்போல் முன்சென்ற தன்மகற்குச் - சோழனவன்
“பஞ்சவன் மாராயன்” என்னும்சீர்ப் பட்டத்தை
விஞ்சிடு மாறளித் தான்.

மலையம் துளுவமுடன் கொண்கனெனும் நாடு
நிலையான வெற்றிமிகக் கொண்டு - அலைந்தோடச்
சேரனை யோட்டினான் ராசேந் திரன்துணையில்
வீரத்தில் சிறந்தநல் வேந்து!

மேலைச்சா ளுக்கிய மன்னன்சத் யாசிரனை
வாலைக் குமரன்ரா சேந்திரன் - பாலைபோல்
நாட்டையாக்கி வென்றிட்டான்; பீமனின் பாகிநாடு
சீட்புலி நாட்டையும்வென் றான்.

நீர்நிலை தன்னைப் பெருக்கினான்; சோழகங்கம்
பேர்ஏரி வெட்டினான்; கங்கையைப் - போர்தனில்
வென்றவன் கங்கைகொண்ட சோழபுரம் உண்டாக்கி
பொன்றாத ஆட்சிதந் தான்!



**த. கருணைச்சாமி, பி.இ.,**
47/25 காந்தியார் சாலை,
என்.ஆர்.டி. நகர், தேனி - 625 531.
செல் : **9486736639**

# சுதந்திரத்தால்? 



சுரண்டுகின்ற கூட்டமெல்லாம் சேர்ந்து நின்று
சூறையா டுமிந்தியாவாய் காணு கின்றோம்
திரள் திரளாய் கூடிநின்று கூட்டம் போட்டு
கொள்ளையின் வழிகளையே வகுத்து நாளும்
இருண்டதொரு இந்தியாவாய் இருக்க வைத்து
ஒளிர்கின்ற நாடாக உருவ மைத்து
பெருமையாய்ப் பேசுகின்ற ஊடகங் கொண்டு
பித்தலாட்ட பேர்வழிகள் பிழைக்கச் செய்வார்

- 2 -

நாடெங்கும் காணுகின்ற பாமரர் வாழ்வில்
நற்பயன்கள் நாட்டினிலே நடந்த துண்டா?
வீடெங்கும் ஒளிர்கின்ற இருளின் வாழ்வை
மீட்டெடுக்கும் திட்டங்கள் செய்த துண்டா?
ஓடெடுத்து வீதியெங்கும் உழன்று அலையும்
விளைவிக்கும் பிச்சையோர் வீழ்ந்ததுண்டா?
பேரெடுத்த சுதந்திரத்தைப் பெற்ற தாலே
பெருமேழை வாழ்வினிலே ஒளிர்ந்த துண்டா?

- 3 -

சாலையில் படுத்துறங்கும் பாமரர் வாழ்வில்
பட்டொளியாய் படர்ந்துநின்ற காட்சி உண்டா?
நாள்தோறும் உண்டுறங்கும் மாந்தர் வாழ்வில்
நலந்தருமிவ் வின்பமிங்கே நடந்த துண்டா?
காலந்தோ றும்காணும் வறுமை வாழ்வை
கடமை கொண் டிங்கேவாழ் கனிந்த துண்டா?
சோலையாய் புகழ்மணக்கும் செல்வச் செழிப்பைச்
சுதந்திரத்தால் ஏழைகள் பெற்ற துண்டா?

- 4 -

மொழிவழிமா நிலமாகப் பிரிக்கப் பட்டு
முழுமையாய் ஐம்பத்தா றாண்டு முடிந்தும்
மொழிப்பேசும் மக்களெல்லாம் தாய்மொழி கற்க
முடியாமல் வேற்றுமொழி வாழ்வில் நிற்க
வழிவழியாய் வாழ்கின்ற கலைக ளெல்லாம்
வாழ்விழந்து மறைகின்ற கால மாக
இழிநிலையைக் கொண்டுவந்த சுதந்திரத் தாலே
இருக்கின்ற மொழிகளெல்லாம் இறந்து போகுமோ




பாவலர் **இரா.கு. அரங்கசாமி. க.இ.,**
கர்நாடகத் தமிழ்மொழிச் சிறுபான்மையினர் நலப்பேரவை,
மதுரை ஸ்ரீ நம்பெருமாள் உயர்தொடக்கப்பள்ளி வளாகம்,
ஆண்டர்சன்பேட்டை, கோலார் தங்கவயல் - 563 113
கர்நாடகம்.
செல் : 9341733829

# மலைகள் நனைந்தன

63

மலைகள் நனைந்தன மழையாலே - வண்ண
    மயில்கள் சிலிர்த்தன குளிராலே;
இலைகள் வளர்ந்தன நீராலே - கமலம்
    இதழ்கள் விரித்தன கதிராலே;
சிலைகள் குளிர்ந்தன பாலாலே - ஏழைச்
    சேய்கள் துடித்தன பசியாலே;
அலைகள் நிறைந்தன காற்றாலே - சின்ன
    அணில்கள் மகிழ்ந்தன பழத்தாலே.

கதைகள் பிறந்தன எழுத்தாலே - நெல்லின்
    கதிர்கள் கனத்தன வளத்தாலே;
கிளிகள் கொஞ்சின வாயாலே - குழந்தை
    கைகள் நடுங்கின பனியாலே;
வளைகள் பெருகின எலியாலே - நாட்டில்
    நிலங்கள் அழிந்தன வீட்டாலே;
பலிகள் குறைந்தன எதிர்ப்பாலே - உலகில்
    படைகள் பெருகின போராலே.

பயிர்கள் வளர்ந்தன ஆற்றாலே - நல்ல
    பயன்கள் கிடைத்தன உழைப்பாலே;
முயல்கள் ஒளிந்தன பயத்தாலே - அரசர்
    முடிகள் அகன்றன எதிர்ப்பாலே;
குயில்கள் பறந்தன சிறகாலே - மூங்கில்
    குழல்கள் இசைத்தன வாயாலே;
உயிர்கள் அழிந்தன பசியாலே - பறவை
    ஒலிகள் எழுப்பின மகிழ்வாலே.
(மா - விளம் - காய் - தனிச்சொல்
    - மா - விளம் - காய்)



கவியருவி **இராம. பரஞ்சோதி**
8/285, இராமநாதன்நகர்,
பொழிச்சலூர், சென்னை - 600 074.
தொ.பே : **044 - 22632437**; அ.பே : **99401 43611**

# 64 சிந்தித்துப் பாரு

**(கப்பல் பாட்டின் இசை)**

ஏலேலோ.... ஏலேலோ.... அய்லசா
கேடு கெட்ட மானிடரே கேளுங்கள் நான் சொலலுவதை
கூடுவிட்டு உயிர்போனால் கூடவரும் பொருளென்ன?
பாடையிலே போகையிலே கூடையிலே பொரி கடலை
வழிநெடுக வீசிடுவார் பழிபாவம் பின்தொடரும்

அணுகுண்டு ராக்கெட்டு செய்து விட்டபோதும்
பணங்கொண்டு பாரரெல்லாம் ஆண்டு விட்டபோதும்
சினங்கொண்டு சனங்களைச் சீரளித்தபோதும்
உனக்குண்டு ஆறடி மண்ணிந்த மண்ணில்
(ஏலேலோ... அய்லசா)

அநியாயம் அரசாச்சு, ஆதண்டம் சதிராச்சு
இனி நியாயம் வாழாது, இருப்பதுவும் நிலையாது
சனியாட்சி வந்தாச்சு, சத்தியமும் கெட்டாச்சு
மனிதகுலம் பூண்டோடு மறையுங்காலம் வந்தாச்சு

என்னதான் முன்னேற்றம் ஏற்பட்டபோதும்
உன்னையே நீ கொல்லும் தொழிலிதனையாரும்
உன்னதம் என்றுரைக்க ஒப்பவே மாட்டார்
பின்னையேன் உனக்கிந்த சின்னமதி தம்பி
(ஏலேலோ... அய்லசா)

சந்தையிலே கூடுங்கூட்டம் சடுதியிலே மறையுங் கூட்டம்
மந்தையிலே ஆட்டுக் கூட்டம் மடிவதற்கு சேருங் கூட்டம்
சிந்தையிலே சிறிதேனும் செம்மையிலாத் திருக் கூட்டம்
விந்தையிலும் விந்தையடா விளைவறியா மனிதக் கூட்டம்

சோறுண்டு சுகமண்டு நாமுண்டென்றெண்ணி
வேறொன்றும் இல்லையென வாழ்வோர்க்கு மண்ணில்
மாறுண்டு ஊறுண்டு வேறின்னும் உண்டு
கூறுண்டு போனபின் உணர்வாரே கண்டு
(ஏலேலோ... அய்லசா)

பாராளர் பேராசை பகுத்தறிவுக் கெதிராசை
போராளர் குரலோசை பூமியிலே எதிரோசை
சீராளர் சொல்லோசை செகமதிலே புல்லோசை
ஊராளர் உரைவோசை உப்பில்லா பிரயாசை

ஆதிக்கவெறி கொண்டு அநியாயம் செய்து
சாதிக்கப் போகின்ற காரியம் சொல்லு
பாதிக்கப்பட்டவர் பழிபாவமுன்னை
சோதிக்க வைத்திடும் சிந்தித்துப்பாரு
(ஏலேலோ... அய்லசா)

ஒண்டிப்புதூர் **மு. நடராசன்,**
16/2, ஸ்ரீ நகர், ஹோப்காலேஜ்,
பீளமேடு, கோவை - 641 004.
தொ.பேசி : 0422 - 4397776
அலைபேசி : **9345890980**



# 65 இனியொரு சுதந்திரம் வேண்டும்?!

இனியொரு சுதந்திரம் வேண்டும் ! - அதை
இமைபோல் காத்திடல் வேண்டும் ! - (இனி)
இல்லாமை நீங்கிடல் வேண்டும் ! - நாம்
எல்லாமும் அடைந்திடல் வேண்டும் !
ஏழ்மை அகன்றிடல் வேண்டும்! - இங்கு
ஈகை தழைத்திடல் வேண்டும் !
ஏந்திடும் கைகள் வேண்டாம் ! - (இனி)
இயங்கிடும் கைகளே வேண்டும் !
இழிந்தவர் எவரும் இல்லை ... இது
ஏற்றம் பெற்றிடல் வேண்டும் ! - (இனி)
கொள்கைகள் பெரிதென வாழும் - நல்ல
கூட்டங்கள் தோன்றிட வேண்டும் !
சாதிகள் மறைந்திடல் வேண்டும் !-எங்கும்
சமத்துவம் பெருகிட வேண்டும் !
மதத்தின் பெயரால் நிகழும் - பல
மடமைகள் ஒடுங்கிடல் வேண்டும் ! - (இனி)
லஞ்சப்பேய் ஒழிந்திடல் வேண்டும் !-இதை
லட்சியமாய் கொண்டிடல் வேண்டும் !
தொல்லைகள் தந்திடும் எல்லைத்-துயர்
தொலைந்தே போய்விடல் வேண்டும் !
சமரில்லா உலகம் வேண்டும் ! -நம்
சனங்கள் மகிழ் ந்திட வேண்டும் ! - (இனி)
சுதந்திரக் காற்றை நுகர்ந்திட ... இந்தச்
சூட்சுமம் தெளிதல் வேண்டும் ! - (இனி)



**சோ.ம. செயராசன்**
20/51, அம்மன்நகர், மாச்சாம்பாளையம்,
சுந்தராபுரம், கோவை 641024.

# குமரி எழில் 66

*முக்கடலும் மோதியலை முகிழ்ந்து கரைவந்து தொட்டுத் தொட்டுப் போகும்*
*முப்பாலும் மொழிந்த அய்யன் அறமு ரைக்கும் குமரியின் தோற்றம்*
*காலை மாலை கதிரவன் தோன்றி கண்கவர் காட்சி நல்கும்*
*செந்நிறச் செவ்வாழை செழுமட்டிப் பூங்கதலி செறிந்து நிரம்பிக் காய்க்கும்*
*குறிஞ்சியும் முல்லையும் மருதமும் நெய்தலும் மருவி நின்று மயக்கும்.*
*குளிர்நீர் நதிகளும் குதித்தாடி குன்றுமலை தாவி நின்று கொட்டும்*
*குமரியில் நீர்வளமும் நிலவளமும் நிலவி நின்று நெளிந் தசைந்தாடும்*
*மாலை போழ்தறிந்து மஞ்ஞை தோகை விரித்து நின்று ஆடும்*
*சோலைவளம் மலர்முகிழ்ந்து சுகந்த மணம்தந்து வீசி வந்து போகும்*
*வேலை கரைதனில் வீழ்ந்து வீசிநிதம் நுரைகள் வந்து போகும்*
*கோலவெழில் கொஞ்சுத்தமிழ் பிஞ்சு மழலை மலர்ந்து தந்து மகிழும்*
*சாலநின்ற நெற்கதிர்கள் முற்றிச் சாய்ந்து அசைந்து அசைந்து ஆடும்.*
*வேழம் வனப்பகுதி எல்லாம், வேங்கை யொலிகேட்டு விரைந்து ஓடும்.*
*சாலை மரமோ நிழலது தந்து சாய்ந்தசைந் தசைந்து ஆடும்.*
*சோலை மலர்கள் குவிந்து நின்று காலைக் குறியைக் காட்டும்.*
*நீலக் குவளை மலர் கூட்டம் நீர்பரப்பில் நின்று ஆடும்.*
*கோழி தன்குஞ்சொடு தரைகீறிக் கொத்திக் கொத்தி இரை தின்னும்*
*மந்திகள் குட்டியொடு மரந்தாவிக் குதித்துத் தொங்கி நின்று தாவும்*
*இந்துமதி தண்கதிரால் இருள்நீக்கி வெண்ணிலவை உலகுக் காட்டித் திகழும்.*
*நீரோடை ஓலமிட்டு காடுமலை மீது தாவி யோடி அழுகூட்டும்*
*ஆவெலாம் மடிசுரந்து பால்தந்து அன்னையின் இடம்பிடித்து நிற்கும்*
*பூக்களெல்லாம் மலர்தூவி புவிநின்று இறைதனையே என்றும் வாழ்த்தும்.*

*கால மெல்லாம் கண்டு மகிழ கலைகள் மலிந்த குமரி*
*கோல வெழில்கள் குவிந்த குமரி கண்டு நிதமும் மகிழ்வோம்!.*




டாக்டர். **திருக்குறள் கேசவசுப்பையா,**
ஏ.125, அரசு அலுவலர் குடியிருப்பு, காந்திநகர்,
நாகர்கோவில் - 629002.
அ.பே. : **9443580797**

# 67 உழைப்போம் உயர்வோம்!

தொழுவத்தில் பிறந்தாலும்
தொழுதிடும் கடவுளானார்
எல்லோரும் நேசிக்கும்
ஏசு பிரான்
தாழ்வும் ஒருநாள்
உயர்வுபெறும் நம்பிக்கையில்
வாழ்வுபெற போராடு.

தொழு நோயாளிகளின்
அழும் கண்ணீர் துடைத்து
அன்பு காட்டினார்
அன்னிய மண்ணில் பிறந்த
அன்னைதெரசா
தொழ வேண்டிய தெய்வங்கள்
அன்னை தந்தையர்க்கு
துன்பத்தைத் தந்திடாமல்
அன்பைக் காட்டு.

தொழுதுண்டு பின் செல்லல்
சரியன்று
உழுது பயிர் வளர்த்து
உயிர் காக்கும் தொழில் நன்று
உழைப்பால் நாட்டை
வளப்படுத்துவோம்
சுதந்திரப் பயிர்களுக்குள் ஊடுருவிய
ஊழல் களைகள் பறித்து
பாரததேவியைக்
குணப்படுத்துவோம்.



**வீ. உதயக்குமாரன்**
வீரன்வயல் 614738,
ஜாம்புவானோடை அஞ்சல்,
திருவாரூர் மாவட்டம்,
கைப்பேசி: **9962861594.**

# செயத்தக்க செய்! 68

செயத்தக்க செயல்களை நாம் செய்ய வேண்டும்
செயத்தகாத செயல்களை நாம் நீக்க வேண்டும்!
அயர்வின்றி அருந்தமிழைப் போற்ற வேண்டும்
அரியணையில் அமர்த்தியதை வளர்க்க வேண்டும்!
பெயல்மழையாய்ப் பெற்றோரைப் பேண வேண்டும்
பெரியோரைப் பணிவுடனே வணங்க வேண்டும்!
வயல்பயிராய் மங்கையரைக் காக்க வேண்டும்
வாழ்க்கையிலே சமஉரிமை கொடுக்க வேண்டும்!

கயல்தன்னில் செழித்திருக்கும் தாம ரையாய்க்
கல்வியிலே சிறந்தோங்கி ஒளிர வேண்டும்!
செயத்தக்க நல்லறங்கள் காண வேண்டும்
சீரழிக்கும் சாதி மதம் ஒழிக்க வேண்டும்!
அயர்வு தரும் தீண்டாமை அகற்ற வேண்டும்
அனைவருமோர் குலமாக வாழ வேண்டும்!
உயர்வழிக்கும் மடம், மூடம் போக்க வேண்டும்
உயர்வுதாழ்வு கருதாத உள்ளம் வேண்டும்!

கயவர்கள் ஆட்சியினை நீக்க வேண்டும்
கற்றறிந்த நல்லோரின் ஆட்சி வேண்டும்!
பயனுடைய தொழில்வளத்தைப் பெருக்க வேண்டும்
பன்னாட்டார் தொழில்செய்தல் தடுத்தல் வேண்டும்!
துயர்நீங்கி ஈழமக்கள் வாழ்வ தற்குத்
துணையாகத் தோள் கொடுத்து நிற்கவேண்டும்!
முயற்சியுடன் பகுத்தறிவைப் பரப்ப வேண்டும்
முன்னேற்றப் பாதையினை வகுக்க வேண்டும்!

தயவின்றி ஊழலினை ஒழிக்க வேண்டும்
தவற்றுக்குத் தண்டனைகள் தரவே வேண்டும்!
மயக்கிமக்கள் உயிர்மாய்க்கும் மதுக்க டைகள்
மன்பதையில் இல்லாமல் செய்தல் வேண்டும்!
“மயக்கமுற்ற தாயவளின் பசியைக் கண்டும்
மறவழியில் செல்லற்க” குறளின் கூற்றை
நயமுடனே நம்நெஞ்சில் பதித்து வைத்து
நல்வினைகள் ஆற்றி நாட்டை உயர்த்துவோமே!



ஆக்கம்,
பாவலர். **தேவகி ஆனந்து**
20. மல்லிகைத்தெரு, வானொலி நகர்,
உழவர்கரை, புதுச்சேரி - 605 010
செல் : **9486268398**

69

# நிஜம் .....

வழியனுப்பும்
ஒவ்வொரு தருணத்திலும்
சம்பிரதாயமாகவோ,
சந்தேகமாகவோ
பரிமாறப்படும்
பழகிய வார்த்தைகளாய்...
உடம்பைக் கவனி
ஊர்போய் எழுது...
தொலைபேசு,
அலைப்பேசி அழை...
எங்கேயும்,
எப்போதும்,
எவரேனும்
சொல்லிக்கொண்டு
தானிருக்கிறார்கள்...
நிலையில்லா வாழ்க்கை இது
என்பதை
நிமிடத்திற்கு நிமிடம்
நிரூபிக்கிறது...
பயணிக்க நேரும்
ஒவ்வொரு முறையும்...
ஒவ்வொரு வருக்கும்...



என்றும் அன்புடன்
**கூரா. அம்மாசையப்பன்,**
சேலம் உருக்காலை,
சேலம் - 30.
கைப்பேசி : 8608119295
9790001558

## மனிதம், மனிதமாவது எப்போது?... 70

கணினியால் உலகமே கைகளுக்குள் அடக்கம்
காலமாற்றத்திற்குக் காரணமாய் இடைநில்லாப்
பேருந்துப்பயணமாய் கைகளுக்குள் உலகம் கண்ணிமைக்கும்
நேரத்தில்
கையெழுத்து மறந்துபோகும் அவலம்

செல்போனின் வருகை கண்ணைப்பறிக்கும்
வண்ணங்களுடன்
செய்திப் பரிமாற்றத் துரிதத்திற்குக் காரணம்
செல்களுக்கு ஏற்படும் கதிர்வீச்சு அபாயம்
செதிலரித்தது இளைஞர்களின் நேரம்

இணையதளத்தின் வருகை இணையில்லா மகிமை
இயக்கங்களுக்குக் காரணம் இயந்திரத்துடன் உறவு
இல்லாமல் செய்தது புத்தகத் தேடல்
இழந்து போனது வாசிப்பு

வாகனங்களின் பெருக்கம் வாகன நெருக்கடி
விண்ணை முட்டும் பேரிரைச்சல் ஒலிமாசாய்
வசதிக்குக் காரணமாய் விடைபெற்றது கால்நடைப் பயணம்
வழி வகுத்தது நடைப்பயிற்சிக்கு

வலிமையான மருத்துவ ஆலோசனை வாழ்க்கைக்கு
ஆதாரமானது
வாகனங்களின் நீராடலோ நீர்நிலைகளில் நீச்சல் குளமாய்
வளமான தண்ணீரில் கலந்தது நச்சு
வானில் புகைமாசு ஓசோனில் ஓட்டை
வையமே நடுங்கும் அபாயம்

இயந்திரங்களின் வருகை இயக்கமின்மையில் மனிதன்
இயந்திரங்களுடன் நேசம் மனிதவுறவுகளில் விரிசல்
இயல்பு வாழ்க்கை ஆடும் ஊசலாய்
இணையிலா முதியோரோ முதியோர் இல்லங்களில்

அயல் நாட்டாரின் வருகை அயல்மொழிகளின் ஆதிக்கம்
ஆட்டம் கண்டது அசைகின்ற ஆணிவேராய்
ஆழமற்ற சல்லிவேராய் திண்டாடும் திரிசங்கு சொர்க்கமாய்
அடியற்ற அஸ்திவாரக் கட்டடமாய்

வானொலி, தொலைக்காட்சிகளின் அழகிய வருகை
வாய்மொழிப் பாடலாம் தாலாட்டை மறந்த தாய்மார்கள்
அரவை இயந்திரங்களால் மாவாட்டுதலை மறந்த
மனையாட்டிகள்
அம்மி அரைத்தலை அறியாப்பெண்டிர்

குளிர்சாதனப் பெட்டியின் வருகை மனிதனைக்
குனியவைத்தது
குதூகலத்துக்கு இழைத்தது குறைவில்லா துயரம்
இயந்திரங்களால் மாந்தர் இயக்கமே பறிபோனது
இணையில்லாவாழ்வு பறிபோகும் அவலம்

அசுத்தக் காற்றால் அழுக்கடைந்த இதயம்
அகலாத ஆஸ்துமாவாய் அடித்தளம் இட்டது
ஆங்கிலப் பள்ளிகளின் பெருக்கம் அரசுப்பள்ளிகள் முடக்கம்
அழகு தமிழின் இனிமை விடைகொடுக்கும்

துணி துவைக்கும் இயந்திரத்தின் வருகை
துவைப்பவர் தொழிலுக்கு உலைவைத்து சாபக்கேடு
நெகிழியின் (பிளாஸ்டிக்) வருகை பொறையின் சிகரமாம்
நிகரற்ற பூமியையே நடுங்கவைக்கும் நிலநடுக்கம்

பூமிக்கு அடியில் சென்று மக்காதகுப்பை
புண்ணிய பூமியில் குழந்தைகளோ குப்பைத்தொட்டியில்
கிராமத்து மக்களின் நகர வசிப்பிட நாட்டம்
கிராமப்புறக்கலைகளை நலியச் செய்யும் அவலம்

நதிகள், குளங்கள் மாயமான காலமிது
நகரத்து விளைநிலங்கள் கட்டடங்களான உருமாற்றம்
நகர வாழ்க்கையாக மாறும் சுற்றுச்சூழல் சீர்கேடு
இல்லத்துக்கடமைகளை மறந்த மாதர்களின் கட்டாயத்தேவை
இனியவாழ்வு தேடி வேலைக்குச் செல்லுதல்

இன்பம்தரும் குழந்தைக்குக் கிட்டாத பாசம்
இனியமது குடித்த வண்டுகளின் மயக்கம்
மனதிற்கினிய பாடலை உருவாக்கிய புலவர்கள்
மாணவிகளை மாசாக்கியது மது

மட்டில்லா ஆனந்தம் குழந்தை மது அருந்துதல்
மற்றோருக்கு ஏற்படும் அருவருப்பும் வெறுப்பும்
மரியாதை இழந்துவரும் மானுட சமுதாயம்
மனிதம் மனிதமாவது எப்போது?....

ஆள்வோர்க்குக் கிடைக்கும் அதிக வருமானம்
அனைத்துக் குடிகளையும் அழிக்கும் அநியாயம்
மதுவை ஒழிக்க நினைக்காத அரசியல்வாதிகள்
மதுவை ஒழிக்கும் மணிமேகலைகள் தோன்றுவது எந்நாளோ?

சாதியைச் சாடும் ஔவையார்கள் அவதரிப்பது எந்நாளோ?
சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் சுழற்காற்று சுழன்றடிப்பது
எந்நாளோ?
யோகப்பயிற்சியை நேசிக்கும் திருமூலர்கள் உதயமாவது
எந்நாளோ?
பஞ்சபூதங்களைப் பவ்யமாய் பாவிக்கும் பாவைகள்
தோன்றுவது எந்நாளோ?
தலையைக் காக்கும் கடன் தங்களுக்குத்தானே
தலைக்கவசத்திற்குக் கட்டாயம் பகரலாமோ

செயற்கையால் வந்தது இயற்கைக்கு மாசு
கார்பைட் கற்களால் பழுக்கும் மாங்கனி
காரீயம் மோனோசோடியம் குளூட்டோமேட்டின்
துரித உணவுகளில் கலக்கும் வியாபார உத்தி நூடுல்ஸில்
பூச்சிக் கொல்லி மருந்துகளால் முந்திரிகளுக்குக் கேடு
பிள்ளைகள் உருமாறிப் பிறந்த சோகம்
பிறர்நலம் பேணும் காலம் வருவது எப்போது?
மனிதம் மனிதமாவது எப்போது?....




செல்வி. **தோரணா. ம.,**
பதினொன்றாம் வகுப்பு 'ஆ' பிரிவு,
நிர்மலா மெட்ரிக். மேல்நிலைப் பள்ளி,
கோவை - 18.
அலைபேசி : **8508236695**

# 71 தமிழே நீ வாழி!

வாரணக் கூட்டமுடன் வளர்மலை நாட்டுடனே
தோரண மரம்இயற்கை தூவியதாய்த் தொடருடனே
ஆரணங் காய்கனிகள் ஆர்த்திடும் பறவையுடனே
நீரினம் நெடுமழையாய் நிறைவானம் மலிந்ததென
பாரினத் தமைவார்க்குப் பண்புவில் அம்புமென
சேரினச் சேரநாட்டுச் செந்தமிழே வாழியவே!

நீருடை நெடுங்கழனி நிறைமண்ணில் ஊன்றிநின்று
போருடை வீரர்என்று பொலிபசும் நிறப்பயிர்கள்
சீருடை கொண்டதாகச் செழுமையாய் விளைச்சலுறும்
தேருடைக் குவியலாகத் திரள்பலன் மகிழ்ச்சியுடனே
சீறிடும் புலிக்கொடியை சேர்த்திட்ட சிறப்புமிகவே
கற்கைபாண் டியநாட்டில் கயல்கொடி பறந்திடவே
கொற்கைஒண் முத்துப்புகழ் குவிதமிழே வாழியவே!

ஏர்முனை நிலம்உழுது பண்படுத்தும் எழுதுகோல்
கூர்முனை ஏடும்உழுது கவிபடைக்கும் புலவரின்
ஈரடியாய் நாலடியாய் எண்ணில்லாக் கவியடிகள்
சீரடியாய்ச் செப்புகின்ற சிறப்புடைக் காவியங்கள்
தாரொடு மணம்வீசத் தரணியிலே நிலைநின்று
கூறிடும் புகழ்த்தமிழின் கொற்றவையே நீவாழி!

கலைச்சிற்பி **வ.வெ.நா. இராமன்,**
4, இராகவேந்திரா தெரு,
பாலாஜி நகர், திருப்பரங்குன்றம்,
மதுரை - 625 005.
அலைபேசி : **9442362071**
தொலைபேசி : **04652 - 2483249**



ஏமன் நாட்டில் பல்கலைக் கழகத்தில் 147 மாணவர்களைத் தீவிரவாதிகள் படுகொலை செய்தமைக்கு

72

# இரங்கல் பாமாலை

ஏனிந்தக் கொலைவெறி தோழர்களே - நல்ல
இளைஞர்களைக் கொல்லல் ஏதுக்கையா - ஐயா
மாற்று மதத்தினர் வாழக் கூடாதென்று
மதத்தலைவர் சொல்லிச் சென்றாரா - உங்கள்
மனத்தினில் ஈரமே இல்லையா - கொடுங்
கூற்றுவன் போலவே மக்களை அன்பின்றிக்
கொல்லுதலே உங்கள் மதமா - என்ன
கொடுமை யையா பெருங் கொடுமை

பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவரைப்
பரிவின்றிக் கொன்றுதீர்த் திட்டீரே - என்ன
கருதியித் தீச்செயல் செய்தீரே - என்ன
வல்வினை யோவிந்த மாணவரைக் கொல்லும்
வன்முறையே உங்கள் மதமா - இதில்
வரவென்ன கண்டீரோ தோழரே

இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டில் கூட
இன்னும் மதவெறி ஆட்டமா - இதில்
மன்னுயிர்க் கேதையா நன்மையே - மனிதன்
கருவத்தி னோடுதான் ககனவெளியினைக்
கணக்கிட் டுலாவரும் நாளிலே - இங்கே
பிணக்குவியல் காண்டல் ஏனையா

*மாணவர் அறிவில் வல்லவ ராகி*
*மாநிலத்தை யெல்லாம் வாழ்விப்பார் - அந்த*
*மணிகளைக் கொன்றென்ன காண்பீரோ - என்ன*
*ஆணவமோ என்ன அறியாமையோ இந்த*
*அவலக் கொடுமையைச் செய்ததால் - கண்ட*
*ஆதாயம் உலகுக் கென்னையா*
*உங்களின் கொள்கைதான் உலகத்திலே யெந்த*
*உயிர்க்குலமும் இல்லா தழித்தலா - அன்றி*
*உலகையே அழித்தல்நும் கொள்கையா - நல்ல*
*திங்களும் கதிரும் திறன்கொண்ட இயற்கையும்*
*திருநிறையச் செய்த ஆண்டவன் - உங்கள்*
*இருள்மனத்தை மன்னித் தருள்வரோ*




தமிழன்பன் **ப. முத்துசாமி எம்.ஏ.,எம்.எட்.,**
பணி நிறைவு மேல்நிலைத் தலைமை ஆசிரியர்,
சிவியாம் பாளையம், முத்துகாபட்டி வழி 637 405
நாமக்கல் வட்டம் மாவட்டம்.
அலைபேசி : **9486154514.**

# "தமிழ் நாடா - திருட்டுக்காடா? 73

அமிழ்தினும் இனிய தமிழ்நாடா - இது
தில்லு முல்லு நாடா?
தமிழ்நாடா - இது
தாழ்ந்த தரங்கெட்ட 'திவால்' நாடா?
தமிழ்நாடா - இது
டாஸ்மார்க் காடா?
தமிழ்நாடா - இது
கெட்டாள், முட்டாள் காடா?
தமிழ்நாடா - இது
இலஞ்ச, ஊழல் காடா?
தமிழ்நாடா - இது
மோதல், சாதல் காடா?
தமிழ்நாடா - இது
கொலைகள், தற்கொலைகள் காடா?
தமிழ்நாடா - இது
தீயவர்கள், திருடர்கள் காடா?
தமிழ்நாடா - இது
தன்னல தந்திரவாதிகள் காடா?
தமிழ்நாடா - இது
எங்கும் மடக்கோயில் காடா?
தண்ணீர்குடம் காலியாய் கிடக்கணுமா? - வெக்கமின்றி
பால்குடம் காலிகளால் எடுக்கணுமா?
பள்ளிக்கூடத்தை மூடணுமா? - பக்கத்தில்
மதுக் கூடம் திறக்கணுமா?
தலைகளை மொட்டை போடணுமா? தறுதலைகளே
தமிழகத்தை மூட்டை கட்டணுமா?
கொள்ளையிலே எல்லாக் கட்சிகளும் கூட்டு -

*கொள்கையிலே நல்லவர்களாய் கூத்து!*
*ஏழைக்கு வாய்ப்பூட்டுச் சட்டந்தான் பாய்கிறது -*
*வேலை வாய்ப்பூட்டுஞ் சட்டம் எங்கோ மாய்கிறது!*
*நீதிமன்றமெல்லாம் -*
*நிதிக்காக மன்றாடி அநீதி மன்றமாய் போச்சு!*
*சனநாயகத்தை வீழ்த்தி*
*பணநாயகம் சட்டமன்றமாய் போச்சு!*
*குடியரசு ஆளவில்லை - இங்கு*
*'குடி' அரசும், குடி அரசியலுந்தான் ஆள்கிறது!*
*அராஜகந்தான் அரசியலா?*
*அராஜகந்தான் அரசாங்கமா?*
*கட்சி அரசியலா? கச்சிப் போன அரசியலா?*
*தீயவர்களே தீய்ந்து போங்கள்!*
*தம்மை இழந்தான் தமிழன்!*
*பொதுநீதிப் பகுப் பாய்வால் பண்படுத்துவோம்!*
*பொது நீதி மக்கள் கல்வியுடமை நிர்வாகம் அமைப்போம் -*
*பொன்னுலகம் விரைவில் படைப்போம்!....*




**எஸ். கர்ணன்** (கருணை வசந்தன்),
4/1628 சுவாமி டவர்ஸ்,
குறிஞ்சி தெரு, தாசில்தார் நகர்,
வண்டியூர் மெயின்ரோடு, அண்ணாநகர்,
மதுரை - 20.
செல் : **9976478299**

# வந்துவிடு... ஜீவா

74

ஜீவா என்றொரு பெயரறியா - நல்ல
சிந்தனை என்று எதுவுமறியார்
தன்னிகரில்லா தலைவனாக - சமூக
நல்லவைச் செய்த தொண்டனாக
மாக்களாக இருந்த மக்களை - சிறந்த
மனிதர்களாக மாற்றிய மகானவர்
வளைந்த கொடுங்கூர் வாளினவர் - என்றும்
வளையாதப் பெரும்புகழை வளைத்தவர்
வறுமை கொண்டு ஓடியவரை - பெரும்
வலைகள் கொண்டு தேடியவர்
கற்றார் மதிக்கும் பேச்சாற்றல் - இதனைப்
பெற்றார் இறப்பில்லா மூச்சாற்றல்
பொல்லாரில் நல்லாராய் இருந்தவர் - நம்
உழுதொழில் நெசவுக்கும் சிறந்தவர்
ஓயாமல் உழைப்பதில் வல்லவர் - கெடும்
வறுமைக்கும் ஓய்வை அளித்தவர்
பகைவரின் பகையை அழித்தவர் - தம்
பெருமையின் மிகையை எரித்தவர்
பெருமக்கள் மனதில் நிலைத்தவர் - நம்
சிறுமக்கள் வறுமையைத் துடைத்தவர்
இறப்பைக் கண்டு அஞ்சாதவர் - இவர்
பிறப்பின் நெறியை மிஞ்சாதவர்
தமிழ்ப் பண்பாட்டில் பொதுவுடைமை - இது
தரணியெங்கும் அவர் சிறப்புடமை

*மகனாவர் ஜீவாவின் கருத்துடமை - அதனைச்*

*சாகாமல் காப்பது நம்கடமை*

*பழந்தமிழர் பண்பாட்டை காவியமென்றார் - பெரும்*

*பாரதத் தத்துவத்தை ஓவியமென்றார்*

*தமிழினிமை பேசுமொரு ஜீவானந்தம் - அது*

*தரணியெங்கும் வீசுமொரு பரமானந்தம்*

*இம்மனிதன் முப்பொழுதும் ஜீவானந்தம் - அது*

*இசையாதவர் எப்பொழுதும் பொய்ப்பொருள்தான்*

*நின்புகழ் உயரவேண்டும் ஜீவா - மீண்டும்*

*எங்களோடு வாழவேண்டும் வா வா!*




இவண்,

**த. ராஜா, M.A.**

செயற்குழு உறுப்பினர் - கன்னியாகுமரி
மாவட்ட தமிழ்நல எழுத்தாளர் சங்கம்,
நாகர்கோவில்.

# "சமுத்திரத்தை இழந்த தேசம்

- சோதிக்க வந்த இறைவன் - எங்கே.... "பா" எழுதிக்காட்டு
என்றான்
வானில் பறந்தாடும் பறவைகளையும் - தாமரை
இலைநீரின் தத்தளிப்பையும் -
விழியான் - காட்டினான் கவிஞன் - எங்கே.. உன் அழகு
தமிழைக் காட்டு காண்போம்,
என்றான் கடவுள் - அதோ... ஆரவாரமாய் ஓடுகிறதே!
ஜீவநதி அதை கேள் ஓசை
கூறும் முத்தமிழாய் உள்ளம் வருட, நீ கவிஞனா? எமக்கு
சந்தேகம், அதைப்பார்,
இதைக் கேள் என்கிறயே! - எங்கே... உன் கடவுளைக்
காட்டு என்றான்
அதோ... கொட்டிக்கிடக்கிறதே! வர்ணமணலாய் - எம்
தாயவள் நடந்த தடயம்
பகுத்தறிந்து பிரபஞ்சத்தை பிரிந்து மேய்ந்த எம் செந்தூர்
- என்றான் கவிஞன்

- கடவுள் பரிசாகத் தந்தான் மக்காள் - பொதிகை எனும்
நம் பூம்பாளத்தையும் -
புரண்டு புரண்டு பாராயணம் பாடும் - எம் முக்கடலையும்
- இந்திய முகவரியாய்
பண்பாடு கலாச்சார தோரணவாசலையும் - அதோ தெரிகிறதா?
கல்லணை என்ற மனித நேயவாசலையும்

- கடலில் விளையாடி, களைப்பாற பரவர்கள் கானம்பாடி,
வல்லமே வீடாகி,
இவர்கள் வாழ்க்கையே கடலாகி, சொந்தபந்தத்துடன்
நிலாவுடன் கடல்சோறு உண்டு
திரவியமாய் விளைந்தாடும் கடல் செல்வங்களை -
சிரமாக தான் காத்து
தமிழ் முழங்கி - சமுத்திர தமிழ் சங்கம் கண்டு, வந்தோர்கள்
வாழ்த்துப்பாடி
சரித்திரம் புரண்டதேயிங்கு - சாக்கடலாகி, சமுத்திரம்
நிறம்மாறி,

- *தமிழின் மரபறியா மாந்தர்களே! யாவிற்கும் தீர்வுக் கண்ட திரவிய தமிழினம்*
  *விபிசனர்க்காக - கதிர்காமம் - விரட்டியவனுக்காக தானமாக அஞ்சுகிராமம் -*
  *மனித இனம் அல்லவா? மனிதனை - மனிதனாக வாழவைக்க (களப்பிரர்களை) கல்லணை*
  *இன்றும் வர்ணமணல் மாறலையே! நிறம், போடும் வாய்க்கருசி மாறலையே நிறம்!*
  *மனித நேயம் இன்னும் மாறாத தமிழினம்,*
  *கவிதை மாறாமல் - கருத்துகளும் மாறலாம் - இலக்கணம் மாறினால் - இலக்கியம் மாறிவிடும்*
  *நிம்மதி இல்லாத தேசம் மாகி விடும், (ஆம் குறள் புதிது)*

- *கீதையை கிழித்தெறிந்து - புத்தனின் போதனையை தகர்த்தெறிந்து*
  *மானுடதர்மத்தை மறந்து, இறையோனின் வல்லமை வார்த்தைகளை வசைபாடி*
  *வந்தேறி நாதாரிக் கூட்டத்திற்கு தாயும் அறியா - தந்தையும் அறியாத*
  *மொழியும் அறியா - கள்ளியம்காட்டு நீலிகளுக்காக -*
  *சாதனை என்று - சகுனிகளுக்கு தமிழ்தான் பகடை காயா?*
  *சங்கம் முழங்கிய சோழ சமுத்திரத்தில் இரவெண தர்பார்ரா?*

- *மறபறியா மகுடம் சூட்டி - பரவர்களுக்கு தரும் மானியமா?*
  *ஒப்பாரிவைத்து ஓலமிடுவது - தூரத்து இடி முழக்கமா?*
  *இதுயென்ன பாணிபட்போரா? - இல்லை தேசியம் வாழ பாகுபலியா?*
  *போகுமிடம் அறியாது - புகழிடமும் அறியாது மீனவன் தவிக்க,*
  *அவன் என்ன கடல்வாழ் உயிரினமா? - தீர்வுகாண் -*
  *இது கவிதையல்ல கட்டளை*

பொற்காலச் சிற்பி,
நற்றமிழ் கவிஞர் அப்சரஸ் **ஆ. இராஜேந்திரன்,**
குலகால்வீதி,
பள்ளத்தூர் அஞ்சல் - 630 107.



# காலம் போற்றும் கவிஞன்



காலம் போற்றும் கவிஞன்
வாழும்போதே வரலாறானவன்,
பாரதிக்குப் பின் வரலாற்றின்
நின்று வாழ்பவன் கண்ணதாசன்

ஒன்பது வயதில் கலைமகள்
குடிபுகுந்த கவியரசன்
தமிழின் அனைத்து வகையிலும்
படைப்புகளை வழங்கித் தடம் பதித்தவன்

இவன் தொடாத உச்சங்கள் இல்லை
படாத தொல்லைகள் இல்லை
எப்படி வாழக்கூடாது என்றும்
வாழ்ந்து காட்டிய நற்றமிழன்

நொடியிலே சொக்க வைக்கும்
சந்தங்களோடு சங்கதிகளை
சதிராட வைத்த வித்தகன்

குற்றால அருவியாக வந்து
விழும் சொற் கோவைகள்
யாவும் நற்றமிழ் முத்துக்கள்

தமிழன் இருக்கும் இடமெல்லாம்
அன்பு மழை பொழியட்டும்,
ஊரும் இல்லை, பேரும் இல்லை
உலகம் என் தாயகம் என முழங்கியவன்

குன்றென நிற்றல் வேண்டும்
குடை எனப் பணிதல் வேண்டும்
நன்றென நினைப்ப தெல்லாம்
நடத்திடும் துணிவுவேண்டும்
என்று உரைத்த தலைமகனை
நாளும் வணங்கிடல் நலம் தரும்



**க. ரவீந்திரன்,**
71/2, மேற்கு விநாயகர் கோவில் வீதி,
உடையாம்பாளையம் (அஞ்), சௌரிபாளையம்,
கோயமுத்தூர் - 641 028.
செல் : 9443782573

# 77 தெய்வம் நீ யென்றுணர்

தெய்வம் நீ என்றுணர் என்று சொன்னார் பாரதியார்!
தெய்வம் தானானான் தன்னையுணர்ந்த மானிடனே!
உய்த்துணர் ஆற்றலினால் தானியங்கி நுண்புலத்தின்!
மெய்யறிவை தானடைந்து தெய்வம்தான் யாவுமென்றான்!
வையமதின் வாழும் உயிர்க்கியக்கம் அத்தெய்வம்!
தெய்வமது நீயாய் நானாகி யெங்கும் தானிறைந்த!
தெய்வம் மனிதவுடம் புள்ளுறை ஆன்மாவே!
தெய்வமது உண்மையறிவு அன்பவற்றின் உள்ளீடு!
தெய்வம் மனித இதயமதில் தங்குற்ற!
மெய்மை ரகசியத்தை வெட்ட வெளியாககாட்ட!
தொய்வில் கடமையாகக் கொண்டிறையைக் காட்டிடவே!
தெய்வ மதன் பன்முக சூக்குமத்தை ஞானியர்!
தெய்வீகத்தத்துவத்தை விண்டுரைத்தார் நூல்பலவில்!
தெய்வம்தான் அக்கடவுள் மற்றியற்கை என்பதுண்மை!
தெய்வமே அண்டம் அகிலம் அணுக்களதே!
தெய்வநிலை காலமென்ற வட்டத்தடங்கலதே!
தெய்வம் தனக்குப் பரிமாணம் தானதுண்டு!
தொய்வற்ற அப்பரி மாணம்தே மனிதனாவான்!
தெய்வத்தின் நீங்குற்று தெய்வத்தை பேதமாக்கி!
தெய்வம் புறத்துற்றயாதோ பொருளென்று!
தெய்வத்தைத்தேடி கடும்தவங்கள் தாமியற்றி!
தெய்வம் இத்தைகத்து என்றநிலை தானறியா!
தெய்வம் அருபபே ராதார சக்தியாகும்!
மெய்யதுவே நீரதற்கு எச்சுவையும் தானில்!
மெய்யதுவே மண்மற்று பொன்னதற்குற்றுருவில்!
மெய்யதுவே நீரதற்கு உண்டு சுவை மண்ணியல்பின்!
மெய்யதுவே பொன்னா பரணமான கைவினையால்!
தெய்வத்தின் ரூபம் விகாரத்தின் வேறுபாடு!
தெய்வத்தின் உற்பவித்த பல்கோடி தன்னுருவில்!
வாய்த்துற்ற ஆற்றல்தனில் வேறுபட்டுத்தன்னை!
தொய்வில் அறிவியக்கம் பல்தரத்தும் தானிணைந்து!
செய்யதரம் தானெய்தி அவ்வறி நிலையாகி!
மெய்யறிவின் தன்னில் பல்துறை கொண்டதெய்வம்!
மெய்வடிவ ஈசனதன் சாயல் மனிதனாவான்!



**கே. கோபாலரத்தினம்,**
நெ.90, மணிமுத்தாறு தெரு, சிங்காரம் அவென்யூ,
கூத்தப்பாக்கம், கடலூர் - 607 002.
கைபேசி : **9381875400**

78

# ஓய்வுக்காலம்

58 வயதில் அனுபவம் மிகுந்து மிளிரும்
அன்பறிவு ஆற்றர் செயல்வீச்சு - தெய்வீகத்தில்
மிதக்கும் மனம் அமைதியாக மாறும்
கற்றடங்கள் தோன்றும் - அப்பொழுதுதான்

அரசு பாராட்டி பரிசளித்து ஓய்வு என்ற
விருது வழங்கி விருந்தோம்பலோடு அனுப்பி வைக்கும்
சிலர் பறவையாகி வெளியுலக பயணம் செய்வார்
சிலர் ஓய்வினால் உள்முகப் பயணம் செய்வார்

ஆசை பேராசை அழுக்காறு அனுபவம்
போட்டி பொறாமை நாணயமின்மை
நம்பிக்கைத் துரோகம் வஞ்சகம் சூழ்ச்சி சதி
பொய் புரட்டு துவேஷமெல்லாம் செய்த

அத்தனையும் பேய்போல் உங்களை விரட்டும்
அநீதிக்காக துஷ்பிரயோகத்தால் எத்தனை பேரை
துன்புறுத்தீனர்களோ? சூழ்நிலை கைதாகி
தர்மத்தை அதர்மமாக மாற்றினீர்களோ

நீதியைக் குழித் தோண்டி புதைத்தீர்களோ
அக்கரமாக உங்க அகங்கார நெய்யை
ஊற்றினீர்களோ சகுனிவலை பின்னி
சந்தோஷப்பட்டீர்களோ? மனசாட்சியை விற்று

மண்டியிட்டீர்களோ? இவையெல்லாம்
தவவாழ்க்கை செப்பும் தத்துவங்கள்.
இன்று ஓய்வு உங்கள் அதிகாரமெல்லாம்
உங்கள் மருமகளிடம் மௌனமாகிவிட்டது

சத்தியம் நீதி தவமாகப் பணிபுரிந்திருந்ததாம்
சொர்க்கமும் இதுதான். அவமாகப்
பணிப்புரிந்திருந்தால் நரகமும் இதுதான்
இதுதான் உண்மை உங்களுக்குக் கற்றுதரும்
உன்னத பாடம்.



**வெ. முத்துலிங்கம்** (ஐந்திரன்)
D5. V.C. கிராண்ட் கேன்யன்,
70, கடிரோடு, ஜவஹர்நகர்,
சென்னை - 600 083.
Cell : **9445421965**

# 79 மனச்சாட்சி

*எழுத எண்ணினால் எழுதலாம்!*
*எத்தலைப்புக் கொடுத்தாலும் எழுதலாம்!*
*கற்பனைக் கலந்த கருத்து நிறைந்த*
*கவிதையாக எழுதலாம்!*
*எழுத்துப் பிழையின்றி கருத்துப்பிழையின்றி*
*எழிலாகத் தெளிவாக எழுதலாம்!*

*எழுதுகோலும் ஏடுமிருந்தால்*
*எண்ணத்திலெழுந்ததை எழுதலாம்!*
*எழுதிய கவிதை நன்றாயிருந்தால்*
*எவரும் படித்துப் பரவசந்தானடையலாம்!*
*எழுதி எழுதிப் பழக்கமானால்*
*எதையும் திருத்தமாய் எழுதலாம்!*

*மனிதருக்கு வேண்டும் மனித நேயம்!*
*மனமொத்து வாழ்ந்தாலும் வாழ்வே மாயம்!*
*வன்முறையாளர் செய்வார் அதிக அநியாயம்!*
*நன்முறையாக எடுத்துரைக்கணும் ஞாயம்!*
*சிறியோரென்றாலும் பெரியோரென்றாலும்*
*சிந்தித்துத் தினமும் செயலாற்ற வேண்டும்!*

*நீதியை உரைப்பது மெய்யான சாட்சி!*
*நேர்மையைக் குழைப்பது பொய்யான சாட்சி!*
*நினைவிலிருக்கணும் நிலையான நிகழ்ச்சி!*
*மனையில் சிறக்கணும் நிறைவான மகிழ்ச்சி!*
*காட்சி மாறினாலும் சாட்சி மாறாது!*
*மாறாத அந்தச் சாட்சி மனசாட்சி!*



கவிஞர். **சி. மாரியப்பன்,**
அகவை முதிர்ந்த தமிழறிஞர்,
6/214, புதுமந்தாடா, கேத்தி அஞ்சல் - 643 215,
குன்னூர் - வட்டம், நீலகிரி - மாவட்டம்.
அ.பே.எ. : **9524245231**

# மழை



இரண்டு நீரக அணுக்கூறும்
இனிதே ஒருதீயக அணுக்கூறும்
இணைந்து உருவாவது நீராம்
இதை அறிந்து கொள்வோமே!

நீரின்றி அமையாது உலகு
நெஞ்சத்தில் பதிந்த உயர்மொழியாம்
பாரெங்கும் நீரைத்தருவது மழையே
பயன்படுத்தி மகிழ்வோம் நாமே!

காலா காலத்தில் மழை பொழிந்தால்
கழனியெங்கும் பயிர் செழித்திடுமே
உழவுத் தொழில் கொழுத்திடுமே
உற்பத்தி பன்மடங்கு உயர்ந்திடுமே!

பருவம் தவிராது மழைபெய்தால்
பல்கி தொழில்கள் வளர்ந்திடுமே
சீராக மக்களுக்கு குடிநீர்
சிறப்பாய் என்றும் கிடைத்திடுமே!

பலதுளி நீரே பெருவெள்ளம்
பைந்தமிழ்ப் பழமொழி இதுவாகும்
ஆற்றில் பாய்ந்தோடும் பெருவெள்ளம்
அதைப்பார்த்து ஆனந்தத்தில் மனம்துள்ளும்!

துளித் துளி மழைத்துளி
தொல்லுலகில் பெய்யும் உயர்த்துளி
களி களி மழைகண்டு
காலத்தே பெய்தால் பலன்உண்டு!

மழை போற்றுதும் மழை போற்றுதும்
மாவுலகில் உயிரினங்கள் வாழ்வதற்கே
உழைக்கும் மனிதர்க்கு மழை உயிர்நாடி
உலகெங்கும் பயன்கள் பலகோடி!

குளிரப் பெய்யும் மழைநீரை
குணமாய் நிலத்தடியில் சேமித்தால்
துளிரும் நன்மைகள் பலபலவாம்
தொல்லைகள் நாட்டில் தீர்ந்திடுமே!

**உ. இராமநாதன்,** **M.Sc. (Ag.)**
முன்னாள் இணைப் பேராசிரியர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
2-மேட்டுத்தெரு, வடிவீஸ்வரம்,
நாகர்கோவில் - 629 002, குமரிமாவட்டம்.
கைபேசி : **9443693102**



# அன்னையும் - தந்தையும்

**81**

அன்னை - தந்தை அரவணைப்பில்
எத்தனையோ படைப்புகளை
சின்னவன் நான் எழுதலானேன்
சிந்தையில் வந்ததெல்லாம்!

காயாக இருந்த என்னை
கனியாக பழுக்க வைத்த
தாயை நான் மறப்பேனோ
தந்தையைத்தான் வெறுப்பேனோ!

உள்ளத்தில் தோன்றி உள்ள
உயர்வான பாடல்களை
துள்ளி எழும் தமிழாலே
தெளிவாக எழுதலானேன்!

வற்றாத கவி ஊற்று
வளமாக என்னுள்ளில்
பற்றோடு பற்றியதால்
பைந்தமிழ் வாழ்த்தியது!

கட்டுரைகள் கவிதைகளும்
கருத்தாழம் மிக்கதாக
ஏடுகளில் எழுதலானேன்
என் பெற்றோர் வாழ்த்தினார்கள்!

பழுத்த பழம் வள்ளுவரின்
பாக்களான கருத்துக்களை
உள்ளத்தில் தாங்கிய நான்
உரிய நேரம் எழுதலானேன்!

புனைப் பெயர் நக்கீரனாக
புதுப்பெயர் சூட்டிச் சென்ற
தமையனான அண்ணாவை நான்
தலை குனிந்து வணங்குகின்றேன்!



**சி. குமாரசாமி** (நக்கீரன்)
மேட்டுத்தெரு, வடிவீஸ்வரம்,
நாகர்கோவில்-2.

# 82 பெண்ணே நீயொரு புனித நதி

குழந்தையாய் நாமிருந்தால் கவலையே இல்லை
குமரியாய் மாறிப்போனால் கவலையே தொல்லை
பெண்ணின்றி உலகில் எவருமே இல்லை
பெண்மையே இவ்வாழ்வில் இன்பத்தின் எல்லை!

கருவினில் மழலையை சுமந்திடும் தாயாக
தாயின் மடியினில் தவழ்ந்திடும் சேயாக
பிறந்த வீட்டிற்குப் பெருமையைத் தந்திடும் குலமகளாக
புகுந்த வீட்டிற்குப் புகழைத் தந்திடும் மருமகளாக!

இன்பத்திலும் துன்பத்திலும் பங்குபெறும் தோழியாக
காதலன் மனதை மகிழ்விக்கும் காதலியாக
கணவனின் மார்பிலே சாய்ந்திடும் மனைவியாக
குடும்பத்தைக் காத்திடும் குடும்பத் தலைவியாக!

பிரம்மனின் நாவினை ஆளுகின்ற கலைமகளாக
விஷ்ணுவின் இதயத்தில் குடியிருக்கும் அலைமகளாக
சிவனின் பாதியாய் உருவெடுத்த மலைமகளாக
அனைவரையும் ஆட்டுவிக்கும் மகாசக்தியாக!

காஞ்சி காமாட்சியாக மதுரை மீனாட்சியாக
காசி விசாலாட்சியாக கன்னியா குமரியாக
காசியில் தவழ்ந்திடும் புனித கங்கையாக
குடகுமலையில் தோன்றிடும் தலைக் காவிரியாக!

ஓடிவரும் கோதாவரியாக பொன்னி நதியாக
தென்பெண்ணை வடபெண்ணை ஆறாக தாயாக
தாங்கிவரும் பெண்ணே நீயொரு புனிதநதி
உயிர்களின் பாவத்தைப் போக்கிடும் புண்ணியநதி!

- கவிப்போராளி தேவனூர் **ஆ.ச. செல்வராசு**
த/பெ திரு. மா. சண்முகம் ஆச்சாரி,
2/120, காமராசர் தெரு, தி. தேவனூர் & அஞ்சல்,
அரகண்டநல்லூர் (வழி), திருக்கோவலூர் - 605 752.
விழுப்புரம் மாவட்டம்.
அலைபேசி : **8883350592**



# புகழெனும் சத்தம் 83

காற்றும் மழையும் கவின்மிகு இயற்கை!
கணிதம் அறிவியல் காண்போம் செயற்கை!
போற்றும் புதுநூல் படைப்பதே வாழ்வு!
புவியில் அறமது பிழையெனில் தாழ்வு!

பெண்மை ஆண்மை புவியின் புனைவு!
பிழையின்றி வாழ்வதே பெருமை நினைவு!
உண்மை வெல்வது உலகின் மாட்சி!
ஊக்கம் கொள்வதே அறிவின் ஆட்சி!

அடுத்தவர் விருப்பமே அவரவர் உரிமை!
அனுமதி இல்லாமல் அமைப்பது நரிமை!
கெடுத்துமே வாழ்பவர் கொடுங்கோல் இழியர்!
கொள்கையில் நல்லதைக் கொண்டவர் விழியர்!

மண்ணில் மரங்கள் வளர்ப்பது தொண்டு!
மறையா வாழ்வே வாழ்ந்தவர்ப் பண்பு!
விண்ணில் கதிரவன் விளக்கமே படிப்பு!
விளங்கக் காண்பதே வேண்டும் துடிப்பு!

உள்ளமாம் உணர்வே உயரிய மனிதம்!
உயரிய அறமே உண்மைப் புனிதம்!
அள்ளும் பொதுமை அழகே இனிமை!
ஆக வேண்டாம் எவரும் தனிமை!

எவரின் உடம்பிலும் சிவப்பே இரத்தம்!
எவர்க்கும் வேண்டும் இதயத்தில் சுத்தம்!
புவியில் வேண்டும் புன்னகை நித்தம்!
பூக்க வேண்டும் புகழெனும் சத்தம்!




கவிமாமணி. **தகடூர்த் தமிழ்க்கதிர்,**
3/212-ஆ.மலர் இல்லம், கௌரன் தெரு,
ஆசாத் நகர், கிருட்டிணகிரி - 635 002,
கிருட்டிணகிரி மாவட்டம்.
பேசி : **978737909**

**84**

# 60-ஆம் ஆண்டு கவிமணி நினைவு மலர்

செஞ்சொல் கவிதை செந்தமிழ் நாட்டில்
சீர்மிகு தேவி செப்பிய அமிழ்தாம்
நெஞ்சை அள்ளும் அருள்நெறி புத்தரை
நேசிக்கும் பாங்கை நிதமும் கேட்போம்

கொஞ்சும் மழலை குழந்தைப் பாடல்
குவலயம் விரும்பும் அரும்பைப் படிப்போம்
விஞ்சும் அமுதாய் விலங்கினம் பேசும்
விவேகத் தமிழ்க்கவி விளக்கிடும் அருளாம்

பிஞ்சு மனமும் பிழையின்றி கற்றிட
பைந்தமிழ் கருத்தினைப் பகர்ந்திடும் நெறியாம்
தேவி கீர்த்தனை தெய்வ சிந்தனை
தினந்தினம் பாடிட தொன்மை காட்டும்

ஆதியும் அந்தமும் அருந்தமிழ் உமர்கய்யாம்
அருளும் மொழியுரை அழகுறக் கற்போம்
நகைச்சுவை நிகழ்வினை நவின்றிடும் பாங்கும்
நங்கையர் துயரினை நயந்திடும் கூற்றும்

நவையிலாப் பாணியில் நாஞ்சில் மணத்தை
நாடகமாய் மருமக்கள் வழிமான்மியம் உணர்த்தும்
மலரும் மாலையும் அருந்தமிழ் கருவூலம்
மனந்தனில் பொலிவுற நாளும் சுவைப்போம்

கல்வெட் டாய்வும் காவியம் பேசிடும்
கவிமணி உரைகளில் கனிமொழி பொழியும்
சொல்லுக்குச் சொல்நல் சுவையூட்டும் பனுவல்
சொற்றமிழ் நற்றமிழாய் சுவர்க்கம் காண்போம்

பாரதிப் பாட்டை பாடிச் சுவைத்து
பாயிரமாய் ஆய்வுரை பாடியபா பயிலுவோம்
பிறமொழி சாத்திரம் தமிழ்மொழி பெயர்த்தவேளை
பிறழா நடைதனைக் கண்டு ரசிப்போம்

*இறவா இதிகாசம் இயன்றளவு இசைத்தமை*
*இம்மண்ணின் பண்பாம் செம்புலமை புரிவோம்*
*தமிழ்த்தாய் அலங்கரித்த தமிழ்ப்புலவர் நல்லோர்*
*தாள்பணிந்து நவின்ற நன்றிதனைத் தெரிந்தோம்*

*அமிழ்தினும் இனிய ஆருயிர் கொடுத்தோர்*
*அருஞ்செயல் போற்றிய இரங்கற்பா படித்தோம்*
*பொழுதெலாம் உழைத்த உத்தமர் வாழ்த்துப்பா*
*போற்றிப் புகழ்ந்திடும் சரமகவி உணர்ந்தோம்*

*இரசிகர்நின் நண்பனாம் இராசா அணுக்கராம்*
*இன்தமிழ் நாட்டோர்க்கு என்றென்றும் தோழனாம்*
*செந்தமிழ் நூலிடத்து பித்தனாய் வாழ்ந்தாராம்*
*சந்தப்பா இசைப்பதில் கைதேர்ந்த வித்தகராம்*

*நித்தமும் சிந்தையில் ஊறிடும் தமிழ்க்கவி*
*நிலையான புலவராய் நீள்நிலம் நிற்கின்றார்*
*பந்தமும் பற்றும் பைந்தமிழ் சொத்தாகப்*
*பாவித்தக்குணக்குன்றாம் என்றுமே நிற்கின்றார்*

*முற்காலப் புலவருக்கும் முறையான நினைவுண்டு*
*பிற்காலம் வந்தோர்க்கும் பொன்னடி போற்றலுண்டு*
*தற்காலத் தமிழரசு தாமிரத்தால் சிலைவடித்து*
*தரணியோர் கண்டிட சுசீந்திரம் பதிதனில்*
*சிற்பமாய் கவிமணியை நின்றிடச் செய்தமை*
*சிந்தை மகிழ்ந்து சிரம்தாழ்த்தி வணங்குவோம்!*


புலவர். **மு. சிவதாணு** எம்.ஏ., பி.எட்.
தமிழாசிரியர் (ஓய்வு)
14/105 அம்மன் கோவில் தெரு,
தேரூர் - 629 704.
பொதுச் செயலாளர்,
கவிமணி நற்பணி மன்றம், தேரூர்.
Cell : **91-8056843040**




நாஞ்சில் ஆப்செட், நாகர்கோவில். ✆ : 04652 - 233853